
கல்கி



KALKI 25.2.1968 40காசு

மபத்லால் க்ரூப்

பிரிண்டெட் பாப்ளின்கள்

அடக்கமான பிரிண்டுகள்.
ஆடம்பரமான பிரிண்டுகள்.
பணிவு, பகட்டு—இரண்டையும்
படைப்பது மபத்லால்
'டெபிலேஸ்டு', 'மஃபினேஸ்டு',
மற்றும் 'டெரீன்' /காட்டன்
பாப்ளின்கள்.
வாரீர், பாரீர், தேர்ந்தெடுப்பீர்!

நியு ஷாரக். (ஷாரக்)
அஹமதாபாத். நியு ஷாரக்.
நடியாத். ஸ்டாண்டர்ட்,
பம்பாய். ஸ்டாண்டர்ட்,
(நியு சைனா) பம்பாய்.
ஸ்டாண்டர்ட், தேவாஸ்.
ஸாஸூன், பம்பாய்
ஸாஸூன், (நியு யூனியன்)
பம்பாய். ஸூரத் காட்டன்,
ஸூரத், மபத்லால் பைன்,
கல்யாணி. மிஹிர்
டெக்டைல்ஸ், அகமதாபாத்.

கொண்டலின் தென்றலையும் மிஞ்சிவிடும் மென்மையாம்
சோலையாம் பூக்களிலும் மேலான இன்பமாம்.



M. 259 TM



கல்கி

பொருளடக்கம்

பிலவங்க மாசி 13 - பிப்ரவரி 25

கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

படவிளக்கம் 16ம் பக்கம் பார்க்க.



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 30

மொழிப் பிரச்னை: மேலும் சில கோணங்கள்

ஆங்கிலத்தை அகற்றி விட்டுப் பிரதேச மொழிகளில் உயர் படிப்புப் போதனை தரவேண்டும் என்கிற பிரச்னை துரதிருஷ்ட வசமாக ஒரு 'வகுப்புப் போராகி'விடக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வகுப்புக்களில் ஒரு சாரார் ஸயன்ஸிலும் நுட்பத் தொழிலியலிலும் அறிவு பெற்றவர்கள். இவர்களை எதிர்க்கும் தரப்பினருக்கு இத்தகைய விஷய ஞானமோ, ஆங்கில அறிவோ இல்லை. ஆயினும் ஆட்சியில் இருப்பவர்கள் இத்தரப்பினரின் ஆதரவை வேண்டுவதால் அவர்களுக்கு ஓர் அரசியல் முக்கியத்துவம் உண்டாகியிருக்கிறது.

ஃ ஃ ஃ

சமீபத்தில் தமிழக கல்வி மந்திரியைச் சந்தித்து நடத்திய கூட்டத்தில் உப அத்யட்சகர்களும் பேராசிரியர்களும் சர்க்காரின் கொள்கைகளுக்கு ஆதரவாக முடிவெடுத்திருப்பது வருந்தத் தக்கது. 'இக்கருத்து ஆசிரியர் குழாத்திடை பரவலாக உள்ள கருத்தைப் பிரதிபலிக்கவில்லை' என்று ஒரு சர்வகலாசாலைப் பேராசிரியர் எழுதியுள்ளார்.

'இப்போதே நாம் ஆராய்ச்சியில் பின்தங்கியிருக்கிறோம். மேல் நாடுகளுக்குச் சமமாக நாம் முன்னேறுவதற்கு ஆங்கிலமே துணை செய்யும். இச்சமயத்தில் பிரதேச மொழிகளை அமர்த்துவதால் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கும் ஹானி ஏற்படும்' என முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் வாய்ந்த பேராசிரியர் எழுதியிருக்கிறார்.

இவர் சொல்லாத இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். ஸயன்ஸ் முன்னேற்றம் குன்றுவதோடு மாணவர்களும் உத்தியோகம் பார்ப்பவர்களும் தேசமெங்கும் சரளமாகச் செல்ல வொட்டாமலும் பிரதேச மொழிப் போதனை தடுக்கும். அகில இந்தியக் கல்வி ஐக்கியமும் பாதிக்கப்படும். தமிழக சர்க்கார் கண்மூடித்தனமாக இவ்விஷயத்தில் விரைந்து செல்கிறது என்பது பேராசிரியரின் கருத்து. ஆனால் அவ்வாறு கருதுவதற்கு இடமில்லாமல் இருக்கக்கூடும். எப்படியாயினும் மலைப் பாதையில் செல்பவர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்வது போல எச்சரிப்பது நன்மையே யாகும்.

'மொழிப் பிரச்னையை அரசியல் பிரச்னையாக்கிச் சமரசம் காணாமல் பகுத்தறிவுக்குப் பொருந்திய வகையில், நாட்டு நலனுக்கும் நிர்வாகத் திறனுக்கும், உயர் கல்விக்கும் உகந்த முறையில் தீர்க்க வேண்டும்' என்று காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் கூறுகிறது. பகுத்தறிவுப் பரிசீலனையில் ஆங்கிலத்தை ஹிந்தியால் அகற்றக் கூடாது என்ற முடிவு பிறந்தால், அதை நடைமுறையாக்கத் தயங்கக் கூடாது. இம்முடிவு ஏற்பட்ட பின்னும், அதற்கு அநுசரணையாகக் காரியத்தில் இறங்காமல் பிரச்னையைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தால் பகைமைகள் தளர்ச்சியுறாமல் பிகு நிலையிலேயே இருந்து கொண்டிருக்கும். உணர்ச்சி அடிப்படையில் ஆங்கிலம் வேண்டாம் என்கிற மனநிலையை நாம் உதறித் தள்ளிவிட்டு, ஆங்கிலத்தின் மதிப்பைச் சர்வகலாசாலை மாணவர்க்கு உணர்த்துவோமாயின் அனைவருக்கும் க்ஷேமம் ஏற்படும்.

காங்கிரஸ் ஆட்சியில் உள்ள ஆந்திரப் பிரதேசமும் ஆட்சி மொழித் திட்டத்திலுள்ள சிரமங்களை உணர்ந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஹிந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தவிர மற்றப் பகுதியிலுள்ள காங்கிரஸ்காரரும் கூட ஆட்சேபிக்கும் ஒரு திட்டம் நமக்குத் திருப்திகரமாகச் செயல்பட முடியாது என்பதை இச்சிக்கலான பிரச்னையில் சிந்தனை செலுத்தும் எவரும் வெளிப்படையாகக் காண முடியும். எதிர்ப்புத் தீர்மானங்களுக்கு இடம் கொடுக்கும்போதே அந்த எதிர்ப்புத் தீர்மானங்களுக்கு இசைவாகவும் இருப்பது போல் காண்கிறது ஆட்சி

மொழித் திட்டம். இதிலிருந்து அதிலுள்ள குழப்பம் புலனாகும். ஜவாஹர்லால் நேரு அவர்களின் வாக்குறுதியை நிறைவேற்றினால் ஏற்படும் விளைவுகளைக் குறித்து நாட்டில் ஹிந்தி பேசாதோர் நன்னம்பிக்கை கொண்டிருந்தனர். இந்த விளைவுகளை நினைத்தே ஹிந்தி உற்சாகிகள் பயம் கொண்டனர்.

மும்மொழித் திட்டத்தால் ஹிந்தி பேசாதோருக்கு ஏற்படும் அதிகப்படிச் சுமையை ஈடு கட்டுவதற்காக ஹிந்தி பேசுவோரின்மீது தென்னாட்டு மொழி ஒன்றை அவர்களுக்குப் பிரயோசனமின்றிச் சுமத்த வேண்டும் என்று கேட்பது நினைத்தும் பார்க்க வொண்ணாத முட்டாள்தனமாகும். இதனால் நம் பளுவுக்குப் பரிகாரம் ஏற்பட்டு விடாது. உத்தரப் பிரதேசத்திலும் பீகாரிலும் உள்ள மாணவர்கள் தமது மொழியையும் ஆங்கிலத்தையும் கற்பதோடு தமிழ் அல்லது தெலுங்கையும் பயில வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்வதால் தென்னாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்துவிட மாட்டார்கள். மும்மொழிச் சூத்திரம் என்பது பள்ளிகளுக்கான திட்டம். சர்க்கார் ஆபிஸ்களில் வேலை செய்பவருக்கு மட்டும் அல்ல இத்திட்டம்;- நாளடைவில் தேச மக்கள் அனைவரும் தழுவ வேண்டியது மும்மொழித் திட்டம் என்பதை நினைவுகொள்ள வேண்டும். பிற மொழிகளைக் கற்பது அதில் திறமையும், நாட்டமும் உள்ளவர்களுக்கு மட்டுமே நல்லது. அவர்கள் தேச ஐக்கியத்துக்குக் கேந்திர ஸ்தானமாக விளங்கலாம். ஆனால் வடக்கே உள்ள எல்லாப் பள்ளி மாணவ மாணவியர் மீதும் தமிழையோ, இதர தென் மொழியொன்றையோ திணிப்பது கொடூரம்.

காமகோடியின் கருணைமொழி

மகா சிவராத்திரி

ஒரே முழுமுதல் சக்தியே உலகைச் சிருஷ்டிக்கும் முறையில் பிரும்மா என்றும், உலகைப் பரிபாலனம் செய்யும் முறையில் விஷ்ணு என்றும் உலகை சம்ஹாரம் செய்து தன்னுள் அடக்கி வைத்துக் கொள்ளுதல் என்ற முறையில் சிவன் என்றும் நாம ரூபங்களை அடைகிறது.

ஆழ்ந்து யோசிப்போமானால் சம்ஹார மூர்த்திக்கே கருணை அதிகம். சிருஷ்டி செய்பவருக்குக் கருணை அதிகம் தேவையில்லை. ஏனெனில் நம்மைச் சிருஷ்டி செய்யாமலே இருந்திருந்தாலும் கூட அது பரம கருணையாக இருந்திருக்கும். பிறந்த பின் ஜீவாத்மாக்களைக் காப்பாற்ற வேண்டியது மகா விஷ்ணுவின் பொறுப்பு. அவரவர்களின் பாவ புண்ணியங்களுக்குத் தகுந்தாற்போல் சுக துக்கங்களை அவர் அளவிட்டுக் கொடுக்கிறார். 'ஆனால் பரமேசுவரனோ பாவி — புண்ணியம் செய்தவன், ஞானி — அஞ்ஞானி என்ற' பேதமில்லாமல் சம்ஹார காலத்தில் எல்லோருக்கும் ஓய்வு அளித்துத் தன்னிடம் அடக்கிக் கொள்ளுகிறான். கஷ்டம் நிவிருத்தியாகும்போதுதான் 'அப்பா' என்கிறோம். ஆகவேதான் பிரளய காலத்தில் உலகைத் தன்னுள் ஒடுக்கி, சகல ஜீவராசிகளுக்கும் ஓய்வு கொடுத்து, தாற்காலிகமாகவாவது துக்கங்களிலிருந்து விடுதலை தரும் கிருபா சமுத்தரத்தை, கருணை வள்ளலை, பரமேசுவரனை நம்மாழ்வார் 'முக்கண்ணப்பா' என்று பாடியிருக்கிறார்.



மறுபடியும் சிருஷ்டி ஏற்படும்போதும், ஞானிகள் பிறப்பு என்னும் பிரவாகத்தில் சிக்காமல், பரமேசுவரனின் சொரூபத்திலேயே இரண்டறக் கலந்து மோட்சம் பெற்று விடுகிறார்கள். மற்ற ஜீவாத்மாக்கள் மறுபடியும் சிருஷ்டி வலையில் சிக்கிக் கொண்டாலும், அதன் முன்பு சற்றாவது பரமேசுவரனுக்குள் ஓய்வு பெறுகின்றன. இவ்விதம் தாயுமானவர் அன்று கூறியதுபோல் அம்மை, அப்பனாக இருந்து, பாவிகளையும் சற்று அணைத்துக் கொண்டு அவர்களது இதய தாபத்தைப் போக்குகிறான் சிவபெருமான்.

அந்த ஈசனுடைய திருநாளே மகா சிவராத்திரி. உருவமற்ற முழுமுதற் கடவுள் பக்தர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி, அரூபத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் இடையே உள்ள ஜோதிர்லிங்கமாகக் காட்சி அளித்த நன்னாளே இந்த மகாசிவராத்திரி. இந்தப் புனிதமான தினம் பிரார்த்தனைக்கும் தியானத்துக்கும் சிறந்த நாள். அன்று நடுநிசியில் பரமசிவன் லிங்கோத்பவராகத் தோன்றுகிறார். இந்தத் திருநாளுக்குச் சரியாக 180 நாட்களுக்கு முன் தட்சிணாயனத்தில் அஷ்டமி நடுநிசியில் மகாவிஷ்ணு பூர்ணாவதாரமான கிருஷ்ணாவதாரம் செய்வது குறிப்பிடத் தக்கது.

நம்மைப் போஷித்து முடிவில் நம்மை ஆட்கொள்ளும் இந்தக் கருணாமூர்த்தியின் நினைவாக இந்நாள் முழுதும் உபவாசம் இருந்து நித்திரை இல்லாமல் தியானம் செய்ய வேண்டும். பிறப்பில்லாத பரம சிவன் பக்தர்களின் அன்புக்குச் செவி சாய்த்துப் பிறக்கும் நடுநிசியில் அவரை நினைத்து அவருடைய திருநாமங்களை ஜபித்துக் கருணைக்குப் பாத்திரமாக வேண்டும். அவரைத் தியானம் செய்தாலும் செய்யாவிட்டாலும் தமது சொரூபத்தில் நம்மை அவர் அரவணைத்துக் கொள்வார். ஆனால் சிந்தனா சக்தியையும் அறிவையும் மற்ற இந்திரிய கலாபங்களையும் அளித்த அவரை நாம் நாள்தோறும் நினையாதிருந்தாலும் இந்நன்னாளிலாவது நினைத்து அவரது அருள் விலாசத்துக்குப் பாத்திரமாக வேண்டும்.



அந்நிய நாடுகள் நமக்கு அளித்துள்ள மொத்த 'உதவி' காரணமாக இந்தியா பட்டுள்ள கடன் ரூ. 5305 கோடியாக உயர்ந்துள்ளது. இதில் அமெரிக்கா தருகிற பி. எல். 480 உதவியும், ஐ. எம். எஃப். என்கிற சர்வதேச நிதி நிலையத்தின் உதவியும் சேர்க்கப்படவில்லை.

நமது நிலை என்ன என்று பார்க்கும்போது கடன்களை நினைவு கொள்வது நல்லது. இந்த ஆண்டு விளைச்சல் அமோகமாகப் பெருகப் போகிறது என்று சிலர் பெரும் உற்சாகம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய மதிப்பீடு சரியென்றே வைத்துக் கொண்டாலும் கூட, ஓராண்டின் அமோக விளைச்சல் நம் நிலையைக் காப்பாற்றி விட முடியாது.

சர்க்காரின் கொள்கைகள், திட்டங்கள், இவற்றின் தோல்வி காரணமாக விலைவாசிகள் உயர்ந்துள்ளன. விவசாய உற்பத்தி அமோகமாக இருக்கும்போது விலை எப்படி உயரலாம் என்று சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். முன்பு போல் இன்று நவீன வாழ்வில் பயிர்களைப் பொறுத்து மட்டும் விலைவாசிகள் அமையவில்லை என்பதைக் காணும் புத்தி சூட்சமம் இவர்களுக்கு இல்லை. சர்க்காரின் செலவு பெருகி வருவதும் ரூபாய் நோட்டு அச்சடித்துப் புழக்கத்தில் விடப்படுவதுமே விஷச் சுருள் போல் விலைவாசியை உயர்த்துகின்றன. இதை நிதி இலாக்கா இப்போதேனும் உணர்ந்திருக்க வேண்டும். ஊதிய உயர்வு, போனஸ் உயர்வுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகளும் விலைகளை உயர்த்துகின்றன.

நகர மக்களுக்காகக் கிராமங்களில் உணவு விளைவிக்கும் விவசாயிகளை இப்போது நிதித் துறையினர் பேராசையுடன் பார்க்கிறார்கள். விவசாயிகள் பயிர் விளைவிக்கும் இயந்திரமல்ல. அவர்கள் மானுட உயிரினத்தைச் சேர்ந்தவர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள். அவர்களுக்குச் சமூகக் கடமைகளும், சம்பிரதாயக் கடமைகளும் உண்டு. பலவிதமான சட்டங்களாலும், கட்டுப்படுத்தும் குறுகிய விதிகளாலும், அதிகாரிகளின் பேராசையாலும் இவர்கள் திருட்டுச் சொத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களைப் போல் நடக்க வேண்டியிருக்கிறது. இவர்கள் தாங்களே விளைவித்ததும், பட்சிகளிடமிருந்தும், எலிகளிடமிருந்தும் அயர்வுறாமல் காத்ததுமாகிய உற்பத்திப் பொருளைத் திருட்டுச் சொத்துப் போல் மறைத்து வைக்க வேண்டியதாகி விட்டது. எந்தக் காரணம் காட்டிச் சர்க்கார் தமது சொத்தைக் கண்டுபிடித்து எடுத்துக் கொண்டு விடுவார்களோ என்று பயந்து ஒளித்து வைக்க வேண்டியதாகிவிட்டது. சர்க்கார் காட்டும் காரணம் அவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். இருப்பினும் அதை அவர்கள் எதிர்க்காமல் இருக்க முடியாதே!

❀❀❀

உத்தரப் பிரதேச முதன் மந்திரி ஸ்ரீ சரண் சிங் எப்போதுமே தைரியமும் பற்றின்மையும் காட்டி வந்திருக்கிறார். இது காரணமாகவே அவர் பிரச்னைகளின் விளிம்பிலே விளையாடி சம்யுக்த விதாயக தளத்திடம் வெற்றி காண முடிகிறது. உத்தரப் பிரதேசம் ஒரு நல்ல முதன் மந்திரியை இழக்காமல் இருக்கச் செய்யவும் முடிகிறது.*

❀❀❀

ஜனசங்க அக்கிராசனர் ஸ்ரீ தீன தயாள உபாத்தியாயரின் மறைவு குறித்து நாடு முழுவதும் துக்கம் கொண்டுள்ளது. அரசியல் வாதி ஒருவர் அறிவு, செயல் திறன் இரண்டும் பெற்றிருப்பது எந்தக் கட்சிக்குமே ஒரு அசாதாரணமான பெரும் செல்வமாகும். உபாத்தியாயா அவர்கள் அறிவு, செயலூக்கம் இரண்டும் பொதிந்தவராக என் மனத்தில் பதிந்தார்.

ஜனசங்கத்தில் இன்னும் ஒருசில நல்ல தலைவர்கள் உள்ளனர். எனவே இந்த இழப்பை அவர்கள் தாங்கிக் கொள்வர். ஆனால் உண்மையான 'மதச் சார்பின்மை'யை உட்கிரகிக்கும் ஆற்றல் உடைய தலைமையே இன்றையத் தேவை. அதாவது முஸல்மான்களையும், கிறிஸ்தவர்களையும், பார்ஸிகளையும் வெறுமே சகித்துக் கொள்வதோடன்றி, அவர்களும் ஹிந்துக்களைப் போலவே அரசியலிலும் சமூகத்திலும் நல்ல பிரஜைகள் என்ற பரந்த மனப்பான்மை உள்ள தலைமை வேண்டும். 'மதச் சார்பின்மை' என்பதற்கு நாம் கொள்ளும் பொருள் இதுவே. இதனால் நமது மத ஈடுபாடு குன்ற வேண்டும் என்று பொருள் இல்லை. மேகம் பொழிகிற எல்லா நீரும் கடலை அடைவது போல் எல்லா மத வழிகளும் சமுத்திரத்தையே அடைகின்றன என்பதே ஹிந்து சித்தாந்தம். அதை நூற்றுக்கு நூறு பின்பற்றுவதே நான் சொல்லும் மதச்சார்பின்மை.

❀❀❀

தமிழ் நாட்டில் உணவு தானியங்களின் போக்குவரத்தில் உள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும்; விவசாயிகள்

* இந்த இதழ் அச்சாகிக் கொண்டிருக்கையில் திரு சரண்சிங் ராஜினாமா செய்த செய்தி வந்திருக்கிறது.

தமது உற்பத்தியைத் தமக்குச் சௌகரிய மான எந்த இடத்திலும், தமக்குக் கிடைக் கக்கூடிய எந்த விலைக்கும் விற்க வசதி தர வேண்டும் என்று ஸ்ரீ ஆதிமூலம் (சுதந்திரக் கட்சி) சென்னை சட்ட சபையில் கவர்னர் உரை மீதான விவாதத்தில் கூறியிருப்பது கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். இவ்வாறு ஒரு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பயப் படக் கூடாது. விவசாயிக்கு ஆரோக்கிய மான சுதந்திரம் கிடைப்பதால் போட்டி பெருமளவில் ஏற்பட்டு விலைகள் குறைந்த மட்டத்தை அடையும். சர்க்கார் கட்டுப் பாட்டினால் எந்த அளவுக்கு விலையைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறை யும். உணவு தான்ய உற்பத்தியில் ராஜ்யத் துக்குத் தட்டுப்பாடில்லாதபோது சர்க்காரின் கட்டுப்பாடின்றி இயற்கைப் போட்டியை அநுமதிப்பதே பொருத்தம். கட்டுப்பாடு இல்லாத பல பண்டங்களின், அரிசிக்கு அடுத்தபடியாக அவசியமான பல பண்டங் களின் விலைகள் எப்படி உருவாகின்றன என் பதற்குப் பத்திரிகைகளில் காண்கிற தக வல்கள் நான் சொல்வதை நிரூபிக்கின்றன. சில இடங்களிலுள்ள தட்டுப்பாடு காரண மாக ஒருசில சந்தர்ப்பங்களில் விவசாயி களுக்குச் சற்றே அதிகமான ஆதாயம் கிடைப் பின் அதற்காக நாம் குறைப்பட்டுக்கொள்ள வேண்டியதில்லை.

தொழில் துறையில் விரைவான விஸ் தரிப்பு ஏற்பட்டு வருவதால், நகரத்தில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் விவசாய உற்பத்தி களின் விலையை அரசாங்கம் தாழ்த்தி நிர்ண யிக்கிறது. விவசாயிகளுக்கும் நகர்ப்புறத்தில் விவசாயப் பண்டத்தை வாங்குவோ ருக்குமிடையே தொடர்பாகப் பணிபுரிகிற வியாபாரிகள் இந்தக் கட்டுப்பாட்டினால் கொடுமைக்கு ஆளாகிறார்கள்.

துரதிருஷ்டவசமாக சர்க்கார் கட்டுப் பாடு என்பது நமக்குப் பழகிப் போய் விட்டது. எனவே அதை எடுப்பதற்குத் தீரம் தேவைப்படுகிறது. ஆனால் தீரத் துடன் இந்த நடவடிக்கை எடுத்துவிட் டாலோ, அதன் பின் லஞ்ச ஊழல்களும், அதிகாரிகளின் கொடுமைகளும் குறைவதைப் பெருமளவில் காண்போம். எந்தப் போரி லும் கவனம், ஜாக்கிரதை இவை போல் தீரமும் அவசியம். நல்ல நிருவாகத்துக்கு அவசியமான தார்மிகப் போராட்டத்திலும் இவை தேவையாகும். மிகவும் ஜாக்கிரதைப் படுத்திக் கொள்வதாலேயே தோல்வியும் ஏற்படக் கூடும். இச்சமயங் களில் தீரமே உதவும்.

ஃஃஃ

சமீபத்தில் காலமான ம்யூரியல் லெஸ்டர் அம்மையார் மகாத்மா காந்தியின் நெருங் கிய பிரிட்டிஷ் நண்பர்களில் — பக்தர்களில் ஒருவர். ஆதிகாலத்திலிருந்தே அவ்வம்மை, காந்திஜியுடன் பணிபுரிந்த எங்களைவருட னும் நெருங்கிய தோழமை கொண்டிருந் தார். பிரிட்டிஷ் ரத்தத்தின் விருவிருப்புப் படைத்திருந்த அந்த அம்மையார், மானு டப் பண்புகளின் உண்மையான பிரதிநிதி களில் தலைசிறந்த ஒருவராக விளங்கினார். இன்றுள்ள 'க்வேக்கர்கள்' பெருமைப்படக் கூடிய ஓர் அங்கத்தினராக இருந்தார். நீண்ட ஆயுள் வாழ்ந்தார் அவர். கடைசி வரையில் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று நட்பு என்றால் என்ன என்று மக்கள் காணுமாறு செய்து வந்தார்.

ஃஃஃ

விநாடிக்கு 1,86,300 மைல் செல்லும் ஒளி சூரியனிலிருந்து பூமியை அடைய எட்டு நிமிஷங்களாகின்றன. (பூமியிலிருந்து சூரியன் ஒன்பது கோடி மைல்களுக்கப்பால் உள்ளது.) ஆகாய கங்கை எனப்படும் நட் சத்திரக் கணங்களிலிருந்து ஒளி நம்மை அடை யவோ லட்சம் ஆண்டுகள் ஆகின்றன. ஆன்ட்ரமிடா என்ற தாராகணத்திலிருந்து ஒளி நம்மை அடைய இருபது லட்சம் ஆண்டுகள் ஆகின்றனவாம். இந்த நட்சத் திரக் கூட்டத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு ஒளி செல்ல லட்சம் ஆண்டுகளாகுமாம். இதிலிருந்து பிரபஞ்சம் எவ்வளவு பெரியது என்பதை மங்கலாகப் புரிந்து கொள்ளலாம். விசுவ வெளியில் கோடி கோடியான நட்சத்திரக் குவியல்கள் உள்ளன. இப்படி யிருந்தும் விசுவ வெளியின் தொண்ணூறு சதவிகிதம் வெற்றிடமாகவே உள்ளது.

துவைத சித்தாந்தம் பற்றி ஸ்ரீ ஒய். கே. ரகுநாதராவ் எழுதியுள்ள புத்தகத்தின் முக வுரையிலிருந்து இதை எடுத்து எழுதினேன். பௌதிகப் பிரபஞ்சம் சத்தியமானதே, மாயை அல்ல என்பது இப்புத்தகத்தில் எடுத்துக் கொண்ட விஷயம். எங்கிருந்து வந்தது என்று சொல்லத் தெரியாத பிர பஞ்சம், எப்போது தோன்றியது என்று சொல்ல முடியாத அநாதி எனலாம். இந்திய வான சாஸ்திரிகளின் கணக்குப்படி பிர பஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டு இருநூறு கோடி ஆண்டுகளாகின்றன.

ஸ்ரீ ரகுநாத ராவ் தந்துள்ள கீழ்க்கண்ட தேதிகளை நினைவு வைத்துக்கொள்வது பயன் தரலாம். கிருஷ்ண பரமாத்மா கி. மு. 3171ல் பிறந்து 106 வருடங்களும் ஆறு மாதமும் வாழ்ந்தார். பீமசேனன் துரி யோதனனைக் கொன்ற கி. மு. 3103ல் கலி யுகம் பிறந்தது. ஆராய்ச்சி நிபுணர்கள் இவற்றை ஒப்புக் கொள்ளாதிருக்கக் கூடும். ஆயினும் சம்பிரதாயமாக ஏற்கப்பட்டு வந் திருக்கும் தேதிகளை அறிதல் நல்லது.

ஃஃஃ

வேறோர் உயிர் துன்புறும்போது நாமும் வருந்துவது ஏன்? வேறோர் உயிரை மகிழ்ச்சி யாகக் காணும்போது நாமும் மகிழ்வதேன்? இந்த அநுதாபமே அத்வைதத்துக்கு ஆதார மான பெரும் சாட்சி. அதே போல் பேரா சையும் சுயநலமும் துவைதத்துக்குப் பெரும் சான்றுகளாகும். துவைத — அத்வைத சித் தாந்த வாதங்கள் யாதாயினும், மனித இனம் வாழ்வதற்கு அநுதாபம் ஒன்றே உரிமை தருகிறது. இந்த விலைமதிப்பில்லாச் சொத்தை நாம் இழக்காதிருப்போமாக.

ஈடு செய்ய இயலாது

அப்பாயி என்று அன்போடு அழைக்கப்பட்ட ஸ்ரீ டி. எஸ். நாராயணஸ்வாமி அவர்களின் அகால மரணம் பற்றிக் கேள்வியுற்றதும் பேரதிர்ச்சி தரும் செய்தி என்ற வார்த்தைகளின் முழுப் பொருளையும் அவரது நண்பர்களும் உறவினர்களும் உணர்ந்தனர்.

நிறைந்த சிந்தனை சக்தியும், நிறைந்த செயலாற்றலும், நிறைந்த திருவும், நிறைந்த அன்பர்களும், நிறைந்த நற்பண்புகளும் பெற்றிருந்த 'அப்பாயி' நிறைந்த ஆயுளை மட்டும் வாங்கிக் கொண்டு வரவில்லை.

இந்தியா சிமெண்ட்ஸ், கெமிகல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ், தென்னிந்தியக் கப்பல் கார்ப்பரேஷன், சென்னை அலுமினியம் கம்பெனி முதலிய பல நிறுவனங்களின் உயிர்நாடியாக இருந்த அவர் வேறு பல தொழிலகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தொழிலக வரைபடத்தில் சென்னை ஒரு முக்கியமான புள்ளியாக விளங்குகிறதென்றால் அதற்குக் காரணகர்த்தர்களில் ஸ்ரீ நாராயணஸ்வாமியும் ஒருவர்.

வாழ்க்கையை அடித்தளத்திலிருந்தே தொடங்கியவர். அவர் முன்னுக்கு வந்த வேகம் அனைவரையும் பிரமிக்க வைத்தது. பாங்குத் தொழில், நிதி விவகாரம் இவற்றிலும் அபாரமான தேர்ச்சி பெற்றவர் அவர். அதோடு கலாசாரத்திலும், விளையாட்டுக்களிலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். சென்னை ஷெரீபாக அவர் ஆற்றிய பணியைத் தமிழகத்தின் தலைநகரம் நன்கறியும். அவரது சுமுகத்தை அநுபவித்து மகிழ்ந்த நண்பர்கள் ஏராளம்.


இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனியை இந்தியாவிலேயே இத்துறையில் மூன்றாவது ஸ்தானம் வகிக்கும் நிலைமைக்கு விரைவில் உயர்த்தினார். தென்னிந்தியக் கப்பல் கார்ப்பொரேஷனை ஆரம்பித்துத் தமிழனின் பண்டைக் காலச் சிறப்பான கப்பல் வாணிபத்துக்கு இக் காலத்தில் ஒருமாதிரிகூட இல்லாமல் போய்விட்டதே என்ற குறையை நீக்கினார். இக் கம்பெனியின் கப்பல்களுக்குச் ''சென்னை ஊக்கம்'', ''சென்னை ஜெயம்'' என்றெல்லாம் பெயர் சூட்டிய அவரது தமிழ்ப்பற்றை என்னென்பது!

சமீபத்தில் தமிழகத்தில் நடந்த இரு பெரும் நிகழ்ச்சிகள் உலகத் தமிழ் மகாநாடும், தேசிய விளையாட்டுப் போட்டியுமாகும். இதில் முன்னதில் உபசரணைக் குழுத் தலைவராகவும் பின்னதில் நிதிக் குழுத் தலைவராகவும் சுறுசுறுப்புடன் உயர் சேவை செய்து தமிழ் நாட்டுக்கே நற்பெயர் வாங்கித் தந்தவர் நண்பர் நாராயணஸ்வாமி.

சுணங்கி விடுமோ என்ற ஐயத்துடன் நடந்து வந்த பல தொழில்களுக்கு 'சென்னை மாநில அரசின் தொழில் முதலீட்டு நிதி ஸ்தாபன'த்தின் தலைவர் என்ற முறையில் அவர் கைகொடுத்து உதவியுள்ளதை எண்ணும்போது மனம் பூரிக்கும். அவருடைய பெயர் இணைந்த மாத்திரத்திலேயே பல தொழில்களுக்குப் புது உற்சாகம் பிறக்கும் அதிசயத்தையும் தென்னகம் கண்டுள்ளது.

அந்தஸ்துக்கும் மேலான பரந்த உள்ளம் படைத்தவர் அப்பாயி. நண்பர்களை மறவாதவர். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாது என்று கொடைக்கு இலக்கணம் கூறுவது உண்டு. தாம் கொடை வழங்குகிறோம் என்ற உணர்ச்சியே இல்லாது அவ்வளவு இயற்கையாக உதவி செய்யும் உயர் குணத்தைக் காண்பது மிகவும் அரிது. உடன் பணியாற்றும் பலரையும் அணைத்துச் செல்லும் பண்பும், தம்மை நம்பினோர்க்குத் தம்மாலான உதவியைத் தவறாமல் செய்யும் சிறப்பும், அப்பாயிக்குத் தொட்டதை எல்லாம் துலங்க வைக்கும் அபூர்வ சக்தியை அளித்தன வென்றே சொல்ல வேண்டும்.

தமிழகத்தின் தொழில் துறையிலேயே அவரது மறைவு மகத்தான நஷ்டமாக உள்ளபோது — அவரை அறிந்த அனைவருக்குமே அவரது இழப்பு ஈடு செய்யவொண்ணாததாக இருக்கும்போது — அவரது அருமைக் குடும்பத்தினருக்கு யார் எப்படி ஆறுதல் சொல்ல இயலும்? அந்தக் குடும்பத்தின் துயரை ஆயிரமாயிரம் உள்ளங்கள் பகிர்ந்து கொள்வதுதான் ஆறுதலாகவும் அநுதாபமாகவும் அமைய வேண்டும். பல அன்பர்களின் உள்ளங்களிலிருந்து அப்பாயி மறையவே மாட்டார்.



என்ன செய்தி?

- சுதந்திரக் கட்சியும் ஆளும் கட்சியும்
- ஐரோப்பாவில் ஒரு புதுக் கருத்து

தமிழக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களா எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களா என்ற ஐயம் பொது மக்களிடமும் ஏன் சில சமயங்களில் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களிடமும் தோன்றுவதுண்டு. இந்தக் குழப்பத்தை ஆளும் கட்சியின் சட்ட சபைத் தலைவர் திரு நெடுஞ்செழியன் சந்தேகத்துக்கு இடமின்றித் தீர்த்து வைத்து விட்டார். தி. மு. க. தவிர மற்ற அத்தனை கட்சிகளையும் எதிர்க் கட்சிகளாகத்தான் அரசாங்கம் கருதுவதாகத் தெரிவித்து விட்டார்.

பின் ஏன் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் ஆளும் கட்சியினுடன் சேர்ந்து பல சந்தர்ப்பங்களில் வாக்களிக்கிறார்கள் என்று கேட்கலாம். இதற்குக் காரணம், அரசாங்கம் சுதந்திரக் கட்சியை ஓர் எதிர்க்கட்சியாகக் கருதினாலும் எதிரிக் கட்சியாகக் கருதவில்லை என்பதுதான்.

புதிதாகப் பதவிக்கு வந்துள்ள ஒரு கட்சிக்குக் கூடியவரை உதவியளித்து, இந் நாட்டில் என்றென்றும் காங்கிரஸ்தான் ஆட்சி நடத்தவேண்டும் என்பதில்லை, மாற்றுக் கட்சியும் ஆட்சியை நடத்த முடியும் என்று காட்டி ஜனநாயக ஆட்சி முறையை வேரூன்றச் செய்யத்தான் இப்படி வோட்டளிக்கிறது. சட்ட சபையில் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் கட்சியின் நோக்கை வற்புறுத்திப் பேச பூரண உரிமை பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சுதந்திரக் கட்சியின் 21 அம்சக் கொள்கைகளுக்குப் புறம்பான எவ்விஷயம் சட்டசபையில் வந்தாலும் அதன்மீது ஒவ்வொரு சுதந்திரக் கட்சி அங்கத்தினரும் தமது மனசாட்சிப்படி பேசவும், வோட்டளிக்கவும் பூரண உரிமை பெற்றிருக்கிறார். இருப்பினும் கூடியவரை ஆளும் கட்சி நிர்வாகத்தை நடத்திச் செல்ல உதவியாக இருந்து ஜனநாயக ஆட்சி முறையைத் தமிழகத்தில் நன்றாக வேரூன்றச் செய்ய வேண்டும் என்பதே தற்சமயம் சுதந்திரக் கட்சியின் மேலிடத்துத் தலைவர்களின் விருப்பமும் வேண்டுகோளும்.

ஐரோப்பிய பொதுச் சந்தை (இ.ஸி.எம்) என்று குறிப்பிடப்படும் ஸ்தாபனம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கிறது. அதன் அபரிமிதமான செல்வாக்கைக் கண்டு பிரிட்டனே அதில் சேரத் துடிக்கிறது என்றால் அதன் சிறப்பை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட ஸ்தாபனத்தின் உதவித் தலைவர் ஸிக்கோ மானஸ்ஹோல்ட் என்பவர் ஐரோப்பிய விவசாயத்தைப் பற்றி ஒரு புதுத் திட்டத்தைத் தெரிவிக்கிறார்.

அதாவது ஐரோப்பாவில், சிறுசிறு பண்ணைகளாகவுள்ள விவசாய நிலங்களையெல்லாம் திரட்டிப் பெரும் பண்ணைகளாக்க வேண்டும். அப்போதுதான் வயல்களுக்குச் செவ்வையான நீர்ப்பாசன வசதியும், வடிகால் வசதியும் ஏற்படுத்த முடியும். பெரும் பண்ணைகளாக்கி விவசாயம் நடத்தினால்தான் விவசாயிக்கும் உபயோகிப்போருக்கும் இடையில் வரும் தரகர்களின் எண்ணிக்கை குறைந்து, விவசாயப் பண்டத்தின் விலையும் மக்கள் வாங்கக் கூடிய அளவுக்குக் குறையும் என்று கூறுகிறார்.

இதைத் தான் சுதந்திரக்கட்சி ஆரம்பத்திலிருந்து சொல்லி வருகிறது. நிலத்துக்கு உச்ச வரம்பு சட்டம் செய்து, பெரும் பண்ணைகளைக் கூறு போடுவதிலுள்ள ஆபத்து குறித்து எச்சரிக்கை செய்து வந்திருக்கிறது.

அட்டைப்பட விளக்கம்

கிழக்கு - மேற்கு சந்திப்பு

புகழ்பெற்ற அமெரிக்க நடனக் கலைஞர் முர்ரே லூயிஸ் அண்மையில் இந்திய நாட்டின் முக்கிய நகரங்களுக்கெல்லாம் தமது நடனக் குழுவினரோடு வந்து, கலை விருந்தளித்தார். கலையுலகில் எல்லைக் காவல் கிடையாது; ஏன்? எல்லைக்கோடுகூட இல்லை.

பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து இந்தியா வந்த அமெரிக்க நடனமணிகள் அமெரிக்க நடனக்கலையை இங்கு பிரபல்யப் படுத்தியதோடு தொன்மைச் சிறப்பு வாய்ந்த இந்திய நடனக் கலைகள் குறித்து அறிந்து கொள்வதிலும் ஓர் ஆர்வம் காட்டினர். இந்நாட்டு ஆடல் கலைமணிகளை அவர்கள் சந்தித்துப் பேசிக் கருத்துப் பரிமாறிக் கொண்டனர். இந்திய நடன நிகழ்ச்சிகளைக் கண்டு களிகூர்ந்தனர்.

புது தில்லியில் உள்ள கதக்களி கல்வி நிலையத்துக்கு முர்ரே லூயிஸ் குழுவினர் சென்றிருந்தபோது எடுத்த படம் இந்த இதழ் அட்டையில் வெளியாகியுள்ளது. கதகளி நிலைய முதல்வர் குரு மாதவ பணிக்கர் கதக்களி உடுப்புக்களுடன் காட்சி யளிக்கிறார். முர்ரே லூயிஸ் குழுவைச் சேர்ந்த ஒரு நடனமணி அவர் கூறுவதை ஆர்வத்தோடு கேட்கிறாள்.

படம் : அமெரிக்கத் தகவல் நிலையம்

நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்தே தெரியும்:

1 அது தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய பீபெரி காபிக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் 100% தூய காபி

2 அது இன்ஸ்டன்ட் காபி தயாரிப்பதில் உலகிலேயே அதிக அனுபவம் உடையவர்களால் தயாரிக்கப்படுகிறது.

3 உங்கள் ருசிக்கேற்றபடி 'ஸ்ட்ராங் காகவோ' 'லேட்டாகவோ' போட்டுக் கொள்ளக்கூடியது.

குறைந்த அளவு: ஸ்பூன் நிரம்ப: குவித்து:

4 நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்து தெரியவராத விஷயம்:
அது சிக்கனமானது. நேரடியாக கப்பிலேயே தயாரித்துக் கொள்ளக் கூடியதால் அதை தேவையான அளவு மட்டுமே போட்டுக் கொண்டால் போதும்.

NESTLÉ

ஒரு நெஸ்லே தயாரிப்பு





NESCAFÉ* நெஸ்காஃபே—தனிச்சிறப்புள்ள தரமான காபி!

* நெஸ்கா∴பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்

NCE 6248 A

கண்கொள்ளாக் காட்சி






உலகத் தொழில் கண்காட்சியில் பாரத் ஹெவி எலெக்டிரிகல் கம்பெனியார் அரங்கத்தின் முன்புறத் தோற்றங்கள்.

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று அமரகவி பாடினார். சர்வதேசங்களுக்கும் ஓடி ஆடி அவற்றைச் சேகரிக்க வைக்காமல் பல தேசங்களுமே சென்னையில் கலைச் செல்வங்களைக் கொண்டு வந்து கண்காட்சியாக வைத்தால் அது கண்கொள்ளாக் காட்சிதானே ?

இந்த உலகத் தொழில் கண்காட்சிக்கு 'விஜயம் செய்தால் விஞ்ஞானம், தொழில், கல்வி, வாணிபம் முதலிய பல கலைகளையும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. கிளம்புவோமா? உலகத் தொழில் கண்காட்சியை வலம் வருவோமா?

காலையில் எழுந்ததும் காப்பி அருந்தாவிட்டால் அன்று பொழுது விடியவில்லை என்று ஆகிவிடுகிறது. இந்தக் காப்பிக்குரிய ஏழு விதைகளை அரேபியாவிலிருந்து பாபா புதான் சாகிப் நானூறு வருஷங்களுக்கு முன்கொண்டு வந்தார். அது இன்று மூன்று லட்சம் ஏக்கர் காப்பித் தோட்டங்களாகப் பரவி எல்லோரையும் அடிமையாக்கி வைத்திருக்கிறது. இங்கிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கும், பிரேஸில், ஜாவா,





பிரபல மருந்துத் தயாரிப்பாளரான 'அலெம்பிக்' நிறுவனம் அமைத்துள்ள அரங்கத்தின் அழகுத் தோற்றம்.

சுமத்ரா தீவுகளுக்கும் காப்பி கப்பலேறியது. இந்திய காப்பி அரேபிகாவும் ரோபஸ்டாவும் ஐரோப்பாவில் நூறு ஆண்டுகளுக்கு மேல் பிரசித்தி பெற்று விளங்குகிறது. 1960–61ம் ஆண்டுகளில் 32,271 டன்கள் ஏற்றுமதியாயிற்று என்பது ஒரு ரிகார்டு.

சேஷசாயி தொழில் நிறுவனங்கள்

தம் உழைப்புத் திறமையினாலும், துணிவினாலும் பல தொழில் நிறுவனங்களைக் கண்டவர்களில் திரு வி. சேஷசாயி முக்கியமானவர். கேரளம், ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களிலும் இவர்களது தொழிலகங்கள் உள்ளன. ஜப்பானியரின் தொழில் நுணுக்கத் திறன் துணை கொண்டு அலுமினியம் கண்டக்டர்களையும் கேபிள்களையும் முதன் முறையாக அதிக அளவில் தயாரித்தளித்தவர்கள் இவர்கள். முன்பெல்லாம் மின்சாரம் பாயும் கம்பிகள் செப்பினால் செய்யப்பட்டு வந்தன. இதனால் செலவும் அதிகம், அந்நியச் செலாவணியும் நஷ்டம். அலுமினியத்தை நெடுந்தூரம் மின்சாரத்தை எடுத்துச் செல்லும் கம்பிகளாகப் பயன்படுத்துவதில் நிரம்ப லாபம் உண்டு. 'ஆலிண்ட் ஸ்தாபனம்' தன் அலுமினியம் கண்டக்டர்களையும் அதன் துணைக் கருவிகளையும் பர்மா, இலங்கை, மலேஷியா, சௌதி அரேபியா தாய்லந்து, மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. மேட்டூர் கெமிகல் ஸ்தாபனம் ரசாயனப் பொருள்கள் உற்பத்தியில் பலவிதங்களில் முன்னோடியாக விளங்குகிறது. இரண்டாம் உலகப் போரின் விளைவாகப் பொருளாதார நெருக்கடியும், இறக்குமதிக் கட்டுப்பாடும் இருந்த காலத்தில் மேட்டூர் கெமிக்கல் ஸ்தாபனம் செய்த சேவை மகத்தானது. இந்த ஸ்தாபனத்தில் குளோரின் வாயுவின் சேர்க்கையினால் உருவாகும் பலவித ரசாயனப் பொருட்களையும் தயாரிக்கிறார்கள். பலரகத் தொழில் துறைகளில் இந்த ரசாயனப் பொருள்கள் பயனாகின்றன.

சேஷசாயி நிறுவனத்தார் காகிதம், இன்ஸுலேட்டர்கள் போன்ற வேறு பல பொருள்களையும் தயாரித்து நாட்டு வளத்துக்கு உதவி வருகின்றனர். உலகத் தொழிற் கண்காட்சியில் இவர்களது காட்சியமைப்பு சிறியதானாலும், 'கீர்த்தி பெரிது' என்பதை உணர்த்துகின்றது.


பாங்கு முதல் பிஸ்கட்வரை


சினிமா நட்சத்திரங்கள் கையெழுத்துப் போட்டால் அது 'ஆட்டோகிரா'பாக இருக்கும்; தொழிலதிபர்கள் கையெழுத்திட்டால் அது 'ஓவர்டிராப்டு'க்காக இருக்கும்.

தொழில் துறைகளின் வளர்ச்சிக்குப் பாங்கிகளின் சேவை மிகத் தேவையானது. அதனாலேயே உலகத் தொழிற் கண்காட்சியில் இந்தியன் பாங்கி, பாங்க் ஆப் இந்தியா, யுனைடெட் கமர்ஷியல் பாங்கு, ஸ்டேட் பாங்க், ஸிண்டிகேட் பேங்க், கனரா பாங்க் போன்றவை தம் கிளைகளை நிறுவியுள்ளன. 1907ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியன் பாங்க் அறுபத்தோரு வருஷங்களுக்கு மேல் நம் தேசத்தின் பொருளாதார, தொழில் வளர்ச்சியில் பங்கு கொண்டிருக்கிறது. இந்தியாவில், அதற்கு 200 கிளைகள் இருக்கின்றன. யுனைடெட் கமர்ஷியல் பாங்குக்கு இது வெள்ளி விழா ஆண்டு. எனினும் அதற்குப் பல்லாண்டு கூறி வாழ்த்தத் தயக்கமாகத்

கண்காட்சியில் இயங்கும் யுனைடெட் கமர்ஷியல் பாங்கி.







டியூப் இன்வெஸ்ட்மெண்ட், கார்பரண்டம் யூனிவர்சல், கோரமாண்டல் புரோமோரைட் — இந்தக் கூட்டு ஸ்தாபனத்தின் பொருட்காட்சி மண்டபம்.

தான் இருக்கிறது. மொரார்ஜி தேசாய் என்ன என்ன திட்டங்களை வைத்திருக்கிறாரோ, யார் கண்டது?

பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனத்தார் திறந்த வெளி அரங்கில் அமர்ந்து விச்ராந்தியாகக் குளிர் பானங்களும் பிஸ்கட்டும், தேநீரும் அருந்த வழி வகுத்திருக்கிறார்கள். ராதா சில்க் எம்போரியத்தினரின் ஸ்டால் எங்கே இருக்கிறதென்று தேடிச் சுற்றிச் சுற்றி வந்தோம். புடவையைப் பெண்மணிகள் உடலில் சுற்றிச் சுற்றிக் கட்டுவது போல் அவர்கள் பகுதியில் நாலைந்து சவுக்குக் கம்புகளை நிறுத்தி அவைகளைச் சுற்றி வளைத்து 'ராதா சில்க் எம்போரியம்' என்று பெரிய கொட்டை எழுத்துக்களில் அச்சான துணியைக் கட்டியிருக்கிறார்கள். சுற்றி வளைத்துச் சொல்வானேன்? ரொம்ப 'சிம்பிளாக' முடித்து விட்டார்கள்!

எவரெடி பாட்டரி பிரசித்தமானது. 'இதோ எப்போதும் தயாராக இருக்கிறேன்' என்று கூறும் எவரெடி பாட்டரி மாதிரி பெரிய அளவில் வட்டவடிவமாக ஸ்டால் எழுப்பி அதையே தங்கள் கண்காட்சியாகச் செய்து விட்டார்கள் யூனியன் கார்பைட் நிறுவனத்தினர். தங்கள் தயாரிப்பில் முதன்மையானது பாட்டரி என்பதை அவர்கள் சொல்லாமல் சொல்லிக் காட்டி விட்டார்கள் போலும்!

பெப்பர்மிண்ட், பிஸ்கட் ஆகியவற்றை வாங்கிச் சாப்பிட்டு விட்டு அதன் கண்ணாடி போன்ற மேல் உறையைக் கீழே போட்டு விடுகிறோம். நாம் தூர எறிந்துவிடுவதைக் கண்காட்சியாக வைத்திருப்பதால் திருவாங்கூர் ரேயான் ஸ்தாபனத்தினர் அதனைத் தயாரித்தளிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்கிறோம். இந்த டிரேயோபேன்

அணுசக்தி ஸ்தாபனத்தினர் நடத்தும் அரிய கண்காட்சியில் சென்னை தொழில் மந்திரி திரு நெடுஞ்செழியனுக்கு அணுமின் நிலைய நிர்வாகி திரு சிவா காட்சிப் பொருள்களை விளக்குகிறார்.



இரண்டு விதங்களில் உதவுகிறது. கண்ணாடி போல் இருப்பதால் பண்டத்தைச் சுற்றியுள்ள காகிதத்தில் அச்சாகியிருக்கிற விஷயம் பளிச்சென்று தெரியும். அல்லது பண்டத்தையே நேரடியாக டிரேயோபேன் பையில் போட்டு ஸீல் பண்ணிக் கொடுக்கலாம். பண்டத்தின் தரத்தையும் பிரிக்காமலேபார்த்து விடலாம். காற்றுப் புகாமல் தடுப்பதால் பண்டத்தைக் கெடாமல் காக்கிறது. ரேயான் துணிகளும் இவர்களது படகு போன்ற கண்காட்சியிலே இடம் பெற்றுள்ளன.



கிராம்டன். பெஸ்ட், ஹைலம் ஸ்தாபனங்களின் காட்சிச்சாலை விளக்கொளியில் பிரகாசிக்கிறது.

அணுமின் நிலையக் காட்சி


இது அணுயுகம். தமிழகத்தில் ஒரு தடவை பருவ மழை பொய்த்து விட்டால் அந்த ஆண்டில் மின்சாரத் தடையும் தொடர்ந்து தொழிற்சாலைகள் இயங்கத் தடையும் ஏற்பட்டு 40 கோடி ரூபாய் நஷ்டமாகிறது என்று புள்ளி விவரக் கணக்குகளுடன் கூறுகிறார் கல்பாக்கம் மின் நிலைய உதவி நிதி ஆலோசகர் திரு பார்த்தசாரதி.

''கல்பாக்கம் அணுமின் நிலையம் பார்த்தால் சிறியதாய்த்தான் இருக்கும். ஆனால் அது மிகுந்த யந்திர நுணுக்கங்களுடன் உருவாக்கப்படுகிறது. நிறையப் பால் வைத்துச் சுண்டக் காய்ச்சித் திரட்டிப் பால் தயாரிக்கிறோமே, அதுபோலத்தான் கல்பாக்கம் அணுமின் நிலையமும். நூற்றுக்கு நூறு நம் இந்திய என்ஜினியர்களாலேயே உருவாக்கப்படுகிறது என்பது நாம் பெருமைப்படக் கூடிய காரியம். விஞ்ஞானமேதை ஹோமி பாபா தீர்க்கதரிசனத்துடன் செய்த காரியங்கள் இன்று நற்பலன் அளிக்கின்றன'' என்று விவரித்தார் அணுமின் நிலைய நிர்வாகி திரு சிவா.

அணுமின் நிலையம் பற்றியும் அணுவின் சக்தி குறித்தும் தெரிந்து கொள்ள உலகத் தொழில் கண்காட்சியில் அணுசக்திக் கமிஷன் அரங்குக்குள் நுழைகிறோம்.

''யுரேனியம், தோரியம் அணு உலைக்குத் தேவையான தாதுப் பொருள்கள். யுரேனியம் பீகாரில் ஜாடுகுடா சுரங்கத்திலிருந்து கிடைக்கிறது. தோரியம் கேரளக் கடற்கரை மணற்பரப்பில் கிடைக்கிறது'' என்று கூறுகிறார் விஞ்ஞானி.


போபால் ஹெவி எலெக்டிரிகல் ஸ்தாபனத்தாரின் கண்காட்சி கூடம்.



பிறகு கதிரியக்க ஐஸோடோப்புகள் மருத்துவம், தொழில், துறை, விவசாயம், நீர்வள ஆராய்ச்சி ஆகியவற்றுக்குப் பயன்படுவதைப் பற்றித் தெரிந்துகொள்கிறோம்.

ஒரு குண்டூசியின் கூரிய முனையில் சுமார் இரண்டு கோடி அணுக்கள் அடங்கிவிடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அந்த மிகச் சிறிய துகள் செய்யும் மாபெரும் சாதனைகளை இந்த அணுமின் நிலையக் கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பெங்களூர் பாரத் எலெட்டிரானிக்ஸ் ஸ்தாபனத்தினர் அமைத்துள்ள கண்காட்சிச்சாலையின் நுழைவாயில்.



ராஞ்சி கனரகத் தொழிற்சாலை

எத்தனையோ பல தொழிலகங்களில் பல ரகப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இப்பொருள்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இது. முதல் தடவையாக இந்தியாவிலே மிகப் பெரிய வார்ப்பு உலைகள், லேத்துகள் போன்ற இயந்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த மிகப் பெரிய தொழிற்சாலையை நிறுவ ரஷ்ய, செக்கோஸ்லோவேகிய சர்க்கார்கள் உதவி புரிந்திருக்கிறார்கள். ஆசியாவிலேயே மிகப் பெரியதான இந்த மாபெரும் தொழிற்சாலை வருஷத்துக்கு 80,000 டன் கனரகப் பொருள்களைத் தயாரித்தளித்து வருகிறது. தொழில் நிபுணத்துவம் பெற நூற்றுக் கணக்கான இன்ஜினியர்கள் செக்கோஸ்லோவேகியாவிலும், ரஷ்யாவிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்தக் கண்காட்சியிலும் மிகப் பெரிய இயந்திரங்களை வைத்து, கனரகத் தொழிற்சாலை எப்படி இருக்கும் என்று நமக்கு ஓரளவுக்குத் தெரிவிக்கிறார்கள்.

எஃகு ஆலைகள்

சர்க்கார் துறையில் இயங்கும் ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் ஆகிய மாபெரும் எஃகுத் தொழிற்சாலைகளை ஒன்றாக இணைத்து ஹிந்துஸ்தான் ஸ்டீல் என அழைக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் பிரமுகர்களுக்குக் காட்டப்படும் கண்காட்சி சாலைகளான இந்த எஃகு ஆலைகள் உலகத் தொழிற் கண்காட்சியிலும் இடம் பெற்றுள்ளன. புகைப்படங்களையும் விளக்கங்களையும் கொண்டு எஃகு ஆலைகள் பற்றி விவரிக்கிறார்கள். கண்காட்சியில் ஹிந்துஸ்தான் ஸ்டீல் பெவிலியன் கலை அழகோடு திகழ்கிறது.

நமக்குத் தேவைப்படக் கூடிய, நம்மால் ஏற்றுமதி செய்யக் கூடிய எஃகின் அளவினைச் சரியாகக் கணிக்காமல் போனதால் இந்த எஃகு ஆலைகள் முழுமையான அளவுக்கு உற்பத்தி செய்யாமல் சோம்பியிருக்கின்றன. இதற்கிடையில் பொகாரோ எஃகு ஆலை வேறு உருவாகி வருகிறது. ஜமாய்க்கட்டும்!

பாரத் எலக்டிரானிக்ஸ்

“அகில இந்திய ரேடியோ. இப்பொழுது ராமநாதபுரம் கிருஷ்ணன் அவர்கள் பாடுவார்கள். நிகழ்ச்சி ஒலிப்பதிவு” என்று அறிவிப்பாளர் கூறக் கேட்கிறோம். இந்த ஒலிப்பதிவு இயந்திரத்தை அகில இந்திய ரேடியோவுக்குச் செய்தளிப்பது பெங்களூர் பாரத் எல்க்ட்ரானிக்ஸ் ஸ்தாபனம் என்பது ஒலிபரப்பப்படாத விஷயமாகும். போலீஸாருக்கும் ராணுவத்தினருக்கும் ரேடியோ மூலம் செய்திகள் அனுப்பவும், முன்னணியில் உள்ளோருடன் தொடர்பு கொள்ளவும் உதவும் நுணுக்கமான இயந்திரங்களை பாரத் எலக்ட்ரானிக்ஸ் தயாரிக்கிறது. எலெக்ட்ரானிக் சாதனங்களில் 80 சதவிகிதம் ராணுவத்தினருக்கே பயன்படுகிறது. ரேடியோ வால்வுகளும், டிரான்ஸிஸ்டர்களும் செய்தளிக்கிறார்கள். டெலக்ஸ் கருவி இயங்கும் முறையைக கண்காட்சியில் விவரிக்கிறார்கள். பாரத் எலெக்ட்ரானிக்ஸ் ஸ்தாபனத்தில் 7000 பேர் பணிபுரிகிறார்கள். இதில் ஐந்தில் ஒருபாகத்தினர் பெண்மணிகள்!

ஜவுளியில் பலவிதம்

இயந்திரங்களைப் பார்த்துத் தொழில் நுணுக்கத் திறன் பற்றி அறிந்து கொண்டு கொஞ்சம் அலுப்பு ஏற்பட்டால் பெண்மணிகள் குவாலியர் ரேயான்ஸ் அரங்குக்குள் நுழையலாம். இங்கு மூங்கிலிலிருந்து ரேயான் படிப்படியாக எப்படி உருவாகிறது என்பதை விவரிக்கிறார்கள். திரைப்படக் காட்சியும் உண்டு. விதம் விதமான ரேயான் துணி வகைகளைப் பார்வையிடலாம்.

மதுரை ஹார்வி மில்லிலும் துணி மணி வகைகளைத் தயாரிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ரப்பராலான சைக்கிள் டயரிலும் ‘கன்வேயர் பெல்ட்’களிலும் பயன்படும் நூல் வகைகளும் உண்டு. இத்தகைய விசேஷமான தேவைகளுக்கு ஏற்ற நூல் ரகங்களையும் ஹார்வி மில்ஸ் தயாரித்தளிக்கிறது.

பெண்மணிகள் அலங்காரக் கலையில் நாளொரு நாகரிகமும், பொழுதொரு ஃபேஷனுமாக விளங்குகிற காலம் இது. விதம் விதமான எம்ராய்டரி வேலைப்பாடுகள் செய்யப்பெற்ற துணி வகைகளைத் தயாரித்தளிக்கிறது ‘ஹகோபா’ ஸ்தாபனம். இந்த அரங்கத்தில் எம்ராய்டரி செய்யப்பட்ட ஹகோபா துணி மணி வகைகளைக் கையில் காசில்லாதவர்கள் பார்த்து விட்டு வரலாம்; ஆனால் வசதி இருந்தும் வாங்காமல் வர முடியாது! அப்படிக் கண்ணையும் கருத்தையும் (பணத்தையும் கூடத்தான்) ஈர்க்கின்றன ஹகோபா எம்ராய்டரி வேலைப்பாடுகள்.

பாட்டரியும் பாட்டிலும்

பாட்டரிகளில் பல வகைகள் உள்ளது நமக்குத் தெரியும். டிரான்ஸிஸ்டர் பாட்டரி, டார்ச் லைட் பாட்டரி எல்லாம் உண்டு. ஸ்டாண்டர்ட் கார் பாட்டரிகள் பிரசித்தி பெற்றவை. பாட்டரியினாலேயே ஓடும் ஸ்கூட்டரைத் தயாரித்து வைத்திருக்கின்றனர் ஸ்டாண்டர்ட் பாட்டரி அரங்கில். இப்போது பெரிய தொழிலகங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போகப் பரவலாகப் பயன்படும் இந்த ஸ்கூட்டர்கள் சாலையிலும் ஓடும் நாள் வர, ஸ்கூட்டரில் இரண்டொரு முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன. ஆராய்ச்சியில் வெற்றி பெற்றால் விரைவில் இத்தகைய ஸ்கூட்டர்களைச் சாலைகளில் காணத் தொடங்கலாம்.

ஸ்ரீனிவாஸ் குரூப் தொழிலகங்கள் பல விதப் பொருள்களைத் தயாரிக்கின்றன என்ற போதிலும் அவர்களது காகித ஆலைதான் சட்டென்று நினைவில் நிற்கும் எவருக்கும். வெஸ்ட்கோஸ்ட் பேப்பர் மில் தயாரித்தளிக்கும் காகிதம் அரிச்சுவடி ஆரம்பிக்கும் சின்னஞ் சிறுவனுக்கும் பயன்படுகிறது. அயல் நாட்டுச் செலாவணி சம்பாதிக்கவும் உபயோகமாகிறது.

வஸந்தத்தில் உல்லாசமாயிருக்க



இன்பமகரமான வஸந்த காலத்திற்கு ...
இந்த பாடா ஸாண்டல்களும் செருப்புகளும் நடக்கும்போது இன்பம் தரும்படியாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சுறுசுறுப்புடனும் மிகச் சௌகரியத்துடனும் நீங்கள் இருக்க வென்றே அமைக்கப்பட்டிருப்பதை, இவற்றின் ஒழுங்கு, பிரியமிகுந்த — ஸ்டைல் ஆகியவை மூலம் கண்டு கொள்ளுவீர்கள். மென்மைமிகு தோலாலான மேற்பாகத்திலிருந்து பாதத்தைக் கழற்றத் தோன்றாது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் மெத்தென்று நடந்திட உள் அடிப்பாகக் குஷன்கள் ... கீழ்க்காண்கின்ற ஸ்டைல்கள் உங்களுக்குப் பிடித்தமான பாடா ஸ்டோரிலே கிடைக்கின்ற அழகான பல வகைகளில் சிலவாகும்.

வந்து ஒருஜோடி வாங்கி
பரீட்சைசெய்து பாருங்கள்



அலெம்பிக் என்றதுமே மருந்துகளின் நினைவு எவருக்கும் எழும். மருந்துத் தயாரிப்பில் ஆரம்பித்த இந்தத் தொழிலகம் விரைவில் அந்த மருந்துகளை நிரப்பித் தரத் தேவையான பாட்டில்களையும் தயாரிக்கத் தொடங்கியது. இன்ஜெக்ஷன் மருந்துக்கான சிறு குப்பி முதல் டானிக்குக்குத் தேவையான பெரிய பாட்டில்கள் வரை பல ரக பாட்டில்களைப் பல வர்ணங்களில் தேவைக்கேற்பத் தயாரிக்கிறது அலெம்பிக் ஸ்தாபனம். இவை தவிர விவசாயத்துக்குத் தேவையான ரசாயனப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறது.

ரேயான் முதல் ரேடியோ வரை

டி. ஸி. எம். என்ற எழுத்துக்கள் டில்லி க்ளாத் மில்ஸ் என்பதைத்தான் குறிக்கும். ஆனால் இன்று அவர்கள் துணிமணி தயாரிப்புடன் நின்றுவிடவில்லை. வளரும் இந்தியாவின் வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப இந்தத் தொழிலகமும் பல துறைகளில் வளர்ந்து விட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகள், பிளாஸ்டிக் பொருள்கள், வனஸ்பதி, ரசாயன உரம் போன்ற பலவிதப் பொருள்களை உற்பத்தி செய்கிறது டி. ஸி. எம். ஸ்தாபனம்.

மவுண்ட் ரோடில் மையமான இடத்தில் உள்ள மஹமட் இப்ராஹிம் கம்பெனியார் மர்பி ரேடியோக்களின் விற்பனை உரிமை பெற்றவர்கள். ஆகவே, இவ்விருவருமாகச் சேர்ந்து அமைத்துள்ள அரங்கத்தில் விதம் விதமான மர்பி ரேடியோக்களையும் மகமட் இப்ராஹிம் கம்பெனியாரே தயாரிக்கும் நகல் எடுக்கும் கருவி போன்றவற்றையும் காணலாம். அவர்கள் விற்பனை உரிமை பெற்றுள்ள ராலிஸ் டேபிள் ஃபான் போன்றவையும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

பாரி

பாரி முனை என்பது வள்ளல் பாரியைக் குறிக்கவில்லை; அயல் நாட்டிலிருந்து வந்த பாரியைக் குறிக்கிறது என்பது சென்னை வாசிகளுக்குத் தெரியும். அவரும் ஒரு விதத்தில் வள்ளல்தான். தமிழகத்தில் தொழில் வளம் பெருக ஆதி நாளிலேயே அடிகோலியவர் அவர். பாரி மிட்டாய்கள் அனைவரும் அறிந்த ஒன்று. மிட்டாய்களுக்குத் தேவை சர்க்கரை. ஆகவே சர்க்கரை ஆலை யொன்றை நிறுவினார்கள். சர்க்கரை ஆலைக்குத் தேவை கரும்பு. கரும்புப் பயிருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள். ரசாயன உரமும் நல்ல விதைப் பண்ணைகளும் உருவாக்கித் தந்தார்கள். நீர் இறைக்கும் இயந்திரங்களை விநியோகித்தார்கள். இப்படிப் படிப்படியாக வளர்ந்து கொண்டே போயிற்று பாரி அண்ட் கம்பெனியின் அலுவல்கள். இவையெல்லாவற்றையும் விட மற்ற பல தொழிலகங்கள் தயாரிக்கும் பொருள்களை நாடு முழுவதும் கடைக்குக் கடை கொண்டு போய் விநியோகிக்கும் பெரும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ள பாரி அண்ட் கம்பெனி, மேல் நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகமும் நடத்துகிறது.

பாரி அண்டு கம்பெனி அரங்கில் குழந்தைகளைக் கவரக் கூடியது அங்குள்ள பொம்மைக் குடை ராட்டினம். பெரியோரையும் கவரக் கூடியது மிட்டாய்களுக்குத் தாள் சுற்றித் தள்ளும் யந்திரம்.

கே. ஸி. பி.

கே. ஸி. பி. அல்லது கிருஷ்ணா கன்பெக்ஷனரி பிராடக்ட்ஸ் என்பதும் மிட்டாய்களுக்கெனத் தொடங்கிய ஸ்தாபனம்தான். அதைத் தானே பெயரும் உணர்த்துகிறது. ஆனால் கே. ஸி. பி. என்பதன் அர்த்தம் என்ன என்று கேட்டால் இங்கு பணியாற்றுபவர்களுக்கே அது சரியாகத் தெரியாத அளவுக்கு இந்த நிறுவனம் வளர்ச்சியுற்றிருக்கிறது. சர்க்கரைத் தயாரிப்புடன் சர்க்கரை ஆலைக்குத் தேவையான இயந்திரங்களைக் கூட உருவாக்கக் கூடிய தொழில் திறன் பெற்று விளங்குகிறது. விவசாயத்துக்கு உதவுவதுடன் விஞ்ஞானிக்கும் உதவும் வகையில் எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர்கள் தயாரிக்கும் துறையிலும் அடியெடுத்து வைத்திருக்கிறது. ஆகவே, ''கே. ஸி. பி. என்ற எழுத்துக்கள் எதைக் குறிக்கும் என்கிறீர்களா? கே. ஸி. பி. என்றால் கே. ஸி. பி.தான்'' என்று இங்குள்ள ஒருவர் சொன்னபோது வியப்பு ஏற்படவில்லை.

இரவு நேரத்தில் ஏராளமான விளக்குகளின் ஒளியில் ஜகஜ்ஜோதியாகத் திகழ்கிறது அகில உலகப் பொருட்காட்சி. அயல்நாட்டு நண்பரொருவருக்குச் சென்ற 15ந் தேதி மாலை கண்கொள்ளாக் காட்சியைச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தபோது, ''அதோ தென்படுகிறதே உருண்டையாக ஒரு விளக்கொளி, அது என்ன தெரிகிறதா?'' என்று கேட்டோம். ''தெரியவில்லையே!'' என்றார் அவர்.

''அதுதான் சந்திரன்'' என்றதும் ஏமாந்தவர் உள்பட அனைவரும் சிரித்தோம்.



இளங்குஞ்சு பயமறியாது!


இளம் குஞ்சுகள் பயம் அறியாது. புது உலகம் அழகாகவும் சந்தோஷமாகவும் இருப்பதாக எண்ணிக் குதூகலிக்கின்றன. ஆனால், பின்னால் இருப்பதோ துன்பம், தொல்லைகள். இவைகளை அவற்றால் எப்படி அறிய முடியும்? ஆயினும் புகைப்படக் கலைஞர் ஏ. எம். ஹுசைன் பதுங்கியிருக்கும் துன்பத்தையும் லாகவமாகப் படமெடுத்து நமக்கு உணர்த்துகிறார் பொருளடக்கப் பகுதியிலே.

இனிமைக் காவியம்



இதயம் திறந்த பேச்சினிலே
புத்தம் புதிய இரகசியங்கள்—
துர்க்கந்தம் அகற்றும் க்லோரோபைல்
கொண்ட பினகா க்ரீன் துணையிருப்பின்:
பேசும் பேச்செல்லாம்
இனிமைக் காவியமே!





மகாபாரதம்

ராஜாஜி

12. கர்ணன்

பாண்டவர்களும் திருதராஷ்டிர புத்திரர்களும் முதலில் கிருபாச்சாரியரிடமும் பிறகு துரோணரிடமும் ஆயுதப் பயிற்சி பெற்றார்கள். ஒரு நாள் நகர ஜனங்களையெல்லாம் அழைத்து ஆயுதப் பயிற்சிப் பரீட்சையும், போட்டியும் ஏற்பாடு செய்தார்கள். விழாவில் பெருங் கூட்டம் கூடிவிட்டது; 'எல்லோரைக் காட்டிலும் அதிக அற்புதமாக அர்ச்சுனன் தன் திறமையைக் காட்டி, திரண்டு கூடியிருந்த மக்களைப் பிரமிக்கச் செய்து கொண்டிருந்தான். துரியோதனனுக்குத் தாங்க முடியாத பொறாமை பொங்கிற்று.

அச்சமயத்தில் திடீரென்று யாரோ தோள் தட்டிக்கொண்டு வரும் சத்தம் வாயிற் பக்கத்திலிருந்து வந்தது. எல்லோரும் சத்தம் வந்த திக்கை நோக்கினார்கள். ஜனக்கூட்டம் வழிவிட்டு விலக, தேஜஸ் வீசும் தோற்றம் கொண்ட வாலிபன் ஒருவன் சபையில் நுழைந்தான். அவனே கர்ணன்.


சகோதரன் என்பதை அறியாமல் அர்ச்சுனனைப் பார்த்து, ''அர்ச்சுனா! நீ என்னவெல்லாம் செய்து காட்டினாயோ அதற்கு மேற்பட்டதாக நான் செய்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் ஜனக்கூட்டம் உடனே எழுந்து ஆரவாரித்தது. துரியோதனனுடைய பொறாமை நிறைந்த மனத்தில் சந்தோஷம் தோன்றிற்று. கர்ணனைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''என்னையும் என் ராஜ்யத்தையும் நீ இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம்'' என்று மெதுவாகச் சொன்னான்.

''பிரபுவே! நான் அர்ச்சுனனுடன் யுத்தம் கோரி வந்தேன். நீர் காட்டிய பிரியத்துக்கு என்றென்றைக்கும் நன்றியுள்ளவனாக இருப்பேன்'' என்றான் கர்ணன்.

கர்ணன் அறைகூவியதைக் கேட்டு அருச்சுனனுக்குக் கோபம் பொங்கி, ''கர்ணா! சபைக்கு அழைக்கப்படாமல் வந்தவர்களும் கேட்கப்படாமல் பேசுகிறவர்களும் இகழப் படுவார்கள்!'' என்று கொடுமையாகப் பேசினான்.

''பல்குனா! இந்தச் சபை எல்லோருக்கும் பொது. உனக்கே உரிமையானதல்ல. ராஜ தருமமும், பலத்தைப் பின் தொடர்ந்து செல்லுகிறது. வெறும் பேச்சில் என்ன பயன்? பாணங்களைக் கொண்டு பேசு'' என்றான் கர்ணன்.



இவ்வாறு கர்ணன் அர்ச்சுனனை யுத்தத்துக்கு அழைத்ததும் ஜனக்கூட்டம் குதூகலம் கொண்டு இரண்டு கட்சியாகப் பிரிந்தது. ஸ்திரீகளிலும்கூட இரண்டு பிரிவுகள் உண்டாயிற்று என்று வியாசர் சொல்லுகிறார். உலகம் எப்போதுமே இம்மாதிரிதான் என்பதைக் காணலாம்.

கர்ணனைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்ட குந்தி மூர்ச்சை அடைந்தாள். விதுரன் அவளை வேலைக்காரிகளைக் கொண்டு உபசரித்துத் தேற்றினான். அவள் ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்தாள்.

பிறகு கிருபாச்சாரியார் கர்ணனைப் பார்த்து, ''பாண்டுபுத்திரனும் குருவம்சத்தைச் சேர்ந்தவனுமான அருச்சுனன் தொந்த யுத்தத்துக்குத் தயாராக இருக்கிறான். வீரனே! நீயும் உன் தாய் தந்தையர் யார், நீ எந்த ராஜகுலத்தை அலங்கரிக்கிறாய் என்பதை எடுத்துச் சொல்வாயாக. குலமும் குலாசாரமும் தெரிந்து கொள்ளாமல் ராஜகுமாரர்கள் சம யுத்தம் செய்ய மாட்டார்கள்'' என்று சொன்னார்.


இந்தச் சொல்லைக் கேட்ட கர்ணன் மழையில் நனைந்து வணங்கிய தாமரை மலரைப் போல் தலைகுனிந்தான். வெட்கத்தினால் முகம் வாடிற்று.

துரியோதனன் உடனே எழுந்து, ''நான் கர்ணனை அங்க தேசத்தின் ராஜாவாக இந்த க்ஷணமே அபிஷேகம் செய்வேன்'' என்று சொல்லி, பீஷ்மரையும் திருதராஷ்டிரனையும் அனுமதி கேட்டு சாமக்கிரியைகளை அங்கேயே வரவழைத்துக் கிரீடம், ஹாரம் சிங்காசனம் முதலியவைகளை யெல்லாம் அமைத்துக் கர்ணனை அங்கதேச ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்வித்தான். அந்தச் சமயத்தில் அவ்விடத்திலேயே கர்ணனை வளர்த்த தேரோட்டிக் கிழவன் பயத்தினால் நடுங்கிக்கொண்டும் தடி ஊன்றிக் கொண்டும் சபையில் பிரவேசித்தான்.

அவனைப் பார்த்ததும் அங்க தேசாதிபதியாக அபிஷேகம் செய்யப்பட்ட கர்ணன் பிதாவிடமுள்ள மரியாதைக்குக் கட்டுப்பட்டு வில்லைக் கீழே வைத்து விட்டுத் தலை வணங்கி நமஸ்கரித்தான். அவனும், ''புத்திரனே!'' என்று சொல்லிக் கர்ணனைக் கட்டிக்



நடக்க முடியாதவர்களுக்காக நடந்தார்



ஆஸ்திரேலியாவில் உள்ள ஸிட்னியி லிருந்து மெல்போர்ன் நகரம் வரை ஒருவர் நடந்து சென்றார். இந்த இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 557 மைல். இவ்வளவு தூரத்தையும் நடந்தே கடந்தார், 'பில்பீம்' என்ற அந்த இருபத்தெட்டு வயது இளைஞர். பதினொரு நாட்கள் 23 மணி, 43 நிமிஷங்களில் அவர் தம் பயணத்தை முடித்தார். இந்தப் பயணத்தின் நோக்கம்? ''மெல்போர்னிலுள்ள 'யோரல்லா' ஆஸ்பத்திரியில் நடக்க முடியாமல் இருக்கும் அங்கஹீனக் குழந்தைகளுக்கு நிதி வசூலிக்கத்தான் நான் நடந்தேன்'' என்கிறார் பில்பீம்.

ஆதாரம் : ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்''
தகவல் : சரோஜா ராமச்சந்திரன்

பிடித்துப் பந்தை எடுத்துக் கொடுத்தார்.

மிக்க ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கொண்ட ராஜகுமாரர்கள் மோதிரத்தையும் எடுக்கச் சொன்னார்கள். துரோணர் ஓர் அம்பை எடுத்து வில்லில் தொடுத்துக் கிணற்றில் எய்தார். அது மோதிரத்தைக் குத்தி மேலே கிளப்ப, பிராமணர் மோதிரத்தை எடுத்துக் கொடுத்தார்.

இந்தச் செயலைப் பார்த்து வியந்து, ''பிராமணரே! நமஸ்காரம். நீர் யார்? உமக்கு எங்களால் ஆகக்கூடியது ஏதேனும் உண்டா?'' என்று ராஜகுமாரர்கள் அவரை வணங்கினார்கள்.

''ராஜகுமாரர்களே, பீஷ்மரிடம் சென்று நான் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள்'' என்று சொல்லி அவர் அனுப்பினார்.

ராஜகுமாரர்கள் சொன்ன குறிகளினின்று பீஷ்மர், அவர்கள் கண்ட பிராமணர் புகழ் பெற்ற துரோணர் என்று தெரிந்து கொண்டு, பாண்டவ கௌரவர்களுக்கு இனி கொடுக்க வேண்டிய பயிற்சியைத் தரக்கூடிய ஆசாரியர் அவரே என்று தீர்மானித்தார். துரோணரை விசேஷ மரியாதையுடன் அழைத்து ராஜகுமாரர்களை அவரிடம் ஆயுதப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொள்ள அமைத்தார்.

கௌரவ பாண்டவர்களுக்கு ஆயுதப் பயிற்சி தந்து முடிந்ததும் துரோணர், குரு தட்சிணையாகத் துருபதனை உயிரோடு பிடித்து வரவேண்டும் என்று கர்ணனையும் துரியோதனனையும் அனுப்பினார். அவர்களும் சென்றார்கள். ஆனால் அது அவர்களால் முடியவில்லை. அதன்பின் அருச்சுனனுக்குக் கட்டளை இட்டார். அவன் போய் யுத்தம் செய்து துருபதனை மந்திரியுடன் பிடித்து வந்து துரோணரிடம் சமர்ப்பித்தான்.

அப்போது துரோணர் புன்னகையுடன் துருபதனைப் பார்த்துச் சொன்னார்: ''வீரனே! உன் உயிருக்கு அபாயம் வந்தது என்று பயப்படாதே. பால்யத்தில் என்னோடு விளையாடிச் சிநேகமாக இருந்து பிறகு என்னை மோசமும் அவமானமும் செய்தாய். ராஜாவுடன் சிநேகம் செய்ய வேண்டுமானால் ராஜாவாக இருக்க வேண்டும் என்றாயிற்று. ஆனால், நான் மறுபடியும் உன்னுடன் சிநேகத்தையே விரும்புகிறேன். பாதி ராஜ்யத்தை உனக்கே கொடுக்கிறேன். என்னுடன் நீ சிநேகிதனாக இருப்பதற்கு உனக்கும் சமராஜ்யம் வேண்டுமல்லவா? ஆகையால் கொடுக்கிறேன்; வைத்துக் கொள்.''

துருபதன் தம்மை அவமதித்துச் சொன்ன சொல்லைத் துரோணர் இவ்வாறு ஞாபகப்படுத்தினார். துருபதன் வெட்கம் மேலிட்டுத் தலை வணங்கி நின்றான். அவமானப்படுத்தினது—போதும் என்று துரோணரும் அவனுக்கு எல்லா மரியாதைகளும் செய்து அனுப்பினார்.

ஃ ஃ ஃ

துருபதனுடைய கர்வம் இவ்வாறு அடங்கிற்று. கோபமும் க்ஷாத்திரமும் பழிக்குப் பழி வாங்கி முடிவடைவதில்லை. வளர்ந்து கொண்டே போகும். அதனாலேயே அவனுடைய க்ஷாத்திரம் அதிகமாயிற்று. துரோணரைக் கொல்லக் கூடிய ஒரு மகனும் அருச்சுனனை மணம் புரியக்கூடிய ஒரு மகளும் தனக்கு உண்டாக வேண்டும் என்று அநேக விரதங்களிருந்து அவ்வாறே திருஷ்டத்யும்னனையும் திரௌபதியையும் பெற்றான். திருஷ்டத்யும்னனே பின்னால் பாரத யுத்தத்தில் எவராலும் எதிர்க்க முடியாத துரோணரை எதிர்த்துக் கொன்றது. இது யுத்த காண்டத்தில் வரும். (தொடரும்)

மொழிக் குழப்பத்தின் சிகரம்!

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த உலகில் மொழிக் குழப்பம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இன்றைய மொழிக் குழப்பம் மனிதர்களால் ஏற்பட்ட ஒன்று. ஆனால் அன்று ஏற்படுத்தப்பட்ட மொழிக் குழப்பம் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டது !

ஆம் ! அப்படித்தான் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களின் வேதநூலாகிய பைபிள் கூறுகிறது. பைபிளில் உள்ள கதை ஒன்றில் நிம்ராட் என்ற மன்னன் ஒருவன் தனது பராக்கிரமத்தையும் பெருமையையும் பாரெங்கும் பறைசாற்ற எண்ணி உலகிலேயே மிக உயரமான, சொர்க்கத்துக்கே செல்லக்கூடிய கோபுரம் ஒன்றை உருவாக்கத் துணிந்தான். அவனது அகங்கார மிக்க ஆணைப்படி லட்சக்கணக்கான மக்கள் அந்த மாபெரும் கோபுரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் வேளையில் தன்னால் படைக்கப்பட்ட மனித ஜீவனின் மமதையையும் அகங்காரத்தையும் கண்டு வெகுண்ட இறைவன் அதுவரை மன்னன் நிம்ராடும் அவனது பணியாட்களும் பேசிக் கொண்டிருந்த மொழிக்குப் பதிலாக ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான மொழியைப் பேசும்படி செய்து விட்டார். அதன் பலனாக ஒருவர் பேசுவது ஒருவருக்குப் புரியாமல் அனைவரும் குழம்பினர். அதனால் சொர்க்கத்தை அடைய மனிதன் செய்த 'கன்னி' முயற்சி பரிதாபகரமாகத் தோல்வியுற்றது. குழப்பத்தை ஏற்படுத்திய காரணத்தால் அக்கோபுரம் (Tower of Babel) எனப் பைபிளில் இடம் பெற்றது.

மனிதர்களின் மமதை இறைவனால் அழிக்கப்பட்ட இந்தத் 'திருவிளையாடலை'—பைபிள் இருநூற்றைம்பது சொற்களில் விவரிக்கிறது. ஆனால் இதைத் திரைப்படமாக்கப் 'பைபிள்' என்ற பிரம்மாண்டமான திரைப் படத்தின் தயாரிப்பாளரான டிரோ டிலாரண்டிஸ் என்பவருக்கு ஆறு மாதங்களாயின.

திரைப்படத்தில் ஒரு பிரம்மாண்டமான கோபுரத்தையே காண்பிக்க வேண்டுமாதலால் நிஜமாகவே ஒரு பேபல் கோபுரம் படத்தின் கலை இயக்குநரால் உருவாக்கப்பட்டது. நூற்றி இருபத்தைந்து அடிகள் உயரமுள்ள இந்தக் கோபுரத்தை உருவாக்க முப்பது லட்ச ரூபாய்கள் செலவாயின.



கோபுரத்தைக் கட்டும் பணியாளர்களாக 3500 துணை நடிகர்களும் நிம்ராட் மன்னனாக நடிகர் ஸ்டீபன் பாயிடும் நடித்துள்ள இந்தப் 'பேபல் கோபுரக் கதை' இருநூற்றிருபது நிமிடங்கள் ஓடும் 'பைபிள்' திரைப்படத்தில் பதினைந்தே நிமிடங்கள்தான் இடம் பெறுகின்றது !

ஆனால் நடிகர்களின் சன்மானம், கோபுரம் கட்டுவதற்கான செலவு, பயன்படுத்தப்பட்ட திரைப்படச் சுருளின் மதிப்பு—இவற்றையெல்லாம் சேர்த்தால் இந்தப் 'பதினைந்து நிமிடங்களுக்கு' எழுபத்தைந்து லட்ச ரூபாய் செலவாயிற்றாம் !

— அ. இராமதுரை

உதய நகரம்



ஜெட் விமான யுகம் இது. உலகத்தின் பல பாகங்கள் இதனால் வெகு சமீபத்தில் நெருங்கி வந்து விட்டன. ஆனால் உலகமே சிறிய அளவாகி ஒரே இடமாக, ஏன் ஒரே ஊராக மாறிவிடப் போகிறது என்று யாரும் சொன்னால் அது வெறும் கனவு என்று சிலர் ஒதுக்குவார்கள். லட்சியக் கற்பனை என்று பலர் அலட்சியம் செய்வார்கள்.

ஆனால் அசல் கனவிலேயே உதித்த இந்த யோசனை நிஜமாகவே மாறும் தருணத்தில் இருக்கிறது என்றோ, அந்த லட்சிய உலகம் ஒரே ஊராக 'ஆரோவில்' என்ற பெயரில் பாண்டிச்சேரி நகருக்கு வடக்கே மூன்று மைல்கள் தூரத்தில் நிர்மாணிக்கப்பட ஆயத்தங்கள் முழு மூச்சுடன் எடுக்கப்பட்டுள்ளன என்றோ பலருக்கும் இன்னும் தெரியாமல் இருக்கலாம்!

சுமார் ஐம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஃபிரெஞ்சு நாட்டு யுவதி கண்ட கனவு இது. அந்த யுவதிதான் பாண்டிச்சேரியிலுள்ள அரவிந்த ஆசிரமத்தில், 'அன்னை'யாக வந்து சேர்ந்தார். அந்த அரவிந்த ஆசிரமத்தையே ஒரு மிகச் சிறிய ஐக்கிய உலகமாக மாற்றப் பரிசோதனை செய்து வெற்றி கண்டவர். அந்த வெற்றிதான், அந்த ஆசிரமச் சூழ்நிலைதான் இப்போது 'ஆரோவில்' நகரமாகச் சுமார் பதினைந்து சதுர மைல் பரப்பளவில் பரிணமித்துக் கொண்டிருக்கிறது.

வட்ட வடிவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்த லட்சிய நகரம் நான்கு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். தொழிற் பகுதி, குடியிருப்புப் பகுதி, கலாசாரப் பகுதி, அனைத்துலகப் பகுதி ஆகிய இந்த நான்கு பிரிவுகளும் நவீன சாதனங்கள் அனைத்தையும் உபயோகப்படுத்தி எழுப்பப்படும். தொழிற் பகுதியில் விவசாய ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் கால்நடை வளத்துக்கும் நிறைய இடமுண்டு. குடியிருப்புப் பகுதி தோட்டங்கள் சூழ்ந்த தனித் தனிக் குடில்களாக விளங்கும். கலாசாரப் பகுதியில் உலக சர்வகலாசாலை, கலைக் கூடங்கள், கலை அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள் எல்லாம் இடம் பெறும். அனைத்துலகப் பகுதியில், ஒவ்வொரு தேசத்துடைய மரபும் தனித் தன்மையும் நிறைந்த காட்சிக் கூடங்கள், ஐக்கிய நாட்டுச் சபை மண்டபத்தில் இருப்பது போன்ற சமாதானக் கூடம் முதலியன இடம் பெறும்.

இந்த நான்கு பகுதிகளும் சேரும் இடத்தில் நடு மையமாக ஏரியால் சூழப்பட்ட 'ஒற்றுமை'த் தோட்டமும் 'அன்னையின்' கோவிலும் இருக்கும். 'அறிவு, சமாதானம், ஒற்றுமை ஆகிய மூன்றின் எதிர்காலத்தையும் நோக்கி விரைந்து செல்ல விரும்புகிறவர்களுக்கான புகலிடமாக ஆரோவில் விளங்கும்' என்ற வாசகம் பொருந்திய கல் தான் அந்த ஏரிக் கரைத் தோட்டத்தில் நிறுவப்படும்.

இந்த அற்புத ஆரோவில் நகரத்தில் குடியேற நிபந்தனை ஒன்றுண்டு. 'மனித குலத்தின் ஒற்றுமையிலும், அந்த ஒற்றுமையை உருவாக்க வேண்டிய திடசித்தத்திலும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும்' என்பதுதான் அந்த நிபந்தனை. இந்த நிபந்தனைக்கு உட்பட்டு இங்கு வந்து வசிக்க விரும்புவோர்களின் விண்ணப்பங்களை அரவிந்த ஆசிரமத்து 'அன்னையார்'தான் பரிசிலனை செய்கிறார்கள். உலகின் பல பாகங்களிலிருந்து வந்து குவியும் விண்ணப்பங்களில் ஏற்கனவே நூற்றி ஐம்பது விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டன.

இங்கே 'யுத்தம்' என்ற பதத்துக்குத் துன்பங்களையும் துயரங்களையும் தோல்வியுறச் செய்வது என்றுதான் பொருள். 'அதிகாரம்'

என்ற பதத்துக்குச் சத்தியம் என்றுதான் பொருள். தன வலிமைக்கு இங்கே இட மில்லை. சபலத்தையும் அறியாமையையும் விரட்டக் கூடிய மனவலிமைக்குத்தான் இட முண்டு. பிழைப்பின் தேவையைக் கொண்டு உழைப்பின் அளவு மதிக்கப்பட மாட்டாது. சமூகத்தை உயர்த்தும் நோக்கில்தான் உழைப் பின் அளவு கணிக்கப்படும்.

இந்த ஆதர்ச நகரத்தின் நிர்மாண வேலைகள் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்த கட்டிடக் கலை நிபுணரான ரோகர் ஆங்கர் மேற்பார்வையில் தொடங்கி விட்டது. பல வெளிநாட்டினர் ஊதியத்தின் மதிப்பை மனத்தில் கொள்ளாமல் இங்கு பணி புரிய வந்து விட்டார்கள். மேலை நாட்டுப் பாணி யில் ஆறு 'மாதிரி' வீடுகள், ஒரு சிற்றுண்டிச் சாலை, ஒரு பிரசவ விடுதி எல்லாம் உருவாகி விட்டன. முதல் இரண்டு 'ஆரோவில்' பிரஜைகளை உலகுக்கு அளிக்கும் அதிருஷ் டத்தை இந்தப் பிரசவ விடுதி பெற்று விட்டது. ஒரு ஜெர்மானியக் குடும்பத் திலும், ஓர் இத்தாலியக் குடும்பத்திலும் பிறந்திருக்கும் இரண்டு ஆண் குழந்தை களுக்கு முறையே 'ஆரோசான்' 'ஆரோ பினியோ' என்ற பெயர்களையும் சூட்டி யிருக்கிறார்கள்!

சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் வசிப்பதற் கென்று கட்டப்பட விருக்கும் இந்த நக ருக்குப் பிரத்தியேகத் துறைமுகம், விமான தளம், உலக வியாபாரச் சந்தை, கூட்டுப் பிரார்த்தனை மண்டபம் எல்லாமே உண்டு. நவீன வசதிகள் அனைத்தும் இங்கு உப யோகத்தில் இருக்கும்.

இருபத்தி ஐந்து நாடுகளில் பரவி வசிக்கும் எத்தனையோ அரவிந்த ஆசிரம அபிமானி களும், ஐக்கிய நாட்டுச் சபையின் பொரு ளாதார, விஞ்ஞான, கலாசாரப் பிரிவும், மத்திய அரசாங்கமும், மற்ற மாநில அர சாங்கங்களும் இந்தத் திட்டத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

'ஆரோவில்' என்றால் 'உதய நகரம்' என்று பொருள். இந்த நகரத்துக்கான சம்பிரதாய அடிக்கல் நாட்டு விழா இம்மாதம் இருபத்தி எட்டாம் தேதி நடக்கவிருக்கிறது. உலகின் பல நாடுகளிலிருந்தும் இந்த விழாவில் பங் கெடுத்துக் கொள்ள வரும் வாலிபர்களும் யுவதிகளும் நாட்டுக்கு இருவராக, தங்களுடன் தங்கள் நாட்டு மண்ணை ஒவ்வொரு கைப்பிடி கொண்டு வருவார்கள். அந்த வெவ்வேறு நாட்டு மண்ணை, விசேஷமாகச் செதுக்கப் படும் அஸ்திவாரக் கல்லின் தோண்டப்பட்ட உட்பகுதியில் ஒன்றாகக் கலந்து போட்டு, அந்தக் கல்லைப் பயன்படுத்தவிருக்கிறார்கள். உலகம் ஒரே ஊருக்கு வந்துவிட்டது என் பதற்கு இந்த ஏற்பாடே சான்றாகும்!

வெகு விரைவிலேயே, இந்த லட்சிய 'ஆரோவில்' நகரம் திட்டப்படி எழுந்து, தான் இடம் பெற்ற தமிழ் நாட்டுக்கும், பாரதத்துக்கும், அனைத்துலகுக்கும் பெருமை தேடித் தரும் என்று நிச்சயமாக நம்பலாம்!

ஆரோவில் உலக ஆரோக்கியத்துக்கு ஒரு கோயில். அறிவுக்கும் அன்புக்கும் ஓர் ஆலயம். மனித குலத்தின் ஐக்கிய பாவத் துக்கு ஆண்டவனின் சன்னதி என்று வரும் காலம் நிச்சயமாக எடுத்துக் காட்டும்.

—பட்டினத்தார்

சினிமா

நகரமே நன்றி!

சென்னைச் சூழலிலே தயாரிக்கப்பட்டிருந் தாலும், 'நகரத்துக்கு ஒரு கும்பிடு' போடும் இந்த மலையாளப்படம் கட்டாயம் மன ஆறுதலை அளிக்கும். காரணம், அன்றாட வாழ்வைக் கலைக் கண்ணோடு நோக்கிக் குன்றாச் சுவை கூட்டி அற்புதமான திரை யோவியமாக்கி யிருக்கிறார்கள். பல இடங்களில் படத்தை ரசி கர்கள் மூன்றுமவராக நின்று பார்க்கவில்லை. அதே போல் நடிகர்களும் பாத்திரங்களையும் தங்களையும் பிரித்து நடிக்கவில்லை சிறு சிறு பாத்திரமாயிருந்தாலும் பொறுப்பாக ஏற்றுப் பெயர் வாங்கி யிருக்கிறார்கள்.




மிஸஸ் முதலியாரின் பொது நலத் தொண்டைப் புறப்பட்ட மாகக் கொண்டு இயங்கும் ஒரு சில காட்சிகள் மட்டும், மலை யாளம், தமிழ் நாட்டுக்கு வெகு அருகில் இருக்கிறது என்பதை நினைவுபடுத்து கின்றன. ஆயினும் ஸ்ரீ வின்சென்டின் கற்பனைச் செறிவு நிறைந்த டைரக்ஷனும், ஸ்ரீ வேங் கட்டின் அற்புதங்கள் புரியும் காமிராவும் குறைகளை நிறைவாக்கிக் காட்டுகின்றன. இசையோடு ஸ்ரீ எம். டி. வாசுதேவன் நாய ரின் கதை — வசனமும் இழைந்து மெரு கூட்டுகின்றன.


தமிழ் நாட்டு ரசிகர்கள் 'நகரமே நன்றி' போன்ற மலையாளப் படங்களுக்கு ஆதரவு தரத் தொடங்கினால், தமிழ் நாட்டுத் திரை உலகம் நித்திரை கலைந்து நிமிர்ந்து உட்கார வேண்டிய நிலை ஏற்படும். மனசிலே ஆயோ?



இன்றைய அமெரிக்க ஜனாதிபதி பதவிப் பிரமாணம் ஏற்றது, விமானமேறி வானத்தில் பறந்து கொண்டிருந்த போது. அருகிலேயே, சில நிமிஷங்களுக்கு முன்னர்தான் இறந்து போன கென்னடியின் புகழுடல் இருந்தது.


ஜனாதிபதியின் பதவிப் பிரமாண வைபவத்தில் இதுபோன்ற எத்தனையோ பல விசித்திரங்கள் நடந்திருக்கின்றன, அமெரிக்கச் சரித்திரத்திலே.







திடீர் ஜனாதிபதி



முப்பத்தைந்தே வார்த்தைகள் கொண்ட அந்தப் பதவிப் பிரமாணத்தை ஏற்பதற்கு ஒரு நிமிடம்தான் ஆகிறது. ஆனாலும் வரலாற்றில் இடம் பெறக் கூடிய நிகழ்ச்சியாகக் காலப்போக்கில் அது அமைந்துவிட்டபடியால் அது இன்று ஒரு விழாவாகவே கொண்டாடப்படுகிறது. 1789ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முப்பதாம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டன் நியூயார்க் நகரில் தமது பதவிப் பிரமாணத்தை ஏற்றுக்



1. கென்னடி
2. ஜேம்ஸ்மாடிசன்
3. வாஷிங்டன்
4. ஜான்ஸன்
5. ஆபிரகாம்லிங்கன்
6. ரூஸ்வெல்ட்








7. ஜான்டைலர்
8. கால்வின்கூலிட்ஜ்
9. தாமஸ்ஜபர்சன்

வேண்டும் என்றிருந்தது. ஏனெனில் அந்த நாள் ஒன்றில்தான் ஞாயிற்றுக் கிழமை வருவதில்லை. ஆகி னும் 1821ம் ஆண்டில் மன்றோ, 1849ல் டெய்லர்,

10. ஆண்ட்ருஜாக்சன்



வுட்ரோவில்சன் 11.
ட்ருமன் 12.





கொண்டபோது அவரை எப்படி அழைப்பது என்று யாருக்குமே தெரியவில்லை. ''மேன்மை தங்கிய'' ''மகாகனம்பொருந்திய''; ''மாண்புமிகு'' போன்ற சிறப்புச் சொற்றொடர்கள் பலரால் கூறப்பட்டபோதிலும் அவை வாஷிங்டனுக்குப் பிடிக்கவில்லை. அச்சமயம் வாஷிங்டனுக்குப் பதவி ஏற்புப் பிரமாணத்தை நடத்தி வைத்த நியூயார்க் நகர நீதிமன்ற வழக்கறிஞர் லிவிங்ஸ்டன் என்பவர், அந்த நிகழ்ச்சி முடிவடைந்ததும், 'ஜார்ஜ் வாஷிங்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி, நீண்ட நாள் வாழட்டும்' என ஆசீர்வதித்தார். அதன் பின் அமெரிக்கத் தலைவரை ''திருவாளர் ஜனாதிபதி'' (Mr.President) என்றே அழைக்க முடிவு செய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவி ஏற்பு விழாவை மார்ச் மாதம் நான்காம் நாளன்றுதான் நடத்த

1877ல் ஹேயஸ், 1917ல் வுட்ரோ வில்ஸன் ஆகியோர் பதவி ஏற்றபோது மார்ச் 4ம் நாள் ஞாயிற்றுக்கிழமையாகத்தான் இருந்தது! ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்துவர்களால் ஓர் ஓய்வு நாளாகக் கருதப்பட்ட காரணத்தால் அவர்கள் திங்கட்கிழமையன்று பதவி ஏற்றனர்.

இந்த ஏற்பாட்டின் பலனாக ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. 1849ல் ஜாக்கரி டெய்லர் என்பவர் மார்ச் 4ம் நாள் ஞாயிற்றுக் கிழமையாக இருந்த காரணத்தால் அன்று பதவி ஏற்க விரும்பாமல் திங்கட்கிழமை மாலை ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அதனால் அமெரிக்க நாட்டுச் சட்டப்படி சட்டமன்ற உறுப்பினர் டேவிட் அட்சிஸன் என்பவர் ஒரே ஒரு நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தாற்காலிக ஜனாதிபதியாகப் பதவி ஏற்க நேரிட்டது. பின்னும் அமெரிக்க ஜனாதிபதியாக

இருந்த பிராங்ளின் ரூஸ்வெல்ட், தேர்தலுக்கும் புதிய ஆட்சியை அமைப்பதற்கும் உள்ள நீண்ட கால இடைவெளியைக் குறைப்பதற்காக வேண்டி அமெரிக்க ஜனாதிபதியின் பதவி ஏற்பு நாளை ஜனவரி இருபதாக மாற்றினார். அன்று முதல் இன்று வரை ஜனவரி 20ம் நாள்தான் பதவி ஏற்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

தாமஸ் ஜெபர்ஸன்தான் முதன் முதலில் அமெரிக்க ஜனாதிபதியின் இருப்பிடமான ''வெள்ளை மாளிகை''யில் பதவி ஏற்றவர். அவர் பதவி ஏற்ற நாளில் வெள்ளை மாளிகை சரிவரக் கட்டப்படாததால் அவர் மூன்று மாதங்கள் ஒரு ஹோட்டலில் தங்க வேண்டி நேரிட்டது.

ஜான் டைலர் என்ற அமெரிக்காவின் உப — ஜனாதிபதி தமது மகனுடன் வில்லியம்ஸ்பர்க் நகரில் உள்ள தமது இல்லத்தில் கோலிக் குண்டு விளையாடிக் கொண்டிருந்த போது ஓர் அரசாங்க ஊழியர் வெகு வேகமாக ஓடி வந்து ஜனாதிபதி இறந்துவிட்ட செய்தியைக் கூறினார். உடனே டைலர் தமது கோலி விளையாட்டை நிறுத்தி விட்டுக் குதிரை மீதேறி இரவு முழுதும் பயணம் செய்து விடியற்காலையில் வாஷிங்டன் நகரை அடைந்தார். அங்குள்ள ஓர் உணவு விடுதியில் அவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அமெரிக்க அரசாங்க சபாநாயகர் ஸாம் ரேபர்ன் என்பவரது அலுவலகத்தில் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஹாரி ட்ருமனுக்குத் திடீரென்று 'வெள்ளை மாளிகை'க்கு வருமாறு அவசர அழைப்பு ஒன்று வந்தது. 'எதற்காக இந்த அவசர அழைப்பு?' என்று மனம் குழம்பிய ட்ருமன் உடனே வெள்ளை மாளிகைக்கு விரைந்தார். சரியாக இரண்டு மணி நேரம் கழித்து அவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்யப்பட்டார். ஆம்! நான்கு முறைகள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து பிரசித்தி பெற்ற ரூஸ்வெல்ட் மறைந்து விட்டார். உதவி ஜனாதிபதி ட்ருமன் ஜனாதிபதியாக்கப் பட்டார்.

வெர்மாண்ட் மாநிலத்தில் உள்ள பிளிமத் நகரில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த உதவி ஜனாதிபதி கால்வின் 'கூலிட்ஜு'க்கு நள்ளிரவில் ஒரு தந்தி வந்தது. ஜனாதிபதி வாரன் ஹார்டிங் மரணமடைந்து விட்டதாக அந்தத் தந்தியில் கண்டிருந்தது. கூலிட்ஜின் தந்தை ஒரு கௌரவ நீதிபதியாக இருந்த காரணத்தால் உடனடியாகக் கூலிட்ஜுக்கு அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஜனாதிபதி மேடிஸன் பதவி ஏற்றவுடன் நடைபெற்ற நடனத்தில் ஆயிரக்கணக்கான விருந்தினர்கள் கலந்து கொண்டனர். குளிரின் கொடுமையால் ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. மிகச் சிறிய அறையில் பலர் குழுமியிருந்த காரணத்தால் பலர் மூச்சுத் திணறி மயங்கி விழுந்தார்கள். அதனால் காற்றோட்டத்துக்காகப் பல ஜன்னல்களை உடைத்துத் திறந்தனர், வெள்ளை மாளிகை அதிகாரிகள்!

'மக்களின் ஜனாதிபதி'யாக விளங்கிய ஆண்ட்ரு ஜாக்ஸன் பதவி ஏற்கும்போது ஜனப் பிரளயமே உருவாகியது. அமெரிக்கர்களின் 'ஹீரோ'வான ஜாக்ஸனைக் காண லட்சக் கணக்கான மக்கள் ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகை யிட்டனர். உள்ளே நுழைந்த சிலர் இடம் கிடைக்காத காரணத்தால் அங்கிருந்த மேஜை நாற்காலிகளையும் கண்ணாடி தம்ளர்கள் முதலியவற்றையும் உடைத்து நொறுக்கினர். இல்லத்தின் வாசலில் ஏராளமான மக்கள் குழுமியிருந்ததைக் கண்ட ஜாக்ஸன் வேறு வழியின்றிச் சுவரின்மீது ஏறி உள்ளே குதித்தார். பின்னர்தான் பதவிப் பிரமாணத்தை எடுத்துக்கொண்டார். அந்த நிகழ்ச்சி முடிவடைந்ததும் அவராலும் மற்றவர்களாலும் வெளியில் செல்ல முடியவில்லை. அதனால் ஜாக்ஸன் வீட்டின் பின் சுவர் வழியாக ஏறிக் குதித்து வெளியே சென்று மூன்று நாட்கள் ஒரு சத்திரத்தில் தங்கினார்!

ஆயிரக் கணக்கான நீக்ரோக்களின் அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஆபிரகாம் லிங்கன் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற நிகழ்ச்சி இன்னும் விந்தையானது. அவர் பதவி ஏற்க செனட் அறை வாசலில் நுழைந்தபோது ஓர் இளைஞன் உள்ளே வர அதிகாரிகளிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான். அவனை அந்த அறையிலிருந்து வெளியேற்ற அதிகாரிகள் படாத பாடுபட்டு ஒரு மணி நேரம் அவனோடு போராடிய பின்னரே அவனைப் பலவந்தமாக வெளியேற்ற முடிந்தது. அச்சமயம் அந்த இளைஞனைப் பற்றி அமெரிக்க அதிகாரிகளுக்கும் ஆபிரகாம் லிங்கனுக்கும் விசேஷமாக எதுவும் தெரியவில்லை. ஆனால் சில ஆண்டுகள் கழித்து அந்த இளைஞனைப் பற்றி உலகமே தெரிந்து கொண்டது; ஆம்! அவன்தான் ஆபிரகாம் லிங்கனைப் படுகொலை செய்த ஜான் வில்க்ஸ் பூத் என்ற நடிகன்!

லிங்கன் பதவிப் பிரமாணத்தை ஏற்று முடித்தவுடன் அடுத்ததாக உதவி ஜனாதிபதி ஆண்ட்ரு ஜாக்ஸன் பதவிப் பிரமாணத்தை ஏற்க வேண்டும். ஆனால் அச்சமயம் ஜாக்ஸன் மிகப் பலமாக மது அருந்தி இருந்ததால் பிரமாணத்தை ஏற்காமலேயே தமது சொற்பொழிவைத் தொடங்கினார். பின்னர் அமெரிக்கத் தலைமை நீதிபதி பலமுறைகள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டபிறகே ஜாக்ஸன் தமது பதவிப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டார்.

உட்ரோ வில்ஸன் பதவிப் பிரமாணத்தை ஏற்று முடித்தவுடன் குளிப்பதற்காகத் தமது ஆடைகளைக் கழற்றி ஒரு பெட்டியில் வைத்துவிட்டுக் குளியல் அறைக்குச் சென்றார். குளித்து முடித்ததும் வந்து பார்த்த போது அந்தப் பெட்டியைக் காணவில்லை. அங்குமிங்கும் நாள் முழுதும் தேடிப் பார்த்தார். எங்குமே அந்தப் பெட்டியைக் காணவில்லை. பாவம்! மறுநாள் காலைவரையில் அவர் உள் ஆடைகளுடன் மட்டுமே படுத்துத் தூங்க நேர்ந்தது!

வாலிபாலே உயிர்!



''சேலத்தில் தேசிய வாலிபால் விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்தது. சென்னை மாகாணக் கல்லூரியில் எம். ஏ. பயிலும் மாணவியான நான் சாரதா கல்லூரி பொழுதுபோக்குச் சங்கத்து குழுவினருக்குத் தலைமை வகித்து ஆடப் போயிருந்தேன். சேலத்தில் வாலிபாலில் சாம்பியன் என்று பெயர் வாங்கியவள். தர்மபுரிக்கு அருகிலிருக்கும் என் பிறந்த ஊரான மொரப்பூரிலிருந்து என் தகப்பனாரும், தம்பியும் முதல் தடவையாக நான் வாலிபால் பந்தயத்தில் ஆடப் போவதைப் பார்க்க ஆவலுடன் வந்திருந்தார்கள். திருச்சி சீதாலக்ஷ்மி ராமசுவாமி கல்லூரி கோஷ்டியினரும் எங்கள் குழுவினரும் வெகு ஜோராக ஆடியதால் ஆட்டத்துக்கு விறுவிறுப்பு ஏற்பட்டது. முதல் ஆட்டத்தில் எங்களுக்கு வெற்றி. இதைக் கண்டு ரோஷமாக ஆடிய சீதாலக்ஷ்மி ராமசுவாமி கல்லூரி ஆட்டக்காரிகள் இரண்டாவது ஆட்டத்தைப் பறித்துக் கொண்டு விட்டார்கள். மூன்றாவது ஆட்டம் யார் பக்கம் வெற்றி சாயுமோ என்ற நிலையிலிருந்தது. உள்ளூரில், அதுவும் முதல் தடவையாகக் காணும் அப்பாவின் முன்னிலையில் தோல்வி காண வெட்கமாக இருந்தது. கைகால்கள் பதறின. ஆனாலும் என் முயற்சியைக் கைவிடவில்லை. இருவருக்கும் எண்ணிக்கை 15-15. இன்னும் இரண்டு எண்ணிக்கை யாருக்குக் கிடைக்குமோ என்ற நிலையில் வெற்றியும் தோல்வியும் ஊசலாடின. கடைசியில் நான் உயிரைக் கொடுத்து ஆடி வெற்றி பெற்றதும் எங்கள் ஊர்க்காரர்கள் கைதட்டிக் குதூகலஆரவாரம் செய்து என்னைப் பாராட்டினார்கள். என் தகப்பனார் என் முதுகில் தட்டி, 'ரொம்ப ஜோரா ஆடினே!' என்று பாராட்டினார். என் வாழ்க்கையிலேயே விளையாட்டு மைதானத்தில் இது மறக்க முடியாத நிகழ்ச்சி!'' என்று நெஞ்சம் தழுதழுக்கக் கூறினாள் உமாராணி.

''இதில் ஆச்சரியம் என்னவென்றால் தேசிய வாலிபால் போட்டியில் இவர்கள் கோஷ்டி ஏ பகுதி வெற்றியாளர்; பி பகுதி வெற்றியாளர் சாரதா வித்யாலயா உயர்நிலைப் பள்ளி மாணவிகள். இறுதி ஆட்டத்தில் சாரதா கல்லூரி பொழுதுபோக்குக் கோஷ்டிக்கும், சாரதா வித்யாலய உயர்நிலைப்பள்ளிக் கோஷ்டிக்கும் நடந்ததில் உயர்நிலைப் பள்ளிக் கோஷ்டியினரே வெற்றி பெற்று விட்டார்கள்'' என்றார் வாலிபால் சங்க உதவித் தலைவர் அப்துல் காதர்.

மிஸ் உமாராணி மொரப்பூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் சொக்கலிங்கக் கவுண்டரின் அருமை மகள். சேலம் செயின்ட் மேரி கான்வென்டில் பள்ளிப் படிப்பை முடித்து, சேலம் சாரதா கல்லூரியில் சேர்ந்தபொழுதுதான் வாலிபால் ஆட்டத்தில் நாட்டம் பிறந்தது. ஓட்டப் பந்தயத்திலும் மிஸ் உமாராணி தேர்ந்தவள்.

''சென்னை ராஜ்யப் பெண்கள் வாலிபால் கோஷ்டி 1963, 64ம் ஆண்டுகளில் கட்டாக்கிலும், அலகாபாத்திலும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் விருது பெற்றிருக்கிறது. 1965ம் வருஷம் துரதிர்ஷ்டவசமாக நல்ல பலமுள்ள ஆட்டக்காரிகள் அனைவருக்கும் திருமணம் முடிந்து கோஷ்டி கலைந்துவிட்டது. 1966ம் வருஷத்தில் ஒரு புதிய பெண்கள் கோஷ்டியை உருவாக்கினோம். மிஸ் உமாராணியின் தலைசிறந்த ஆட்டத்தைப் பார்த்து அவளுக்குத் தலைமைப் பதவி கொடுத்தோம்!'' என்றார் அப்துல் காதர்.

''உங்களுக்குப் படிப்பிலே ஆர்வம் அதிகமா? வாலிபால் விளையாட்டிலே ஆர்வம் அதிகமா ?''

''வாலிபால் விளையாட்டே எனக்கு உயிர். எங்கே அயலூர்களில் போய் ஆட முடியாமல் போகுமோ என்று, கல்லூரியில் விஞ்ஞானப் பகுதிகள் எடுத்துக் கொள்ளாமல் பொருளாதாரப் பகுதியை எடுத்துக் கொண்டேன்! கல்கத்தாவில் தேசிய வாலிபால் விளையாட்டுப் போட்டியில் நாங்கள் கலந்து கொண்டு ஆடினோம். லீக் முறையில் நடந்த பந்தயங்களில் ஹைதராபாத், ராஜஸ்தான் குழுவினரிடம் நாங்கள் தோல்வியடைந்தோம். தோல்விதானே வெற்றியின் அடிப்படை? விரைவில் நாங்கள் புதுப் பெருமையை நிலைநாட்டி விடுவோம்!'' என்று உறுதி கூறினாள் தமிழக காப்டன் உமாராணி.

மிஸ் உமாராணி



— குண்டுமணி

தமிழ் வலம் வந்த தூதுவர்கள்



பி. பிலியோஸா



பேராசிரியர் எப். எல். பில்லோஸ்



பேராசிரியர் சார்லஸ் எல். ஃபாப்ரி

பேராசிரியர் சார்லஸ் எல். ஃபாப்ரி

கடந்த காலத்தில் நடந்ததாகக் கருதப்படும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ, வளர்ச்சியையோ எடுத்து வைத்துக் கொண்டு இது நடந்த காலம் அதாகத்தான் இருக்க வேண்டும். அல்லது இதாகத்தான் இருக்க வேண்டும் என்று சான்றுகளுடன் முடிவுகட்ட முயற்சி செய்வது ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு கைதேர்ந்த கலை. இந்த ரக ஆராய்ச்சியாளர்களில் ஒன்றிரண்டுபேர் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் மற்றவர்கள் கவனத்தை நிறையக் கவர்ந்தார்கள். ஆனால் இந்த ரகத்தில் சேர்ந்திருந்தும் ஒதுங்கியிருந்து முதல் இரண்டு மூன்று நாட்கள் மாத்திரம் அரங்கத்தில் தலை காட்டிவிட்டுப்போன முதியவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சார்லஸ் எல். ஃபாப்ரி. டாக்டர் பட்டம் பெற்றிருக்கும் இவர் ஐரோப்பிய நாடுகளின் கலை விமரிசகருங்கூட! சிற்ப ஆராய்ச்சி இவருக்குப் பிடித்தமான துறை. அதனுல்தான் 'மாமல்லபுரச் சிற்பங்களின் காலத்தை மாற்றும் சான்றுகள்' என்னும் விஷயத்தில் அக்கறை காட்டினுர்.

''தயவுசெய்து ஒரு நிமிடம் அப்படி நிற்கிறீர்களா? ஒரு புகைப்படம் பிடித்துக் கொள்கிறேம்'' என்றபோது அவர் சிரித்துக் கொண்டு 'ஒல்ட் (Old) மேனிடம் இவ்வளவு அக்கறை காண்பிப்பதற்கு மிக்க நன்றி' என்றதும் பக்கத்தில் நின்ற அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் 'ஒல்ட் எப்போதுமே கோல்ட்' என்ற ரீதியில் வர்ணனை கொடுத்ததும் அப்படியானுல் இது அன்ஸ்மக்கிள்ட் (Unsmuggled) அதாவது 'கள்ளக் கடத்தல் இல்லாத தங்கம்' என்று இத்தாலியப் பேராசிரியர் ஒருவர் இடை வெட்டு வெட்டினதும் சுவையாக இருந்தன.

பி. பிலியோஸா

ஜரிகை அங்கவஸ்திரம், பஞ்சகச்சம், தூய வெள்ளை ஜிப்பா. மூன்றும் அலங்கரிக்க ஓர் இளைஞர் முதல் இரண்டு மூன்று நாட்கள் கருத்தரங்கில் காணப்பட்டார். பாடகர் போலவும் இருந்தார். இத்தகைய ஒரு கோலத்துடன் சில வேளைகளில் அவர் புகை பிடிக்கும் குழாயை வாயில் பொருத்திக் கொண்டு 'குப் குப்' என்று புகைப் படலத்தைப் பரப்பியது வேடிக்கையாக இருந்தது. அவர் பிரெஞ்சு நாட்டுப் பிரதிநிதி என்றும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் ஜீன் பிலியோசாவின் குமாரர் என்றும் தெரிய வந்தது.

புகைப்படத்துக்காக நிற்கமுடியாது என்று இரண்டு மூன்று தடவைகள் நழுவிவிட்டார். சங்கோஜம்தான் காரணம். அவருடைய பிரெஞ்சு நாட்டு நண்பர்கள் இருவருடன் தான் சுற்றிக் கொண்டிருந்தாரே தவிர, வேறு யாருடனும் பேசக்கூடத் தயக்கம் காண்பித்தார்.

''ஐயா! எங்கள் நாட்டு வேட்டியை மதிக்கும் உங்களை நாங்கள் மதிக்க விரும்புகிறேம். அதற்காகவாவது புகைப்படம்

பிடிக்கும்வரை நில்லுங்கள்'' என்று சொன்ன பிறகுதான் சம்மதித்ததார்.

பாரிஸ் சர்வ கலாசாலையில் சம்ஸ்கிருதப் பேராசிரியராக இருக்கும் இவர் அப்பைய தீட்சிதர், நீலகண்ட தீட்சிதர் ஆகியோரின் சிருஷ்டிகளைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்திருக்கிறார். தென்னிந்திய கலாசாரத்தில் நிறைய ஈடுபாடு கொண்டவர்.

பேராசிரியர் எப். எல். பில்லோஸ்

ஆப்பிரிக்க நாட்டில் நடக்கும் வேட்டை சம்பந்தமான கானகத் திரைப் படங்களில் தோன்றும் பிரதான நடிகர்களெல்லாம் சற்று மோட்டாவாகவும் காத்திரமாகவும் இருப்பார்கள். பேராசிரியர் பில்லோஸின் கனத்த உடலும் கருகருத்த முரட்டு மீசையும் மேலே குறிப்பிட்ட கானகக் கதாநாயகர்களை நினைவூட்டுவதாக இருந்தன. அருகில் நெருங்கி அவர் மாட்டியிருந்த பெயர்ச் சீட்டைப் பார்த்தபோது அவர் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள உகாந்தா நாட்டிலிருந்து வந்தவர் என்று தெரிய வந்தது.

எங்கள் சம்பாஷணை ஆரம்பத்திலிருந்தே சூடு பிடித்து விட்டது. ''தமிழ் இலக்கியத்தில் உங்களுக்கு எந்தத் துறையில் ஈடுபாடு உண்டு?'' என்ற என் ஆரம்பக் கேள்வியை கை அசைவாலேயே ஒதுக்கினார். ''இங்கே தமிழ் சொல்லிக் கொடுக்கும் முறையையே மாற்றி அமைக்க வேண்டும். இதைப் பற்றி நான் பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழக நிர்வாகத்திடம் வாதாடியிருக்கிறேன். புதுப் புது வார்த்தைகளை உருவாக்கிக் கொண்டு போவதில் அர்த்தமே இல்லை. இருக்கும் வார்த்தைகளுக்குச் சரியான உபயோகத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தாலே போதுமானது. நான் மொழிப் பயிற்சியைப் பற்றிப் புத்தகமே எழுதியிருக்கிறேன்...'' என்று ஆரம்பித்தார் பில்லோஸ். அந்த வேகத்தில் அவர் என்னையே ஒரு மாணவனாகக் கருதி ஒரு மணி நேரம் 'லெக்சர்' கொடுப்பார் போலிருந்தது.

''உங்களைச் சாவகாசமாகச் சந்திக்கிறேன்'' என்று கிளம்பினேன் நான். தமிழ் தெரியாத போனாலும் பேராசிரியர் பில்லோஸ் பாரதத்தில் எட்டு வருடங்கள் இருந்தவராம்!

ஃபினாரெண்ட் ஜோசப் ஜார்டன்ஸ்

பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த நாற்பத்திரண்டு வயதான ஜார்டன்ஸ் இருபத்திநான்கு வயது இளைஞன் போல் மாநாட்டுக் கருத்தரங்கில் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார். இந்திய வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியின் மூலம் பெல்ஜியம் சர்வ கலாசாலையில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவர். கல்கத்தாவிலுள்ள சேவியர் கல்லூரியில் சில காலம் சம்ஸ்கிருதப் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார்.

திரு வி. எஸ். தியாகராஜ முதலியார் கொடுத்த விருந்தின்போது அமைச்சர் கருணாநிதி அவர்கள் எழுதிய 'சிலம்பின் கதை' புத்தகத்தை முதலமைச்சர் அண்ணாதுரை வெளியிட்டார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் சார்பில் ஜார்டன்ஸ் அதனைப் பெற்றுக் கொண்டார்.

'திருவாரூர்க்காரர் அளிக்கும் விருந்தில், திருவாரூர்க்காரர் எழுதிய புத்தகத்தை மூன்றுவது திருவாரூர்க்காரரே பெற்றுக் கொள்ள வந்துவிட்டாரோ என்றுதான் நான் ஜார்டன்ஸ் அவர்களைப் பார்த்ததும் நினைத்தேன்' என்று முதலமைச்சர் குறிப்பிட்டபோது ஒரே ஆரவாரம்! காரணம் ஜார்டன்ஸ் அசல் தஞ்சாவூர் மாவட்டக்காரர் மாதிரியே தோற்றமளித்தார்!

ஃபிரெஞ்சு மொழி, ஜெர்மன் மொழி, இந்திய சரித்திரம் முதலியவற்றைப் போதிக்கும் இந்தப் பேராசிரியர் உபநிஷதங்கள், யோகம், பகவத்கீதை, சாகுந்தலம் முதலியவற்றைப் பற்றி எல்லாம் நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஜார்டன்ஸ் இப்போது ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள மெல்போர்ன் சர்வகலாசாலையில் பணியாற்றி வருகிறார். - மேனு


புகைப்படங்கள் : விசுவநாதன்




கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் விற்கப்படும் அந்தக் கடையில் புகுந்து நீண்ட நேரம் அலசிக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன். கடைசியில் ஒருவாறாக, 'அப்பாடி! இப்பொழுதாவது நான் தேடியது கிடைத்ததே' என்று ஒரு வாழ்த்தை எடுத்துக் கொடுத்தான் அவன். 'அப்படி என்னதான் தேடினுன் இவ்வளவு நேரமும்' என்று ஆவலுடன் அதைப் படித்துப் பார்த்த அந்தக் கடைக்காரன், அந்த வாலிபன் 'இதில் ஒரு டஜன் எடு' என்று சொன்னதும் திடுக்கிட்டான். காரணம் அந்த வாழ்த்தில் எழுதியிருந்த வாசகம் இதுதான் : 'உலகத்திலேயே நான் விரும்பும் ஒரே பெண்ணுன உனக்கு என் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்'.

— எஸ். சந்திரசேகரன்

ரொம்பப்
பெரிதும் அல்ல
ரொம்பச்
சிறிதும் அல்ல






1½ டன் எடை சாமான் ஏற்றும்

பார்கோ D-300*

சிறிய வண்டிகளிலே பெரிது, பெரிய வண்டிகளின் உழைப்பு, குறுகச் சென்றும் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சிக்கலில்லாமல் ஓட்டவும், போக்குவரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக்-அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300.

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் • 3,112 மி.மீ. (123") WB அல்லது 3,366 மி.மீ. (133") WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் • சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.


* (பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் தயாரிப்பு)



தவணை ஏற்பாடு:

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்

மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்



முழு விவரங்களுக்கு
அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.)

TVS

ct-4272



சுவையான சர்ச்சைகள்

கிரிக்கெட்டா? வேண்டாம் அந்த விளையாட்டு!

['பதினொரு முட்டாள்கள் விளையாடுவதைப் பதினோராயிரம் முட்டாள்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்' என்று கிண்டலாகக் கிரிக்கெட் விளையாட்டை விமரிசனம் செய்தாரல்லவா வேவல் பிரபு? ஆங்கிலேயர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்த இந்த விளையாட்டு நம் நாட்டுக்குத் தேவையில்லை, உகந்ததன்று என்ற கருத்தினை விளக்குகிறார், சென்னை வைஷ்ணவக் கல்லூரி விரிவுரையாளர் திரு பா. சடகோபன்.]

"கதிரவனைக் காணத் தவம்கிடக்க வேண்டிய நாட்டில் கோடைக்காலத்தில் பிரிட்டிஷார் விளையாடும் கிரிக்கெட் ஆட்டம் அந்த நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், பாரதத்தின் குளிர் காலக் கதிரவனின் உஷ்ணம் பிரிட்டனின் கோடை வெய்யிலைவிடக் கடுமையானதாயிற்றே? நமக்கு ஏன் அந்த விளையாட்டு? ஐந்து நாட்கள் நிகழும் டெஸ்ட் பந்தயம் என்றால், விளையாடுபவர்களுக்கும் சங்கடம்; வேடிக்கை பார்ப்பவர்களுக்கும் வேதனை. ஐந்து நாள் ஆட்டமும் பார்ப்பதென்றால் சுமார் இருபது முப்பது ரூபாய் செலவு. அது மட்டுமா? முன்னதாகவே டிக்கெட் வாங்கி விட்டாலும், விடியற்காலை ஐந்து மணிக்கே பந்தய மைதானத்துக்குப் புறப்பட வேண்டும். மாலை ஆறு, ஏழு மணிக்குக் கலைந்த தலையும் அழுக்கடைந்த துணியும், கருமை படர்ந்த முகமுமாக வீடு திரும்பும் போது, பெற்ற தாய்க்கே மகனை அடையாளம் கண்டுகொள்ள முடியுமா என்பது சந்தேகம்! இவ்வளவு கஷ்டத்தையும் சகித்துக் கொண்டாவது இந்த ஆட்டத்தைப் பார்க்கத்தான் வேண்டுமா என்ன?" என்று கேட்கிறார் திரு சடகோபன்.

"பார்க்கிறவர்களுக்கு ஏதோ மகிழ்ச்சி ஏற்படுவதால்தானே இவ்வளவு சங்கடங்களையும் சகித்துக் கொண்டு போகிறார்கள்? அதனால் மற்றவர்களுக்கு என்ன நஷ்டம்?" என்றேன்.

"சாதாரண நஷ்டமில்லை, ஐயா! பெரிய தேசிய நஷ்டம்! எப்படி என்று கேட்கிறீர்களா? சுமார் முப்பதாயிரம் பேர்கள் 'டெஸ்ட்' பந்தயம் பார்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம்; ஐந்து நாட்களுக்கு முப்பது மணி நேரம். 30,000 பேர்களுக்கு எவ்வளவு மணி நேரம் என்று முப்பதால் பெருக்கிப் பாருங்கள், தெரியும்! தொழிற்சாலைகளிலும் துறைமுகத்திலும் பணியாற்றுபவர்கள் எவ்வளவு பேர்கள் ஆட்டம் பார்க்க வருவார்கள்? அவ்வளவுக்கு உற்பத்திக் குறைவு; வேலை தடைப்படுகிறது. அரசாங்க, தொழில், வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள் ஐந்து நாட்கள் கிரிக்கெட் திருவிழா பார்க்கச் சென்றுவிட்டால் அவர்கள் வேலை தடைப்படுகிறது, அல்லது தாமதம் ஆகிறது. இதனால் பொது மக்களுக்கு எவ்வளவு நஷ்டம் என்று புரிகிறதல்லவா?" என்று உணர்ச்சியோடு திருப்பிக் கேட்டுவிட்டு அயல்நாட்டுச் செலாவணியும் வீண் நஷ்டம் ஆவது பற்றிக் குறிப்பிட்டார்:

"பாரதம் இதுவரை பிறநாடுகளுடன் 104 டெஸ்ட் பந்தயங்கள் விளையாடி இதுவரை ஒரு பந்தயத்தைக்கூட ஜயித்ததில்லை! ஆகவே, இந்தியா பிறநாடுகளுக்குக் கிரிக்கெட் விளையாடச் சென்றால், பந்தயங்களைப் பார்க்கக் குழுமுகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகம் இருப்பதில்லை. 'இந்தியா தானே? ஐந்து டெஸ்ட்களிலும் தோற்கும்' என்று அலட்சியம் செய்கின்றனர். வசூலாகும் தொகை குறைவாக உள்ளபடியால்,— பொருளாதார அடிப்படையிலும் லாபமில்லை. ஆனால், கிரிக்கெட் ஆட்டத்தில் முன்னணியில் உள்ள மேற்கு இந்திய கோஷ்டி முதலியன இந்தியாவுக்கு விஜயம் செய்வதாயிருந்தால், ஒவ்வொரு டெஸ்ட் பந்தயத்துக்கும் குறைந்தபட்சம் இவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று முன் கூட்டியே வரையறுத்து நிபந்தனை போடுகிறார்கள். மழை காரணமாகவோ, அல்லது ஆட்டம் மூன்று, நான்கு நாட்களிலேயே முடிந்து விட்டதன் காரணமாக வசூல் குறைந்து விட்டாலோகூட, நிபந்தனைப்படி பணம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அந்நியச்

செலாவணி இதனால் விரயம் ஆகிறதல்லவா? இவ்வளவு ஆண்டுகளாகக் கிரிக்கெட் விளையாடியும் ஆட்டத்தில் நாம் போதிய திறமை பெறாததால், பிறநாடுகளுக்கு நமது கோஷ்டி செல்லும்போது நாம் அவ்விதம் நிபந்தனை ஏதும் போடுகிற நிலைமையில் இல்லை. ஆட்டத்தில் போதிய திறமையில்லாததால் வெற்றி கிட்டுவதில்லை. வெற்றி பெறாத நிலையில், அயல்நாடுகளிலிருந்து பொருள் திரட்டிக் கொண்டு வரவும் முடியவில்லை. இந்த லட்சணத்தில் கிரிக்கெட்டைக் கட்டிக் கொண்டு அழுவானேன்?'' என்பது திரு சடகோபனின் மற்றொரு கேள்வி.

மற்ற விளையாட்டுக்களோடு கிரிக்கெட் ஆட்டத்தை ஒப்பிட்டுக் கிரிக்கெட்டிலுள்ள குறைபாடுகளை அவர் விளக்குவதைப் பார்க்கலாம் :

''கால்பந்து, பாஸ்கெட்பால் முதலிய ஆட்டங்களில் உள்ள விறுவிறுப்பு கிரிக்கெட்டில் இல்லை. பாட்ஸ்மன் பந்தை அடித்து ரன்கள் குவிக்கிற போதுதான் பார்க்கிறவர்களுக்கு உற்சாகம். பந்தை வேகமாக அடிக்காமல் தடுத்து நிறுத்துகையில் **(Block)** 'போர்' அடிக்கிறது: கிரிக்கெட் ஆடும் போது ஒரே சமயத்தில் எல்லா ஆட்டக்காரர்களுக்கும் வேலையில்லை. பந்து யாரிடம் அடிக்கப்படுகிறதோ அந்த ஓர் ஆட்டக்காரர் அல்லது ஃபீல்ட்ஸ்மன், விக்கெட்கீப்பர் ஆகியோருக்குத்தான் வேலை. மற்றவர்கள் அந்த நேரத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் நிற்கின்றனர். பாஸ்கெட்பால், வாலிபால் முதலிய ஆட்டங்களில் இப்படியில்லை. எல்லா ஆட்டக்காரர்களும் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கின்றனர். ஒரு கிரிக்கெட் பந்தயம் என்றால் அதன் முடிவைத் தெரிந்து கொள்ள மூன்று, நான்கு, ஐந்து அல்லது ஆறு நாட்கள்கூடப் பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது. டென்னிஸ் ஆட்டம் என்றால் ஆட்டக்காரர்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை பம்பரமாகச் சுழலுகின்றனர். போட்டியின் முடிவும், இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் தெரிந்துவிடும். பொழுது போக்குக்கும், மனத்துக்குச் சிறிது உற்சாகமூட்டவும் தானே, விளையாட்டுக்களை நாடுகிறோம் ? பொழுதுபோக்கு என்பது நாள்தோறும் மாலையில் ஓரிரு மணி நேரமாக இருக்க வேண்டுமே யல்லாது தொடர்ந்து ஆறு நாட்கள் அல்லது ஒரு வாரத்துக்கு நீடித்தால், பயனுள்ள நேரத்தைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும் அல்லவா? ஆட்டத்தை நேரில் பார்க்க மைதானத்துக்குச் செல்லாதவர்கள் வானொலியில் ஒலிபரப்பாகும் நேர்முக வர்ணனையைக் கேட்பதில் எவ்வளவு நேரத்தைச் செலவழிக்கின்றனர் ! லட்சக்கணக்கான மக்களின் பொன்னான நேரம் பாழாகின்றதே? அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாடு, மக்களின் சுறுசுறுப்பான உழைப்பைக் கொண்டுதான் தன்னிறைவு பெற வேண்டும். ஜப்பானியர்களைப் போல் சலிப்பின்றி உழைத்தால்தான் நாட்டில் உற்பத்தி பெருகும்; விவசாயமும் தொழிலும் வளமை பெறும். கிரிக்கெட் ஒரு வியாதிபோல் பரவி வருகிறது. நாட்டின் உற்பத்திப் பெருக்கத்துக்கு இந்த ஆட்டம் ஓரளவு தடையாக அணைபோட்டுக் குறுக்கே நிற்கின்றது என்பதில் ஐயமில்லை. மாணவர்களின் அருமையான நேரமும் இதனால் பாழாகிறது. கிரிக்கெட் சீசனில் மூன்று நான்கு மாதங்கள் விளையாட்டு மைதானமே கதியாகக் கிடக்கிற மாணவர்கள் ஏராளம். ஒரு 'டெஸ்ட்' பந்தயம் என்றாலும் ஐந்து, ஆறு நாட்கள் மாணவர்களுக்குப் படிப்பில் கவனம் செல்லுவதில்லை. ஆட்டம் முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகே, வேடிக்கை பார்த்தவர்களுக்கு உடம்பு உடம்பாகிறது ! இந்த அசுர விளையாட்டு நமக்கு எதற்கு?'' என்று கேட்கிறார் மாணவர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள விரிவுரையாளர்.

''நீங்கள் கிரிக்கெட் விளையாடியதுண்டா?''

''ராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் படித்த போது விளையாடியிருக்கிறேன். பின்னர், லயோலா கல்லூரியில் சேர்ந்ததும் பாஸ்கட்பால் என்னை ஈர்த்தது. இப்போது டென்னிஸ் விளையாடுகிறேன். கிரிக்கெட்டை விட்டுவிட்டேன்—நேரம் வீணாகிறது என்று. இப்போது கிரிக்கெட் பந்தயங்கள் பார்ப்பதுமில்லை ; ரேடியோ வருணனை கேட்பதிலும் எனக்கு விருப்பமில்லை. ரேடியோவருணனை என்றதும் நினைவுக்கு வருகிறது. ஜனவரி 26ம்தேதி தில்லியிலிருந்து குடியரசுதின விழா நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த சமயம் ஒரு சிறுவன் கூறினான்: 'ஸிட்னியிலே மாட்ச் என்ன ஆச்சுன்னு தெரியல்லே. இதென்ன போர்?' எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து கோஸிஜினும் டிட்டோவும் நமது குடியரசு விழாவில் கலந்து கொள்ள வந்திருக்கும்போது, நமது சிறுவர்களுக்கு மட்டும் அது 'போர்' ஆகப் போகிறது. ஒரு நாளைக்கு, இரண்டு மூன்று மணி நேரம் கிரிக்கெட் வருணனை கேட்க முடியாவிட்டால் என்ன — குடிமுழுகிப் போய் விடுமா ?''

இறுதியாகத் திரு சடகோபன் தெரிவித்த ஒரு கருத்து: ''ஹாக்கி, டென்னிஸ் இவையெல்லாம்கூட மேலைநாட்டவரிடம் நாம் கற்றுக் கொண்ட விளையாட்டுக்களே. எனினும், அந்த விளையாட்டுக்களில் நமது குழுக்கள் மகத்தான சாதனைகள் புரிந்துள்ளன. ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தில் நாம் கண்டது தோல்விக்கு மேல் தோல்வி! புகழும் இல்லை; மிகுந்த நேரமும் விரயம்; பொருளாதார அடிப்படையிலும் நஷ்டம்! இந்த நிலையில் கிரிக்கெட்டுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதில் பயன் என்ன? மேலும், கிரிக்கெட் பணக்காரக் குடும்பங்களில் பிறந்தவர்களுக்கான விளையாட்டு. வாலிபால், கால்பந்து, பாஸ்கெட்பால் போன்று ஏழை எளியவர்களுக்கு உகந்த ஆட்டம் அன்று. இது நமது நாட்டுக்குத் தேவையில்லை. வேண்டாம்!''

பேட்டி : பாணன்


புதிதாக அறிமுகப்படுத்தும்

உஷா ஃப்ளோரா

அழகான, பல வகையிலும் உபயோகமுள்ள தையல் மெஷின் நேராகவும், வளைந்து வளைந்தும். சித்திர வேலைப்பாட்டுடனும் தைப்பதற்கு ஏற்றது.

★ நேராகத் தைத்துக்கொண்டிருக்கும்போது ஒரு லீவரை நகர்த்துதில் எப்படி வேண்டுமானாலும் கோணலாகத் தைக்கமுடியும்.
★ அகலத்தை மட்டும் கட்டுப்படுத்த பொத்தான்கள் இருப்பதால் ஒரு குறிப்பிட்ட அகலத்திற்குள் குறுக்கும் நெடுக்குமாகவோ சித்திர அலங்கார முறையிலோ எப்படி வேண்டுமாயினும் தைக்கலாம்.
★ உடனடியாக ஒரு பொத்தானை அழுத்தினால் எதிர்புறமாகத் தைக்க முடியும்.
★ பாபினில் நூல் சுற்ற ஆடோமாடிக் விசை
★ இயல்பாகவே பட்டையாக டார்னிங் தையல தைக்கும் விசை காரணமாக துணியின்மேல் அழுத்தம் சீராக இருக்கும்.
★ துணியை நகர்த்திக் கொடுக்கும் விசையை மூன்று நிலைகளில் பொருத்தும் குமிழ் ஏற்பாடு.
★ கீழுள்ள வகை முகப்புத் தகடு-வெளிச்ச வசதியுள்ளது.
★ நூலை ஒரே சீராக எடுத்துக்கொடுக்கும் ஸ்பூன் பின் மடங்கும் ஸ்பிரிங் அமைந்துள்ளது.
★ மேல்மூடி ஸ்குருவினால் முடுக்கப்படுவதால், எண்ணெயிடக் கழட்டுவது சுலபம்.
★ திறந்த விசை ஷட்டில்ரேஸ்.
★ அழகிய இருநிற வர்ணப் பூச்சு ஏற்பாடு.

நிரூபிக்கப்பட்ட
நம்பகத்தன்மைக்கு...உஷா



JEG/26 TAN



பொன்னிவனத்துப் பூங்குயில்

ஏழாம் அத்தியாயம்

"ஒற்றுமையற்றதால் ஊரை இழந்தோம்"

கொத்தமங்கலம் சுப்பு

இன்று நாம் ''எல்லாரும் ஓரினம்; எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்திய மக்கள்'' என்று இருக்கிறோம். ''இந்தியா'' என்ற பேர் இல்லை. ''இந்தியா'' என்று கேள்வியும் இல்லை. இன்று ஹிந்து, முஸ்லீம், சீக்கியர், பார்ஸி, கிறிஸ்தவர், ஜைனர் ஆகிய எல்லா மதத்தவரும் பாரதத்தின் மக்களாக ஒன்றுபட்டு விளங்குகிறோம்.

அன்று மத வெறியும், மது வெறியும் போட்டியிட்டன. 'ஓம்' என்னும் மந்திரமும், ராம் என்னும் நாமமும், ஒரு கலைப் பண்பாடும், காசி ராமேசுவர யாத்திரையும் நம்மிடையே இருந்தாலும் காசிக்குச் சென்றவர்கள் வாய்க்கரிசி போட்டுக் கொண்டு சென்றார்கள். ராமேசுவரம் போனவர்களுக்கு வீட்டார் அழுது விடை கொடுத்தார்கள். ஏனெனில் திரும்பி வருவது சந்தேகம்.

இன்று தமிழ் மாநிலம் என்று அழைக்கிறோம். அன்றோ, ஒரு 'மா'நிலம்கூட மக்களிடம் இல்லை. இன்று காசி முதல் ராமேசுவரம் வரை ஒன்றாக இணைந்த இருப்புப் பாதையைக் காண்கிறோம். அன்று பாதை முழுவதும் வெறுப்புத்தான் இருந்தது.

இன்று சில நேரங்களில் எஞ்சின்கள் மோதிக் கொள்கின்றன. அன்று நாமே எதிரிகளாக மோதிக் கொண்டோம்.

இன்று அகில இந்தியாவுக்கும் தந்தி போய் வருகிறது. அன்று வதந்திதான் போய் வந்தது.

இன்று கையில் எடுத்தவுடன், தொலைபேசியில்

பேசுகிறோம். அன்று ஒருவனோடு ஒருவன் பேசினால் தொலைந்தான்.

இன்று தினந்தோறும் பத்திரிகைகளில் விநோதங்களைக் காண்கிறோம். அன்று விரோதங்களைத்தான் கண்டார்கள். இன்று ஒரு தலையை ஒட்டினால் தபால் செல்லுகிறது. அன்று ஓலை கொண்டு போனவன் தலைகள் கொண்டு போகப்பட்டன!

அம்மம்மா! இந்தத் தமிழ் மண்ணில் எத்தனை அரசுகள்! எத்தனை அமர்க்களம்? எத்தனை போர்கள்? எவர் எவர்களோ வந்து இங்கு போரிட்டார்கள்.

இன்று செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை என்று சந்திப்புக்களைக் காண்கிறோம். அன்று அங்கெல்லாம் போர்க்களத்தில்தான் சந்தித்தார்கள்.

செங்கற்பட்டிலே சந்திரகிரி அரசர்கள் போர் செய்தார்கள். விழுப்புரப் பகுதியிலே பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் நம் மண் மேல் போரிட்டு நம் மக்களைத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கினர். நம் மன்னர்களைத் துப்பாக்கிக் கிலிக்கு இரையாக்கினர்.

தஞ்சை நாயக்கர் திருச்சி நாயுடுவுடன் போரிட்டார். மணப்பாறையிலே ஒரு பாளையக்காரர் மார் தட்டினார். திண்டுக்கல்லிலே கன்னடியர் திடீர் திடீரெனத் தாக்கினர். மதுரையிலே வடக்கத்தி முஸ்லிம்கள் சூறையாடினர். மானாமதுரையிலே இராமநாதபுரத்தாரும் சிவகங்கையாரும் பலமாக எதிர்த்துக் கொண்டார்கள்.

இந்தச் சண்டைகளில் ஆண்கள் மட்டுமா கலந்து கொண்டனர்? பெண்ணினத்தையும் விட்டதா இந்தப் பெரும் போர்! எத்தனை தாய்மார்களின் திலகங்கள் அழிக்கப்பட்டன? எத்தனை கட்டுக்கழுத்திகள் கைம்பெண்களாயினர்? எத்தனை அருமைச் சிறுவர்கள் அநாதைகளாயினர். அழகான மட்பாண்டங்களைக் காளவாயில் வேகவைப்பதைப் பார்க்கும் போதே கண்களில் நீர் மல்குகிறது. ஆனால் இந்தப் போர்களினால் அழகான மங்கையர்கள் உயிருடன் தீயில் வெந்ததை நினைத்தால் மாதாவின் மணி வயிற்றில் பிறந்த மக்கள் எல்லாம் கண்ணீர் விடுவார்கள்.

ஃ ஃ ஃ

"சுரேசன், குதுப்மினாரின் உயரம் எத்தனை அடிகள்?"

"இருநூற்று முப்பத்து நான்கு அடிகள் சார்!"


"அந்தக் கோபுரத்துக்கு அருகில் உள்ள மற்ற குறிப்பிடத் தக்க காட்சி எது?"

"இரும்புத் தூண்."

நமது கல்விக் கூடங்களில் இம்மாதிரி கேள்வி பதில்களை அடிக்கடி காண்கிறோம். ஆனால் அதே மாணவனுக்கு நமது மாநிலத்திலுள்ள திருவண்ணாமலைக் கோபுரத்தின் உயரம் தெரியாது. மன்னார்குடியில் உள்ள கருடகும்பக் கல்லின் உயரம் தெரியாது. அனுமனும் நாமும் ஒரு விதத்தில் ஒரே மாதிரியானவர்கள் — அனுமனுக்குத் தன்பலம் தெரியாது. தமிழனுக்குத் தன்வளம் தெரியாது. நூறு குதுப்மினாரைக் காட்டிலும் அழகு மிகுந்தது திருவண்ணாமலைக் கோபுரம். ஆயிரம் இரும்புத் தூண்களைக் காட்டிலும் அழகும் கலைச் செல்வங்களும் பொருந்தியது மன்னார்குடி கோயிலின் கீழவாயிலில் உள்ள கருட கும்பக் கற்றூண். அதன்மேல் அமைந்திருக்கும் கருடனின்

கோயில்கலையின்கோயில். அது ஒரு கற்கவிதை. 'திருவாரூர் தேர் அழகு, மன்னார்குடி மதில் அழகு' என்பார்கள் முன்னவர்கள். அதைப் போல் திருவாரூர் தேரை முழுத் தேருக்கு மாகாணி குறைவு என்றும் மன்னார்குடித் தேரை முக்காலே அரைக்கால் தேர் என்றும் அழைப்பார்கள். ஊழிக்காத வீதி முதல் உன்நாசி சுற்றுலா வரை, கோபால சமுத்திரம், நாச்சியார் பிராகாரம் போன்ற ஏழு பிராகாரங்களைக் கொண்ட மற்றொரு திருவரங்கம் மன்னார்குடி. இந்தப் பிராகாரங்களுக்குள்ளே ஒரு பகுதியில், ஒரு மன்னரின் சிலை இருக்கிறது. அவரோடுகூட அவருடைய மனைவியும், மகனும் இருக்கிறார்கள். அந்த மன்னன் அருகில் செண்டலங்காரப் பெருமாள், செண்பகவல்லி மணாளன், நித்தம்அழகியபெருமாள், கோபிகள் நாயகன், கோபால திலகம்





'பராக் பராக்' என்று சேரன் குளத்து தீக்ஷிதர்கள் கட்டியம் கூற, ஸ்ரீ ருக்மிணி சத்தியபாமையுடன் ஸ்ரீ வித்யா ராஜ கோபாலசுவாமி எழுந்தருளி வரும்போது அந்தச் சிலைக்கு அருகில் சுவாமியை நிறுத்தி அந்த அரசனுக்கு விருது பல கூறி, (அனைத்துலகம் ஆண்ட அச்சுத விஜயராகவ மன்னர் தாசனுக்கு அருளிப் பாடி) திருமாலை அணிவித்து, பெருமானைச் சேவை செய்து வைப்பது இன்றைக்கும் நடந்து வருகின்றது. அந்த மன்னன் யார்? அவர் தான் தஞ்சையை ஆண்டு வந்த அச்சுதப்ப நாயக்கர். அவர் அருகில் நிற்பவர் அவருடைய திருமகனுன் விஜய ரகுநாத நாயக்கர். மன்னார்குடி கோயிலில் அழகிய மதிலைக் கட்டியவர்கள் தஞ்சை நாயக்க வம்சத்தினர். வானளாவும் ராஜ கோபுரங்களை ஆக்கியவர்கள் அவர்கள். நம் நாட்டில் உள்ள பெரும் கோயில்களிலுள்ள ஒவ்வொரு தூணும் ஒரு கதை சொல்லும். ஒவ்வொரு மண்டபமும் ஒரு மன்னரின் வரலாற்றைக் கூறும். விமானங்கள் மறைந்து, வேந்தர்களின் பெரும் கொடி போல் வரனை அளாவி நிற்கும்.

மன்னார்குடி கோயிலிலே தஞ்சை நாயக்க வம்சத்தின் சரித்திரத்தையே காணலாம்.

அவர்கள் கலையுலகால் வணங்கத்தக்கவர்கள். பல அரிய கலைச் செல்வங்களைக் கண்டவர்கள். இசைக் கலைக்கு அரிய தொண்டுகளைச் செய்தவர்கள். கும்பகோணத்திலும், தஞ்சையிலும், மன்னார்குடி கோயிலிலும் திருவரங்கத்திலும் பல கோயில் இருப்பணிகளைச் செய்தவர்கள். ரகுநாத நாயக்கரோ இலக்கியத்தில் இருக்கிறார். அவரது குமாரர் விஜயராகவ நாயக்கர் பல நற்பணிகளைச் செய்தார். ராஜகோபாலனுக்கு ராஜ கோபுரம் கட்டியவர் அவர். அதோடு அவர் ஒரு கலைஞர்.

தந்தையைப் புகழ்ந்து மகன் பாடினன் என்ற வரலாறு அபூர்வம். விஜயராகவ நாயக்கர் தம் தந்தையைப் புகழ்ந்து 'ரகுநாத நாயக்க அப்யுதயம்' 'ரகுநாத விலாசம்' என்ற இரண்டு நூல்களைச் செய்து இருக்கின்றார். அதோடு கர்நாடக இசையிலும் அவர் வல்லவர். வேங்கடமகி என்னும் தமது சமஸ்தான மார்க்கதரிசி ஒருவரைக் கொண்டு கர்நாடக இசையின் வழி காட்டியாக ''சதுர் தண்டி பிரகாசிகை'' என்ற அரிய நூலையும் இசை உலகுக்கு அருளியவர் அவர்.

இவ்வாறு பல பணிகள் புரிந்த அவர் ஒரு பணியைச் செய்ய மறுத்துவிட்டார். அவர் மகளை மதுரைச் சொக்கநாத நாயக்கர் கேட்டார் - விவாகம் செய்து கொள்ளத்தான். தமக்கு விவாக வயது இல்லாத காலத்திலும் கருணை மிகுதியால் கேட்டார். இதை விஜயராகவர் மறுத்தார். பாரதப் போரில் சண்டைக்கு எடுபிடியாக மாட்டைப் பிடித்தது போல் இங்கு மங்கையைப் பிடிக்கப் பார்த்தார் சொக்கநாத நாயக்கர். தஞ்சை அரசர் மறுக்கவே மதுரை மன்னர் போர் முரசு கொட்டினார். அவருடைய படை வல்லம் வரையில் வந்து விட்டது. அங்கிருந்து கடைசி முறையாகச் சேனாதிபதியை அனுப்பி, ''பெண்ணைக் கொடுக்கிறாயா? உன் நாட்டை அழித்துப் பெண்ணைச் சிறைப்பிடிக்கட்டுமா?'' என்று கேட்டார். அப்பொழுதும் மான பரணாகிய விஜயராகவன் மறுத்தார்.

மதுரை மன்னனின் தளவாயிடம், ''ஒகடி... ஒகடி... ஒஸ்தரா?'' என்று கேட்டார். 'ஒருவருக்கொருவர் சண்டையிடுவோமா? என்னோடு எத்தனை பேர்கள் வேண்டுமாயினும் ஒற்றைக்கொற்றை, மற்போரோ வாட்போரோ செய்யட்டும்.' மதுரைத் தளவாய் சிரித்தான்.

''அட, மூடா! ஏன் நகைக்கிறாய்? இது என் குடும்ப விஷயம். என் மகளைப் பற்றியது. இதில் நான் மக்களைப் போரில் ஈடுபடுத்த விரும்பவில்லை. அதனால்தான் சொல்லுகிறேன். உங்கள் மன்னருக்கும் அவர் படைகளுக்கும் வீரம் இருக்குமாயின் என்னோடு ஒற்றைக் கொற்றை போரிடட்டும்'' என்றார். தளவாயின் கண்கள் சிவந்தன. ''தானே வரும். அடுத்த ஒரு யாமத்தில் தாக்கும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

பூசையை முடித்துக் கொண்டு அந்தப்புரத்தில் உள்ள 365 ராணிகளையும் அழைத்தார் விஜய ராகவ நாயக்கர். ''மணமா? மானமா?'' என்று கேட்டார். ''மானத்தோடு மரணம்'' என்று ஒரே குரலில் கூவினர், வணக்கத்துக்குரிய அந்த இந்து மதப் பெண்ணரசிகள். உடனே மன்னர் வெடிமருந்தை அந்தப்புரம் முழுதும் நிரம்பச் செய்தார்.

தன் மகன் மன்னாருதாசை அழைத்துக் கொண்டு தாமே நேரில் போருக்குப் புறப்பட்டார். வழியில், ''மகனே! முதலில் நான் போர் செய்கிறேன். புத்திர சோகத்தோடு என்னை மடிய விடாதே!'' என்று அரசர் மகனிடம் மன்றாடினார். வீர மகனே தந்தையைக் காப்பது தன் கடமை என்று முன் சென்றான். நூற்றுக்கணக்கான பேர்



தன்னிகரில்லாச் சிறப்பு! கண்ணைப் பறிக்கும் வெளுப்பு! துப்புரவான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை. கரைகடந்த நுரைவளம். சலவையே வெகு எளிது. ஆம், சிறுவர் உடை முதல், சட்டை, சேலைவரை எல்லாத் துணிகளையும் கைப்பட வீட்டிலேயே சலவை செய்துகொள்ளச் சாலச் சிறந்தது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 45-140 TM

களை வீர சொர்க்கத்துக்கு அனுப்பி விட்டு இருவரும் வீரமாகப் போரிட்டனர். ஒரே நேரத்தில் தந்தையும், மகனும் வீரசொர்க்கம் எய்தினர்..... வானம் சிவந்தது. படபடவென்று வெடித்தது. அந்தப்புரத்திலிருந்து அக்கினி ஜ்வாலை காட்சி யளித்தது. அந்த மாதரசிகள் 365 பேர்களும் ஒன்றாக, வெடி மருந்தில் தீயிட்டுக் கொண்டு தீயில் வெந்தார்கள்.



இமைப்பொழுதில் உலகில் எத்தனையோ நடந்து விடுகின்றன. மன்மதன் எரிந்தது இமைப் பொழுதில். சீதையின் மணவினை முடிந்தது இமைப் பொழுதில்.

இதைப் போலவே தஞ்சையின் அந்தப்புரம் எரிந்ததும் இமைப் பொழுதில்தான்; அந்த இமைப் பொழுதில் ஓர் ஆச்சரியமும் நடந்தது.

தீயில் எஞ்சியது எதிரியின் கண்ணீரும், இந்திய மாதர்களின் கற்பும்தான் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அந்தத் தீயிலும் எரியாமல் நன்றி மிஞ்சியது.

நன்மையைத் தீமையாலும் அழிக்க முடியாது என்றால் தீயால் மட்டும் அழித்துவிட முடியுமா?

அரசரின் வாரிசாக அங்கு இருந்த செங்கமலதாஸ் என்ற குழந்தை ஒருவன் ஒரு பணிப்பெண்ணால் காப்பாற்றப் பட்டான். காலம் ஒன்றைத் தவிர அவளுக்கு வேறு நம்பிக்கையில்லை. கருணை ஒன்றைத் தவிர அவளிடம் செல்வமும் இல்லை. அவள் கருணை உடையவளாக இருந்தாள். அவள் பெயர் பங்கஜம்மா.

போர்க்களத்தின் நடுவே ஒரு பெண்மணி புகுந்து புகுந்து போர் வீரர்களுக்கு நீர் அளித்தாள். அவள் கையில் பெரிய கொம்பும் குவளையும் இருந்தன. அவள் தோளில் தண்ணீர்ப் பை தொங்கியது. ''இந்தா, கொஞ்சமாகக் குடி; மத்தவங்களுக்கு வேணும்'' என்று உத்தரவிட்டாள். செம்புத் தண்ணீர் தீர்ந்தது. ''இதை வைச்சுக்க, பையிலே தண்ணி கொண்டாரேன்'' என்று சொல்லிக் கூட்டத்தில் புகுந்து தப்பினாள் பங்கஜம்மா. தோளில் இருந்தது தண்ணீர்ப் பை அல்ல; அது காற்றடித்த பை. அதுதான் குழந்தை.

இரவுபகலாக ஓடினாள், என்னிடம் இராஜகுமாரன் இருக்கிறான் என்று எவரை நம்பிச் சொல்ல முடியும்? நாகப்பட்டினத்துக்குப் போய் விடுகிறேன். கட்டுமரத்தில் ஏறிக் கடலுக்குள் சென்று இக்குழந்தையைக் காப்பாற்றுகிறேன். கடலில் கடவுள் மட்டும்தான் இருக்கிறார். கடும் பகை இல்லை என்று நாகைக்கு ஓடினாள். யாராவது கேட்டால் நகைத்திருப்பார்களா? அவள் நம்பினாள்—நம்பிக்கையைக் காப்பாற்றினார் கடவுள்.

நாகையில் ஒரு செட்டியார் செல்வராக விளங்கினார். அவர் வீட்டுத் திண்ணையில் ஒரு பெண் ஒரு குழந்தையைத் திட்டிக் கொண்டிருந்தாள். இதைக் கேட்டு அவர் இரங்கினார். தம் வீட்டில் தாய்க்கும் மகனுக்கும் அடைக்கலம் கொடுத்தார். அரசாங்கக் குழந்தை என்று தெரிந்திருந்தால் பயந்தோடு கதவை அடைத்திருப்பார். அச்சம் தருமத்தையும் தடுத்து விடும் அல்லவா?

ஆண்டுகள் பல ஆயின. அரை வராகன் செலவில்லாமல் ஒருத்தி வீட்டு வேலையெல்லாம் ஓடியாடி உழைத்துக் கவனித்து வந்தாள். எடுபிடி வேலைக்கு ஓர் இளைஞனும் கிடைத்தான். மாதம் பத்து வராகன் ஆதாய வரவு என்றால் செட்டியார் விடுவாரா? செட்டியாருக்குச் செல்வம் குவிந்தது. அவருக்கோ புத்திரப் பேறில்லை. ஆதலால், இப் பையனையே சுவீகாரம் எடுத்துக் கொண்டால் நல்லது என்று எண்ணி அவனுக்கு நாகலக்ஷ்மி என்ற பெண்ணை விவாகத்துக்கும் ஏற்பாடு செய்தார்.

''ஏன், அவனுக்குத் திருமணம்?'' என்றாள் பங்கஜம்மா.

''அவன் நல்வாழ்வுக்குத்தான். என்னிடம் அடைக்கலம் வந்தவனை நான் காப்பாற்ற வேண்டாமா?'' என்று உருக்கத்தோடு கூறினார் செட்டியார்.

''இது உண்மைதானா? நீங்கள் அவன் மேல் நிஜமாகவே அன்பு வைத்திருக்கிறீர்களா?''

''என் நெஞ்சைக் கேள். இல்லையேல் நீலாயதாக்ஷியைக் கேள்.''

கதவைச் சாத்தினாள் பங்கஜம்மா. செட்டியாரின் காலில் விழுந்தாள். இரகசியத்தைக் காப்பாற்றுவதாக அவரிடம் உறுதி வாங்கிக்கொண்டு, ''இவன் தஞ்சை இளவரசன். நாயக்கர் குலத்தின் நல்விளக்கு. நான் அவனுடைய தாயல்ல. நன்றியுள்ள நாய்'' என்றாள். ''அவருக்கு நாகலக்ஷ்மியை விவாகம் செய்ய வேண்டாம். முதலில் ராஜ்யலக்ஷ்மியை விவாகம் செய்து கொடுக்க வேண்டும்'' என்று கெஞ்சினாள் அவள்.

செட்டியாரின் சிந்தனை இதைக் கேட்டதும் பொது தருமத்திலிருந்து குல தருமத்தில் பாய்ந்தது.

நல்ல நகை ஒன்று கையில் கிடைத்தால் நாலு தரகர்களையும் கையில் போட்டுக் கொண்டு அதை விற்கக்கூடிய இடத்தில் விற்று நல்ல லாபம் தேடுவது அவர் பழக்கம்.

அணிக்கே இப்படியென்றால் அரசு கிடைத்தால் விடுவாரா? இந்த வியாபாரத்துக்கு ''ராயசம் வெங்கண்ணா'' என்ற அரண்மனைப் பெருச்சாளி ஒன்றைத் துணை சேர்த்துக் கொண்டார். அவருக்குச் சேனாதிபதி பதவி என்றும் தமக்கு மந்திரி பதவி என்றும் பணிப் பெண்ணிடம் உறுதி பெற்றுக் கொண்டார். மூளை தீவிரமாக வேலை செய்தது.

''மதுரை சொக்கநாத நாயக்கர், தஞ்சையை மாற்றான் தாய் மகன் அழகிரி தலையில் கட்டி இருக்கிறார்.

''தொண்டைமானையோ சேதுபதியையோ உதவிக்கு அழைத்துத் தஞ்சையைத் தாக்கினால் தஞ்சை முதல் இராமேசுவரம் வரை தமிழ் மக்கள் ஆட்சியாகிவிடும். அதில் நமக்கு ஆதாயம் இல்லை. ஆகவே, விஜயபுரி சுல்தானிடம் செல்வோம். அவரும் எப்படியாவது தமிழ் நாட்டைப் பிடிக்க ஆசைப்படுகிறார். நமக்கென்ன பணம்தானே வேண்டும்?'' என்று கருதி மாறு வேஷத்தில் நடையாக நடந்து வெங்கண்ணாவுடன் பீஜப்பூர் சென்றார்.

''சபாஷ்!'' என்றான் அடில் ஷா.

சபாஷ் என்று யாரும் சொல்லி விடலாம். சண்டைக்கு சபாஷ் போதுமா? வீரர்கள் வேண்டாமா? தளபதி வேண்டாமா?

சிவாஜி மன்னரின் தம்பியாகிய ''ஏகோஜி'' என்ற தளபதியை பெங்களூரிலிருந்து அழைத்தார். அவர் பன்னிரண்டாயிரம் குதிரைகளை வீரர்களுடன் தயாராக வைத்திருந்தார். அவருடன் தமது நம்பிக்கைக்குப் பாத்திரமாகிய ''காதர், அகமத் அலி'' என்ற மந்திரிகளையும் அனுப்பி, ''ஜாவ்'' என்று உத்தரவிட்டு விட்டு ஜனானாவுக்குப் போய் விட்டார் சுல்தான்.

''வெற்றி கூறுமின், வெண்சங்கூதுமின் ஜேய் ஜேய் பவானி!'' என்று புறப்பட்டது ஏகோஜியின் மராட்டியச்சேனை.

செக்கச் சிவந்த கண்களும், சிங்கக் குரலும், பக்கத்தில் நின்றாலே பயப்படச் செய்யும் ஆண்மையும் உடையவர் ஏகோஜி. கொடுமையே அவரைக் கண்டால் அஞ்சும் தோற்றம் உடையவர்.

ஏகோஜி தஞ்சையை நோக்கி வரும் போதே அரியலூர் வழியாக மைசூருக்கு ஓடிவிட்டார் அழகிரி நாயக்கர். அது தான் சௌகரியம். உள்ளூர்க்காரன் ஊரை ஆண்டால் ஓட முடியாதல்லவா? எங்கிருந்தோ வந்தார். இருக்கும் வரை வாழ்ந்தார். எதிரி வந்தவுடன் எடுத்தார் ஓட்டம்.

ஆனால் அவரிடம் பணிபுரிந்த நம்மவர் படை அய்யம்பேட்டையில் ஏகோஜியை எதிர்த்து வீரசுவர்க்கம் எய்தியது. ஏகோஜி வடவைக் கனல் வருவது போல் பீஜப்பூர் சுல்தானுக்கு ''ஜே, ஜே'' என்று கூறிக் கொண்டே தஞ்சைக்குள் வடக்கு வாசல் வழியே நுழைந்தார்.

''சுல்தான் நீடூழி வாழ்க'' என்று செங்கமலதாசும், ராயசம் வெங்கண்ணாவும், நாகப்பட்டினம் செட்டியாரும் தரையைத் தொட்டுச் சலாம்செய்தனர்.

செங்கமலதாஸ் அரியணையில் அமர்த்தப்பட்டவுடன் ஏகோஜியின் குதிரைப் படையின் கொள்ளுச் செலவுக்காகக் கும்பகோணம் வட்டத்தையும், பாக்கு வெற்றிலைச் செலவுக்காகப் பாபநாச வட்டத்தையும், மாரத விரதத்தை மெச்சி மன்னார் கோயில் வட்டத்தையும் ஏகோஜிக்கு செங்கமலதாஸ் பரிசு அளித்தார். ஆம். கன்னித் தமிழ் நாட்டில் காவேரி மாநிலத்தில் ஆளவேண்டி மூன்று பகுதிகளை நாயக்க மன்னன் மகாராட்டிரக் குதிரைப் படைத்தலைவனுக்கு மானியம் விட்டார்.

பட்டாபிஷேகம் விமரிசையாக நடந்தது. ஏகோஜியின் மீது பட்டும் பீதாம்பரங்களும் குவிந்தன. செங்கமலதாஸ் ஏகோஜியை வணங்க வந்தார். ''என்னை வணங்காதே. பீஜப்பூர் சுல்தான் அவர்களை வணங்கு'' என்று உரத்த குரலில் மொழிந்தார் ஏகோஜி. எழுநூறு மைல் தள்ளியிருக்கும் சுல்தானுக்கு மரியாதையாகத்தஞ்சையிலிருந்து அதிர்வேட்டுகள் 'படார் படார்' என்று வெடித்தன.

இதைக் கேட்டுப் பல நெஞ்சங்கள் பளீர் பளீர் என்று வலித்தன. கோவில் மணிகளின் நாக்குகள் அற்று வீழ்ந்தன. பக்தர்கள் தங்கள் நாவைக் கட்டிக் கொண்டார்கள். இதய கமலத்தில் இருக்கும் இறைவன் பெயரை இரைந்து சொல்ல வேண்டுமா என்று அடக்கமாக நடந்து கொண்டார்கள்.

விழா முடிந்தது. வெற்றி வீரன் ஏகோஜியின் கண்கள் விசாலமான அரண்மனையை நோக்கின. திடீரென்று தஞ்சைக் கோட்டையின் நடுவில் இருக்கும் ஏழ்நிலை மாட மாளிகையின் மீது ஏறினார். அவர் கூடவே காதரும் அகமது அலியும் ''சுல்தான் ஜிந்தாபாத்'' என்று கோஷமிட்டுக் கொண்டு பின்தொடர்ந்தனர். நடுங்கிக்கொண்டே நாயக்க மன்னரும் பிறரும் பின் சென்றனர். நாலாவது மாடத்தில் ஏறும்பொழுது, திரும்பி அரண்மனையைப் பார்த்தார். எங்கு பார்த்தாலும்

தங்கக் கலசங்கள் அவர் கண்களில் ஆவலைத் தூண்டின. அதன்பின் படிகளை நான்கைந்தாகக் கடந்து ஏழாவது உப்பரிகையை அவர் ஏற ஆரம்பித்த போது உப்பரிகை அதிர்ந்தது. ஒவ்வொரு படியையும் தாண்டும்போது வெற்றிப் படிகளைத் தாண்டிப் புகழ் ஏணியில் ஏறுவதுபோல் மிடுக்குடன் ஏறினார். அந்த மாட மாளிகையின் உச்சி மேல் சுல்தானின் வெற்றிக் கொடியை நாட்டியதுபோல் ஏகோஜி நின்றார். கூட வந்தவர்களை ஒருமுறை முறைத்துப் பார்த்தார். ''சுல்தான் வாழ்க'' என்று எல்லோரும் கூச்சலிட்டனர். அடுத்த கணமே எதை இடித்துத் தள்ள உத்தரவு வருமோ, எங்கே கொள்ளை கிடைக்குமோ என்று எல்லோரும் தயாராக நிற்கையில் கீழ்த்திசையைப் பார்த்து நின்றுகொண்டிருந்த ஏகோஜியின் முகம் வடக்கே திரும்பியது. அவர் கண்கள் அடக்க முடியாத ஆவலில் மின்னின. 'ஹரஹர மகாதேவ்' என்று ஆவேசத்துடன் கூவினார் ஏகோஜி.

உப்பரிகையின் உச்சியிலிருந்து தங்கள் தலைவர் சிம்மக் குரலில் 'ஹரஹர மகாதேவ்' என்று கூவியதைக் கேட்டவுடன் பன்னிரண்டாயிரம் வீரர்களும் மயிர்க்கூச்சல் அடைந்தார்கள். உடல் முழுதும் வீரக் கனல் குபுகுபுவென்று ஏறியது. துள்ளிக் குதித்துப் பரிகளின் மீது தாவினர். பன்னீராயிரம் வீர வாள்கள் 'சரேல் சரேல்' என்று ஒரே கணத்தில் உருவப்பட்டன. **(தொடரும்)**

படித்துப் பாருங்கள்

லிப்கோ அகராதி

பல விதமான அகராதிகளை லிப்கோ ஸ்தாபனத்தினர் வெளியிட்டுள்ளனர். அவர்களது ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி பத்தாவது பதிப்பாக அண்மையில் வெளிவந்திருக்கிறது. ஆங்கில வார்த்தையைக் கொடுத்து அதன் உச்சரிப்பைத் தமிழில் தருகிறது இந்த அகராதி. அதையடுத்துச் சொல்லின் அர்த்தத்தை முதலில் ஆங்கிலத்திலும் பிறகு தமிழிலும் அளிக்கிறது.

உச்சரிப்பைத் தமிழில் தரவேண்டியது அவசியம்தானா? ஆங்கில அகராதிகளில் பின்பற்றப்படும் வழிவழி வந்த முறையையே கையாள்வது நலமல்லவா என்று எண்ணத் தோன்றுகிறது. '' Aborigines '' என்பதை அபோரிஜிநீz என்றும் abject என்பதை ஆப்ஜெக்ட் என்றும் உச்சரிக்க வேண்டும் என்கிறது அகராதி. இப்படி ஒரு புதிய உச்சரிப்பு முறையைச் சிருஷ்டிக்க வேண்டியதன் அவசியம்தான் என்ன?

ஆங்காங்கே குறிப்பிட்ட ஒரு வார்த்தைக்குக் கீழ் பொருத்தமான, சுருக்கமானதொரு பொன் மொழி தரப்பட்டிருப்பதைப் பாராட்டலாம். ஆனால் இதையே தேவையற்ற அளவுக்கு நீட்டும் போது சலிப்பு ஏற்படுகிறது. (Rope) என்ற வார்த்தைக்குக் கீழே (to know the ropes) என்ற சொற்றொடருக்கு உள்ள விசேஷமான பொருளைத் தருவதில் பொருத்தம் உண்டு. ஆனால் ரஷ்யன் என்ற வார்த்தைக்குக் கீழே ராமாயணம் ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது என்று கூறுவது ஏன்? இந்தச் செய்திக்கு அகராதியில் எதற்காக இடம் தர வேண்டும்? இன்னொன்று. ஆங்கிலத்தின் அவசியம் பற்றிப் பிரசாரம் செய்கிறது அகராதி. இப்படிப் பல அநாவசியமான விஷயங்கள் அகராதியில் இடம் பெற்றுள்ளன.

இதில் உள்ள அனுபந்தங்கள் ஏராளம். உபயோகமானவையும் கூட. ஆங்காங்கே சிறுசிறு படங்கள் உள்ளதை வரவேற்கலாம்.

இதில் மொத்தம் எத்தனை பக்கங்கள் உள்ளன என்று கணக்குப் போடாமல் கண்டுபிடிக்க முடியாதபடி ஒரு குழப்பம் நிலவுகிறது.

பெரிய புத்தகம், அரிய முயற்சி. வீட்டிலும் சரி, அலுவலகத்திலும் சரி, அடிக்கடி பயனுக் கூடியதுதானே அகராதி.

பிரசுரம்: லிட்டில் ஃபிளவர் கம்பெனி, சென்னை—17. விலை: ரூ. 12:00.

மனித தெய்வங்கள்

ஸ்ரீநகரில் ராணுவ அதிகாரிகளான முரளியும் சலீமும் உற்ற நண்பர்கள். இவர்களது வாழ்க்கையில் ஆயிஷா என்ற அழகுப் பெண்மணி, பாகிஸ்தானிலிருந்து வந்தவள் குறுக்கிடுகிறாள். அவளுக்கு உதவி செய்யும் சலீம் உளவாளியாயிருப்பானோ என்ற ஐயத்தை எழுப்பி, முடிவில் நம்மையறியாமலே ஒரு சொட்டுக் கண்ணீர் விடச் செய்கிறார் ஆசிரியர் 'மனிததெய்வங்கள்' என்ற சிறு கதையில்.

இந்தத் தொகுதியில் இடம் பெற்ற 'அழிவும் ஆக்கமும்' இரண்டாந் தாரத்தை மணம் புரிந்த நாயுடுவின் தர்மசங்கடமான நிலைமையைச் சித்திரிக்கிறது. 'மனித இயந்திரம்', 'பிரச்னை ஒன்று நிகழ்ச்சி இரண்டு' போன்ற சாதாரணக் கதைகளும் இல்லாமல் போகவில்லை.

'புலி வேட்டை' அருமையான குத்தல் மொழி (Satire) பொதிந்துள்ள ஹாஸ்யக் கதை. ,புலி வேட்டை ஆடிய ராஜா பிரதாப் சிங்கும், டாக்டர் ஆதிசேஷனும் சரியான வேடிக்கைக் கதாபாத்திரங்கள்; அவர்கள் உரையாடல் நம்மை யறியாமலே நகைக்க வைக்கின்றது. தில்லியிலே வாசம் செய்யும் ஆசிரியருக்கு நையாண்டிக் கதை எழுத அருமையான கரு கிடைத்ததில் வியப்பில்லை.

கதை எழுதுவதிலே தமக்கென்று ஒரு தனிப் பாணியை வகுத்துக்கொண்டுள்ள இந்திரா பார்த்தசாரதியின் தமிழ் நடையிலே அழுத்தமும் வேகமும் இருக்கின்றன.

பிரசுரம்: தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை—5; விலை ரூ. 3:00.


கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
7
நம் மன்னர் சிம்ம வர்மருக்கு ஆனந்தனைக் கண்டாலே பிடிப்பதில்லை என்று கேள்விப் பட்டேன். உண்மைதானா வஜ்ர கீர்த்தி?
உண்மைதான் சாமுண்டரே! ஆனந்தனின் அழிவினைக் கண்டு நம் மன்னருக்கு மகிழ்ச்சியே ஏற்படும். இன்று தாங்கள் நடந்து கொண்ட முறைக்காக உங்களைத் தக்கபடி கௌரவிப்பார்.
இதற்கு மேல் ஏதும் கூறத் தேவையில்லை வஜ்ரகீர்த்தியாரே, நாளைக் காலை போர்க்களத்திலே புறமுதுகிட்ட கோழையாக ஆனந்தனைக் குற்றம் சாட்டி மரண தண்டனை விதிப்பேன்.
பாதாளச் சிறையிலே ஆனந்தன்...
இப்போதுதான் எனக்குப் புரிகிறது. எல்லாமே திட்டமிட்ட சதிச் செயல்கள்தான் என்று. வஜ்ர கீர்த்தியை என்னுடன் அனுப்பியதே கூட என் மரணத்தை உறுதிப் படுத்தத்தானோ? வஞ்சக நெஞ்சம் கொண்டவர்களிடையே தான் குற்றமற்றவன் என்பதைக் கூறிக் கதறித்தான் என்ன பலன்? ம்... ரூபமதி... நீ எங்கிருக்கிறாயோ? என்ன வேதனைப் படுகிறாயோ?
மங்கள துர்க்கத்து மன்னரே! கிளம்புங்கள். தங்கள் வீரத்துக்கேற்ற பரிசு தரப் போகிறார் எங்கள் அரசர்.
இந்தக் கயவர்களிடமிருந்து மரண தண்டனையைத் தவிர வேறு எதை நான் எதிர் பார்க்க முடியும்?
ஆனால் எதிர் பாராதது ஒன்று நடந்தது. ஆனந்தனை வீரர்கள் வீதி வழியே அழைத்துச் செல்லும் போது கந்தனை அடைத்து வைத்துள்ள கொட்டடியைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஆனந்தனைக் கண்ட கந்தன்...
ஆனந்தா, நண்பனே! இது என்ன கோலம்...?
கந்தனின் சந்திப்பு ஆனந்தனை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது. ஆனால் வீரர்களோ அவனை மரணத்தின் வாசலுக்குத் தள்ளிக் கொண்டு போனார்கள்...
நாளை மரணத் தயாராகுங்கள்
வீரனாக வாழ்ந்தது கோழை என்ற குற்றச் சாட்டுடன் மடிவதுதான் என் தலை விதியா?


வில்லாளிகளே! இந்தக் கோழையின் இதயத்துக்குக் குறி வையுங்கள் உங்கள் அம்புகளை.
ஆனந்தனின் மரணம் எனக்கு மன்னனின் நம்பிக்கையைத் தேடித் தரும்.
என் ஆனந்தனா கோழை? ஐயோ! இது அடுக்காது. அக்கிரமக்காரர்களின் சூழ்ச்சிக்கு என் நண்பனைப் பலியாக விடுவேனா?
உறுதியான இரும்புக் கரம் கூண்டைக் காவல் காத்து வந்த காவலாளியின் கழுத்தை நெரிக்க அவன் மூச்சுத் திணறி மயங்கி விழுந்தான்...
அவன் இடையிலிருந்த சாவி கந்தனின் கைக்கு மாறியது. அடுத்த விநாடி, உத்தரவு தரக் காத்திருந்த சாமுண்டனின் தலையை நோக்கிப் பறந்தது அந்த இரும்புப் பூட்டு.
ஆ...வ்...வ்
ஆனந்தா, தாமதிக்காதே. கோழை என்று ஏசிய கூட்டத்தைக் குதறி எறிந்து கிளம்பு.
கந்தா! என் நண்பா. நேற்றெல்லாம் உன்னைத்தானடா எண்ணிக் கொண்டிருந்தேன்.
வல்லவர்கள் இருவரின் வாள் வீச்சுக்கு முன்னால் வில்லாளிகள் சின்னாபின்னமாகிறார்கள். மற்றவர்கள் ஓடுகிறார்கள்.
ஆனந்தா ஓடு! யோசிக்காதே. என்னைப் பற்றிக் கலங்காதே. கோட்டைக் கதவை மூடுமுன் தப்பி விடு...
உன்னை இந்தக் கொடியவர்களின் கையில் விட்டு விட்டா? முடியாது கந்தா, முடியவே முடியாது......

தொடரும்..



இதோ:
மாஜிக்
கண்ணுக்கு வெண்மை
கருத்துக்குப் புதுமை
ஆம், மாஜிக் என்றாலே அலாதி தான். அதன் அபரிமித வெண்மையாக்கும் ஆற்றல் வெள்ளைத் துணிகளைப் புதியன போல் வெளுக்கிறது. அதன் தூய்மை மணமோ துணிகளிலே நிலைக்கிறது. மாஜிக் நல்கும் நுரைவளம் இழைகளுக்கிடையில் உள்ள அழுக்குகளை நீரோடு களைகிறது. வீட்டுச் சலவையை சுலபமானதாகவும் சிக்கனம் உள்ளதாகவும் செய்கிறது. பருத்தியோ, பட்டோ, நைலானோ, டெரீனோ, என் கம்பளித் துணிகளையும் கூட மாஜிக் குடன் சலவை செய்யுங்கள். மாஜிக் ஒரு விந்தை மிக்க சலவைத் தூள்!
Magic
TATA'S
Wonder Washing Powder
BLUE
Magic
WITH ULTRA WHITENING POWER
cleans clothes WHITER, BRIGHTER....FRESHER, too!
மாஜிக் வெண்மை, மாஜிக் மெருகு, மாஜிக் புதுமை!
டாடா
தயாரிப்பு

ஒரு வாயாடிப் பெண்மணியைப் பேசாமல் வாயடைத்து உட்கார்ந்திருக்கும்படி செய்ய மூன்று வழிகளை ஓர் ஆங்கில புரொபசர் சொல்லியிருக்கிறார்:



1. அப்பெண்மணியை 'அவளுக்குக் குழந்தைகள் இருக்கின்றனவா?' என்று கேள். இல்லையென்றால் 'ஏன் இல்லை?' என்று கேள்.

2. அவளுக்குக் 'கல்யாணமாகிவிட்டதா?' என்று கேள். இல்லையென்று சொன்னால் அவளுக்குக் 'குழந்தைகள் இருக்கின்றனவா?' என்று கேள்.

3. அவளுக்குக் 'குழந்தைகள் இருக்கின்றனவா?' என்று கேள். இருக்கின்றன என்று சொன்னால் அவளுக்குக் 'கல்யாணமாகிவிட்டதா?' என்று கேள்.

ஆதாரம்: இங்கிலீஷ் டைஜஸ்டு. அனுப்பியவர்: 'விக்கி'

குருடர்களுக்கு உதவிய வௌவால்!

குருடர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய ஒரு சாதனத்தைச் சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சாதனம் குருடர்கள் தெருவில் செல்லும்போது, கார், லாரி, மனிதர், கம்பங்கள் போன்ற எதுவும் எதிரே வந்தால் அதை முன்கூட்டியே அறிவிக்கிறது!

'டார்ச்லைட்' போன்ற இப்பொருளைக் குருடர்கள் கையில் எடுத்துச் சென்றால், விபத்துக்கு உள்ளாக மாட்டார்கள். காரணம் சுமார் 35 அடி தூரத்திலுள்ள பொருளைக்கூட அறிவிக்கக்கூடிய சக்தி வாய்ந்தது இக்கருவி! இதன் எடையும் எட்டு அவுன்ஸ்தான்.

இப் புரட்சிகரமான சாதனத்தைக் கண்டுபிடிக்கக் காரணமாக இருந்தது வௌவால்தான்! ஏனெனில், வௌவால் இருட்டு நேரத்தில், பார்வை மந்தமாக இருக்கும்போது எப்படி இரையைப் பிடிக்கிறது என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். இவை தமது வாயிலிருந்து ஒருவித ஒலி அலையை எழுப்புகின்றன வென்றும், அவ்வொலி அலை இரையின் மீது பட்டு மீண்டும் இவற்றின் காதில் வந்து மோதுவதால், வௌவால்கள் இருட்டில்கூட இரை எவ்வளவு தூரத்திலுள்ளது என்று அறிய முடிகிறது என்பதையும் இவ் வாராய்ச்சி மூலம் கண்டனர். இதை அடிப்படையாகக் கொண்டு தான் இந்தப் புதுக் கருவியைக் கண்டுபிடித்தனர்.

ஆதாரம்: "சோவியத் யூனியன்"
தகவல்: வி. சுப்ரமணியன்





"என்னுங்க, நீங்க பணம் கட்டின குதிரைங்கெல்லாம் ஓடிச்சுதுங்களா?"

"அதை ஏன் கேட்கிறீங்க? ... குதிரைகளைவிடக் கையிலே இருந்த பணமெல்லாம்தான் வேகமா ஓடிச்சுது!"



அயோத்திக் கரிகாலன்

ரா. கணபதி

''ராட்சதனே! சிறிது கருணை காட்டு; ஒரே ஒரு நாள் மட்டும் பொறுத்துக்கொள்'' என்று கண்ணீருக்கிடையே வேண்டிக் கொண்டாள், சுசீலை.

ராட்சதன் சிரித்தான். ஆனால் அது கொடூரச் சிரிப்பு அல்ல. மனம் வெதும்பிப் போன நிலையில் அழமாட்டாமையாலேயே சிரித்தான் அவன்.

''அந்தணப் பெண்ணே! அரக்கனை இரக்கம் காட்டச் சொல்கிறாயே! இது என் இயற்கைக்கே பொருந்தாதே! நானும் முடிந்த மட்டில் என் சுபாவத்தை அடக்கிக்கொள்ளத்தான் அசுர யத்தனம் செய்கிறேன். ஆயினும் இயலவில்லை தாயே! என்னை மன்னித்துவிட்டு நீ செல்வாய். நீ மேலும் இங்கே நின்றால் என் அசுர சுபாவம் உன் ரத்தத்தைச் சுவைக்கவும் வெறியூட்டக் கூடும். என்னை அப்படிப்பட்ட பாதகத்துக்கு ஆளாக்காமல் வீடு செல்வாய், அம்மணி!'' என்று தழு தழுத்த குரலில் கூறினான் அரக்கன்.

சுசீலை குமுறிக் குமுறி அழுதாள். ''நான் வீடு செல்வதா? வீடு? வீடு? அப்படியொன்று இனி எனக்கேது? கணவரைக் கண்ணுக்கெதிரே அரக்கன் வசம் விட்டு விட்டுச் சென்று நிம்மதி காண்பது முடியுமா? உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே! என்னிடம் தயை காட்டு. இதோ மரத்தில் கட்டி வைத்திருக்கும் எனது கணவரை அவிழ்த்துவிட்டு. இருவரும் உன்னைத் தெய்வமாகக் கருதி வாழ்த்தி வீடு செல்கிறோம். நாளையே மீண்டும் இங்கு வந்து, உனக்குப் பலியாகிறோம். ராட்சஸனே! உன்னிடம் மனம் விட்டு, வாய் விட்டு என் ஆதங்கத்தைச் சொல்கிறேன்: இன்று காலைதான் எங்களுக்கு விவாகமாயிற்று. இன்னும் ....இன்னும்.... நாங்கள் தாம்பத்திய சுகம் இன்னதென்று காணவில்லை. ஒரு நாள், ஒரே ஒரு நாள், உயிர்ப் பிச்சை தருவாய் அப்பனே'' — மானத்தை! விட்டுப் பேசியதில் அப்பெண்ணின் முகம் சிவந்து, தானாகவே கவிழ்ந்துகொண்டது. அவளுடைய கணவன் அதைச் சொல்லியிருந்திருந்தால் யுக்தமாக இருந்திருக்கும். ஆனால் அவனோ பயப் பிராந்தியினாலும், மரத்திலே கொடிகளால் அழுந்தக் கட்டப்பட்டிருந்ததாலும் மயக்கம் அடைந்திருந்தான்.

''நீ எல்லா அரக்கர்களையும்போல் இல்லை. உன்னோடு பேசவும் விவாதிக்கவும் முடிகிறது. உனக்கு இதயம் இருப்பதாகத் தெரிகிறது. என் பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பாய்'' என்று மீண்டும் யாசித்தாள் சுசீலை.

ராட்சதனின் கண்களிலிருந்து பலபலவென நீர் பொழிந்தது.

சிறிது பொழுது மௌனமாக இருந்து விட்டுப் பின்னர் பேசினான். ''பிராம்மணி! என்னை நீ காப்பாற்றினாய். அசுர சுபாவத்திலிருந்து எனக்கு விடுதலை தந்தாய். உன் கணவனுக்கு விடுதலை தருகிறேன். ஆனந்தமாக வீடு செல்லுங்கள். இன்பமாக இல்லறம் நுகருங்கள். நாளைக்கும் சரி, வேறென்றுமே சரி, இங்கு நீங்கள் வந்து எனக்குப் பலியாக வேண்டாம்'' என்று கூறி அரக்கன் மரத்தை அணுகி, அந்தண யுவனைப் பிணைத்த கட்டுக்களை அவிழ்க்கலானான்.

சுசீலைக்கு இதயம் விம்மியது. நிகழவொண்ணாத அதிசயம் நிகழுவதைக் கண்கள் விரியப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தாள் அவள். 'பாம்பின் வாயிலிருந்து தேரை விடுபடுவதுண்டா? இந்த அற்புதம் எப்படி நிகழுகிறது? இவன் யார், விசித்திரமான ராட்சதனாக இருக்கிறானே! மனம் இளகும் அரக்கன், கனியப் பேசும் அரக்கன், கண்ணீர் விடும் அரக்கன் உண்டென்று எங்கேனும் கேள்விப்பட்டிருக்கிறோமா? இவன் எத்தனை கருணையுடன், இதமாகக் கட்டுக்களை அவிழ்க்கிறான்! இன்னும் சில சுற்றுக்கள் தாம் மீதமுள்ளன! அதையும் அவிழ்த்து

விட்டால், தன் அன்புக் கணவர் விடுபட்டு விடுவார். அப்புறம் அவருக்கு மயக்கம் தெளிவித்து அழைத்துச் செல்ல வேண்டியது தான். ஆஹா! இப்போதே அவருக்கு மயக்கம் தெளிவதாகத் தோன்றுகிறதே! தலையைப் புரட்டுகிறார், கைகளை மூடி மூடித் திறக்கிறார் — இதெல்லாம் உண்மைதானா?' சுசீலை தன் கண்களை மூடி மூடித் திறந்து பார்த்தாள்.


கட்டுக்களையெல்லாம் அவிழ்த்து விட்டு, துவளும் பிராமண வாலிபனை இரு கைகளாலும் தூக்கினான் அரக்கன். கணவனைத் தன் மடியில் தாங்கிக் கொள்ள ஆயத்தமாக அமர்ந்தாள் சுசீலை.

ஆனால்... ஆ!... இதென்ன! சுசீலையின் ரத்தம் அப்படியே உறைந்து விட்டது; சித்தமும் உறைந்து விட்டது. அவள் கண்கள் அந்தக் கோரமான காட்சியின் பக்கமாகத் திறந்திருந்தாலும் அதைப் புரிந்து கொள்ள இயலாமல் அப்படியே நிலைகுத்திட்டு விட்டன.

அவளுக்கு மீண்டும் சுய நினைவு வருகையில் நெஞ்சை உலுக்கும் விம்மல் ஒலி அந்தக் காடு முழுவதிலும் நிறைந்திருந்தது.

சிறிது நேரம் அவளுக்கு எதுவுமே புரியவில்லை. தான் யார், ஏன் இந்தக் காட்டுக்கு வந்தோம் என்பதும், அங்கு இவ்வாறு பொருமிப் பொருமி விம்முவது யார் என்றும் முதலில் அவளுக்குப் புரியவில்லை. சிறிது சிறிதாக எல்லாம் நினைவுக்கு வந்தது.

'அன்று காலைதான் அவளுக்கும் சுசர்மனுக்கும் விவாகச் சடங்குகள் நடந்து முடிந்தன. அவள் ஓர் அநாதை. யாரோ தூர பந்துவின் வீட்டில் வசித்து வந்தாள். ஏழை சுசர்மனுக்கு எவ்வித கஷ்டமும் தராமலே அவளை மணம் முடித்து வைத்து, அன்றைக்கே அவனோடு அவளை அனுப்பி விட்டார் அந்தத் தூரபந்து. சுசர்மன்



வழி தவறி அவளை இந்தக் காட்டுக்கு அழைத்து வந்தான். காட்டில் ஓர் அரக்கன்...

சுசீலைக்கு உடம்பு குப்பென்று வியர்த்தது.

அதற்கு மேல் அவளால் நினைக்க முடியவில்லை. நினைக்க மனம் இடம் தரவில்லை என்றும் சொல்லலாம். ஆனால் அவள் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் அந்தப் பயங்கரம் நடந்து முடிந்திருக்கும் அல்லவா? அவள்தான் கண்ணுக்கு மெய்யாகக் கண்டாளே! அந்த அரக்கன் அவள் கணவனை... பின் இப்போது அவள் ஏன் விம்முகிறாள், இந்த வனமெல்லாம் குலுங்கும்படி?

வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டதால் சுசீலை அசாதாரணமான தெளிவு பெற்று விட்டாள். கம்பீரமான, நிதானமான குரலில் கேட்டாள்: ''ராட்சதனே! நல்ல விருந்துண்டாய். சந்தோஷமாயிரு. ஏன் கண்ணீர் விடுகிறாய்? மகிழ்ச்சியுடன் என்னையும் அவர் சென்ற இடத்துக்கு அனுப்பி வைப்பாயாக. அவரது அஸ்திகள் ஏதேனும் மீதம் வைத்திருப்பாயாகில் அவற்றுக்கு நான் தகன சம்ஸ்காரம் செய்து, அந்த அக்னியிலேயே மூழ்கி, அவரிடம் செல்வேன். முன்பு நான் கோரியதை நீ செய்யாவிடினும், இப்போதாகிலும் சிதை அடுக்கித் தீமூட்ட எனக்கு மகிழ்ச்சியுடன் சகாயம் செய்வாய்'' என்றாள்.

ஓர் அபலைப் பெண்ணின் ஆக்ஞையைத் தலைமேல் ஏற்றுக் கொண்டு அந்த அரக்கன் சிதை தயார் செய்தான். சுசர்மனின் எலும்புக் கூட்டை அதில் இட்டான். தீமூட்டுவதற்காகச் சுசீலையிடம் சிக்கிமுக்கிக் கற்களைத் தந்து, அவளைப் பிரதட்சிணம் செய்து வணங்கினான். வணங்கிய தலையைப் பூமியினின்று எடுக்காமல் புரட்டிப் புரட்டி விம்மினான்.

அவனையே அன்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் சுசீலை. ''பணிவும் பரிவும் உருவான அற்புத அரக்கனே! நீ உன் இயல்பை மீறி மானுட லட்சணங்களோடு வாழ அந்தரங்கமாகப் பாடுபடுவதை உணர்ந்தேன். கணவனோடு சககமனம் செய்கிற சதி சாட்சாத் சதி தேவிக்குச் சமானம் என்பார்கள். அதனால் நான் உனக்கு வரம் தருகிறேன். நீ உத்தமமான மானுட இயல்புகளைப் பெற்றுப் புவியில் பெயரும் புகழும் பெறுவாய்'' என்று மனப்பூர்வமாக ஆசி கூறினாள்.

அடுத்த கணம் சிக்கிமுக்கிக் கற்களை உரசினாள். அவளது உள்ளத்திலிருந்து பீறிட்ட அன்பு போல், கற்புப் பொறிபோல் அதிலிருந்து தீச்சுடர்கள் வெளிப்பட்டன. நன்கு உலர்ந்த சிதை ஜொலித்தது. அந்த ஜோதியோடு ஐக்கியமாயிற்று பதிவிரதா ஜோதி.

அரக்கன் சிதையின் பக்கத்திலேயே அமர்ந்தான். சிதையின் தகிப்பைக் காட்டிலும் சிந்தையின் தகிப்பு உக்கிரமானது என்பதை அப்போது அவன் பரிபூரணமாக உணர்ந்தான்.

மனத்தைக் கல்லாக்கியபடி, சிதையைக் கிளறிக் கிளறிக் கொடுத்துக் கொண்டிருந்தான். பழைய சம்பவங்களையும் நெஞ்சத்தில் கிளறிக் கொடுத்துக் கொண்டு, பச்சாத்தாபத் தீயில் பொசுங்கினான்.


சூரிய வம்சத்தின் கனி ராமபிரான் எனில், அதன் மலர் ரகு. ரகுவின் வழித்தோன்றல் என்பதால்தான் ராமனை ராகவன் என்கிறோம். ராமனையும் அவனது முன்னோரையும் பின்னோரையும் பாடிய காளிதாஸன், அப்படிப் பாடிய காவியத்துக்கு ரகுவம்சம் என்றே பெயரிட்டான்.


அந்த ரகு வம்சம் வளருவதற்காக ரகு பெற்ற அருமைப் புதல்வன்தான் முதலாவது ராகவன். ஆனால் அவனுக்கு ராகவன் என்று பெயரிடவில்லை. விரிந்து பரந்த புகழ் வாழ்வை அவன் வாழ வேண்டும் என்ற கருத்தில் பிரவிருத்தன் என்று பெயரிட்டான் ரகு மகராஜன். தேகமிருந்த அப்பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒளியிடம் விசேஷப் பற்று இருந்ததால் திவோதாஸன் என்றும் ஒரு பெயர் ஏற்பட்டது. ஒளிக் கடவுளாகிய சூரிய குலத் தோன்றல் அல்லவா? ஆனால் அவன் யௌவனப் பிராயமடைந்து, ரகுவுக்குப் பின்னால் அரியணை ஏறிய போது இவ்விரு பெயர்களுமே மறைந்து போயின. தன் பிரஜைகளையெல்லாம் மித்திரர்களாகக் கருதி உறவு பூண்டு ஒழுகிய அவனை — மக்கள் அனைவரையும் சகாக்களாகக் கருதித் தோழமை பாராட்டிய அவனை — மித்ரஸகன் என்றே நாடும் நகரமும் வாழ்த்தி அழைத்தன. யாக அக்னியில் நெய் சேர்ந்தது போல் அவன் கீர்த்தியைக் கொழுந்து விட்டெரியச் செய்யப் பத்தினியாக வந்து வாய்த்தாள் மதயந்தி. மல்லிகையில் ஓர் இனம் மதயந்தி. பெண் குலம் என்ற பூங்காவனத்தில் மல்லிகையாக மணம் பரப்பிய தூயவள் மதயந்தி.


தண்டகவனத்தில் தலையெடுத்துத் திரிந்த நிசிப் பிரியன், தமோதாஸன் என்ற இரு அரக்க சோதரரை அடக்கப் புறப்பட்டான் மித்ரஸகனாகிய திவோதாஸன். அவர்களது பெயர்களை சுட்டிக்காட்டுவது போல் அது ஒளிக்கும் இருளுக்குமிடையே நடந்த போராயிற்று. தமோதாஸன் மாண்டான். நிசிப் பிரியன் ஓடி ஒளிந்து தப்பினான். மித்ரஸகன் வெற்றி வீரனாக அயோத்தி அரண்மனைக்குத் திரும்பினான்.

சகோதரனைக் கொன்ற அரசனைப் பழி வாங்க எண்ணினான் அரக்கன் நிசிப் பிரியன். வஞ்சனையால்தான் அப்பராக்கிரமசாலியைப் பழி வாங்க முடியும் என்று கண்டான். பிராம்மண வேடம் கொண்டு அரண்மனைக்கே வந்து சமையற்கட்டில் பரிசாரகனாக அமர்ந்தான். உண்ட வீட்டுக்கு—தானே ஒரு விதத்தில் உண்பிக்கும் வீட்டுக்கு — இரண்டகம் செய்யத் திட்டம் தீட்டினான் நிசிப் பிரியன்.

ஒரு நாள் அவ்வரக்கன் மித்ரஸகனின் உருவத்தை எடுத்துக் கொண்டு சூரியவம்ச குலகுருவாகிய வசிஷ்ட மாமுனிவரை அடைந்தான். அன்று அரண்மனையில் போஜனம் செய்யுமாறு அவரை வேண்டிக் கொண்டான். வசிஷ்டர் ஞானதிருஷ்டி வாய்ந்தவராயினும், அந்த அமானுஷ்ய சக்தியின் மீதே அனவரதமும் வாழ விரும்பாதவர். மக்களை மதித்து, நம்பி வாழும் பாங்கினை அவர் பின்பற்றியதால் நிசிப் பிரியனைச் சந்தேகிக்கவோ, அவன் உள்ளத்தில் இருப்பதை







உங்கள் பணப் பட்டுவாடாக்களை பாங்க் ஆஃப் பரோடா கவனித்துக் கொள்ளும்

இன்றே பாங்க் ஆஃப் பரோடாவில் கரெண்ட் அக்கவுண்ட் ஒன்று ஆரம்பியுங்கள்!

உங்களுக்கு ஆபீஸ் வேலை, குடும்பப பிரச்னைகள், தொழில் சம்பந்தமான சுற்றுப பயணங்கள், நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்தல், இவற்றைப்போல பல வேலைகள் இருக்கும். எனவே, இன்ஷூரன்ஸ் ப்ரீமியங்களைக் கட்டுவது, வீட்டுவாடகை கொடுப்பது, க்ளப் பில்களைத் தீர்ப்பது, குழந்தைகளின் பள்ளிக்கூடச் சம்பளத்தைக் கட்டுவது அல்லது, டிவிடெண்டுகளையும், இதர பாக்கிகளையும் வசூலிப்பது போன்ற சிறுசிறு சொந்த விஷயங்களைக் கவனிக்க உங்களுக்கு நேரமிருக்காது. எனவே, இந்தச் சிறு விஷயங்களையெல்லாம் பாங்க் ஆஃப் பரோராவிடம் விட்டு விடுங்கள். இன்றே பாங்க் ஆஃப் பரோடாவில் கரெண்ட் அக்கவுண்ட் துவக்குங்கள்.

உங்களுக்கு செக் புத்தகம் கிடைக்கும். தொகைகளை செக்குகள் மூலம் பட்டுவாடா செய்வதே சிறந்த வழி. அவை நீங்கள் செலுத்தும் தொகைகளுக்குச் சான்றாகவும், உங்கள் அன்றாடச் செலவுகளின் குறிப்பாகவும் இருக்கும்.

என்றென்றும் வளமையுடன் வாழ உங்களுக்கு உதவுகிறது—

தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட்

(நிறுவனம்: 1908) ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாண்ட்வி, பரோடா.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 300 க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன.

உங்களுக்கு அருகிலுள்ள பாங்க் ஆஃப் பரோடா கிளையிலிருந்து, 'உங்கள் சேவை எங்கள் கடமை' எனும் சிறு பிரசுரத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அகழ்ந்து பார்க்கவோ இல்லை. அரசனே வந்து அழைப்பதாக எண்ணி அவனது அழைப்பை ஏற்றார்.

அன்று போஜன காலத்தில் வசிஷ்டர் அரண்மனைக்கு வருகை தந்தவுடன் மித்ர ஸகன் பேருவகை அடைந்தான். ''உண்ண லாமா?'' என அவர் கேட்ட போது உவகை இரட்டிப்பாயிற்று. தாமாகவே குலகுரு உணவருந்த வந்திருப்பதாக நினைத்து மித்ரஸகனும் மதயந்தியும் ஆனந்தத்தில் மூழ்கினர். அவருக்கு உபசரணைகள் புரிந்து போஜனத்துக்கு அமர்த்தினர்.

பரிசாரக வேடத்திலிருந்த நிசிப் பிரியன் அவ்விருவரையும்விட அதிக மகிழ்ச்சி கொண்டிருந்தான். தான் முன்பே திட்டமிட்டு, தாவர உணவைப் போல் தோன்றும் வகையில் பக்குவம் செய்திருந்த நரமாமிசத்தை மகாமுனிவருக்குப் பரிமாறினன் படுபாவி. இதனால் அஹிம்ஸாமூர்த்தியான அவரது மந்திர சக்தி பெரும்பாலும் மறைந்து அரசனது மிகப் பெரிய பலம் குன்றிவிடும் என்பது அவனது திட்டத்தின் முதல் காரணம்.* அவர் உண்டபின், அரசன் சூழ்ச்சி செய்து அவருக்குப் புலால் அருத்தியதாக அவரை எவ்வாறேனும் நம்பச் செய்து அரசனுக்குச் சாபம் வாங்கி வைக்க வேண்டும்; உண்மையறியாமல் நிரபராதிக்குச் சாபம் தருவதால் வசிஷ்டரிடம் எஞ்சியுள்ள தபோபலமும் அற்றுப் போய் விடும் என்பது இரண்டாவது காரணம்.

மனத்தால் சப்புக் கொட்டிக் கொண்டே வசிஷ்ட முனிவருக்கு நரமாமிசத்தைப் பரிமாறினன் கபட ராட்சதன். பரிசேஷனம் செய்வதற்காகக் கையில் நீரை வார்த்துக் கொண்டு, உணவைச் சுற்றிவிட்டுக் காயத்ரி மந்திரம் கூறி நீர்த் துளிகளை ஆகாரத்தின் மீது தெளித்தார் முனிவர்.

காயத்ரி கதிகலங்கி அவரிடம் பேசினள்: ''வேதமந்திரம் கண்ட வித்தகரே! என் திவ்விய மந்திரம் பொதிந்த நீரை நரமாமிசத்தின் மீது தெளித்து என்னை வதைக்கலாமா?''

அவ்வளவுதான்! சாந்த மலையாகிய வசிஷ்டருக்கும் சீற்றம் மூண்டது. வலிய வந்து குழையப் பேசி விருந்துக்கழைத்த மன்னன் தம்மை வஞ்சித்ததாக எண்ணினர்.

''மித்ரஸகன் என்று பெயர் பூண்ட குருத்ரோகி! என்னை நரமாமிசம் உண்ண அழைத்த நீயே நரமாமிசம் உண்ணும் அரக்கனாவாய்'' என்று சாபம் இட்டுவிட்டு எழுந்திருந்தார்.

தாமாகவே உண்ண வந்து விட்டுச் சாபம் தருகிற குருவின் மீது அரசனுக்குச் சினம் பொங்கியது. க்ஷத்திரிய வீரன் அல்லவா? க்ஷாத்திரம் பொங்கிற்று. நிரபராதியாகிய தன் மீது குற்றமும் சாபமும் சுமத்தப்பட்டதால் தன்னிலை மறந்து எரிமலையாக வெடித்தான். ''ரிஷே! தங்களுக்கு மட்டும்தான் மந்திர சக்தி இருக்கிறது என்று எண்ண வேண்டாம். உத்தமமான சத்திய வாழ்வு வாழ்ந்த எனக்கும் உம்மைப் பொசுக்கும் சக்தி உண்டு. இதோ, இந்த நீரை வாங்கிக் கொண்டு எரிந்து போம்'' என்று கூறியபடியே தன் கையில் நீரை வார்த்துக்கொண்டு அதனை அதர்வ வேதத்தில் உள்ள உக்கிரமான ஒரு வாசகத்தால் அபிமந்திரணம் செய்தான்.

மதயந்தி ஓடி வந்தாள். கணவனின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள். ''பிரபோ, என்ன காரியம் செய்கிறீர்கள்! குருபெருமானுக்கு உண்மையை உணர்த்தினால் அவர் சாப விமோசனம் தரமாட்டாரா? அப்படிச் செய்யாமல் அவரையே சபிக்கலாமா? சிவத்துரோகம் செய்தாலும் குரு காப்பாற்றிக் கொடுப்பார்; ஆனால் குருத் துரோகம் செய்தவனைச் சிவபிரானும் மன்னிக்கமாட்டாரே! விட்டு விடுங்கள், இந்த விபரீதப் போக்கை!'' என்று மன்றாடினாள்.

மன்னன் யோசனையில் ஆழ்ந்தான். மனத்தில் எல்லையில்லாத சோகம் சூழ்ந்தது. ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்ற அளவில் விஷயம் புரிந்தது. தான் சம நிலை குலைந்து செய்த செயலுக்கு வெட்கப்பட்டான். உடைந்த குரலில் பிரிய பத்தினியிடம் சொன்னான்: ''எங்கோ ஏதோ சதி நடந்து இப்படியாகியிருக்கிறது. ஆனால் இப்போது



''என்னடா சேது! போன மாமாங்கத்தின் போது உன் தலையிலே கட்டு குடுமி இருந்ததே இப்ப ஒண்ணுமே இல்லையே என்னடா அதிசயம்?''

''என்னத்துக்கு அதிசயப்படறேள்? மாமாங்கம் வாரத்துக்கு ஒரு முறை வரவில்லை... பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான்!''

---

* மித்ரஸகனின் மூதாதையான திலீபன் வசிஷ்ட மகரிஷியிடம், ''எதிரிகளால் முறியடிக்க முடியாத என் அம்பைத் தாங்களே பயனற்றுப் போகச் செய்கிறீர்கள். ஏனெனில், என் பாணங்கள் எதிரிலுள்ள பகைவனைத்தான் அடிக்கும்: ஆனால் தங்களது மந்திர சக்தியால் கண்ணுக்குப் புலப்படாத என் பகைவர்களும் தாக்கப்படுகிறார்கள். தங்களது மந்திரத்தால் அடிக்கப்படும் இலட்சியத்தில் என் அம்பும் பயனற்றுப் போகிறது'' என்று சமத்காரமாகக் கூறிய தாகக் காளிதாஸன் பாடுகிறான்.



''போன மகாமகத்தின்போது கும்பகோணத்துக்குப் போகணும்னு ரூபாய் நூறு கடன் வாங்கிப் போனேன். அதன் பிறகு இப்பதான் உங்களை இங்கு பார்க்கிறேன்.''

''இந்த மகாமகத்துக்கும் உம்மைத் தேடினேன். நீங்க அகப்படவில்லை சார்.''

மந்திரிக்கப்பட்ட இந்த நீரைக் கீழே விடுவதற்கில்லை. இது விழுந்த இடம் எரிந்து சாம்பலாகிவிடும்'' என்றான்.

வசிஷ்டரும் யோசனையில் ஆழ்ந்தார். ஞானதிருஷ்டியை இயக்கினார். சகல விஷயமும் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கியது. ''மகாராஜன், நான் தவறு செய்து விட்டேன். பரிசாரகன் வேஷத்திலுள்ள பாவி நிசிப்பிரியனின் சூழ்ச்சி இது. உன் கையில் உள்ள நீரை அவன் மீது தெறி'' என்றார்.

மித்ரஸகன் ஒரு விநாடிகூடத் தயங்காமல் பதில் இறுத்தான்: ''பிரபோ! நான் ஆயுதம் எடுக்கும் க்ஷத்திரியன். ஆயுதத்தால்தான் நான் என் பகைவரை ஒழிக்க வேண்டும். ஆயுதம் எடுக்காத அந்தணர்தாம் மந்திர சக்தியைப் பிரயோகிக்கலாம். நான் இதை நிசிப் பிரியன் மீது தெளிப்பதற்கில்லை'' என்றான்.

அவனது சத்திய தருமம் குலகுருவைக் கரைத்து விட்டது.

மதயந்தி சொன்னாள்: ''ஸ்வாமி, அந்த நீரை என் தலையில் தெளியுங்கள். நான் பஸ்மமாகிப் போகிறேன். தாங்கள் மனத்தால் நினைத்த குருஹத்திக்கு இப்படிப்பட்ட ஒரு தியாகம்தான் பரிகாரமாகும்.''

அரசன் கம்பீரமாகச் சிரித்துக் கொண்டான். கையிலிருந்த நீரைத் தன் கால் மீதே ஊற்றிக் கொண்டான். சந்தனக் குழம்பைக் காலில் வார்த்துக் கொண்டதுபோல் அவன் தெளிந்து இருந்தபோதிலும் உண்மையில் உக்கிரமானதோர் அமிலத்தை ஊற்றிக் கொண்டதுபோல் அப்போதே அவனது கால்களில் கொப்புளங்கள் கண்டு, கொதித்து, குழி விழுந்து, கருகித் தீய்ந்தன. தான் அநுதினமும் பணியும் பாத பதுமம் காக கட்டையாவதைக் கண்டு புழுவெனத் துடித்தாள் மதயந்தி.

வசிஷ்டரும் நெஞ்சம் பதைத்தார். இதற்கெல்லாம் காரணமான நிசிப்பிரியன் மீது தமது பிரம்ம தண்டத்தை ஏவினார். அசுரன் சாம்பலானான். ஆனால் அவனது அபிலாஷையும் அப்போதே நிறைவேறி விட்டது. காயத்ரியால் புனிதமான தீர்த்தத்தை நரமாமிசத்தின்மீது புரோட்சித்து வேதமாதாவின் அபசாரத்துக்கு ஆளாகித் தமது தவத்தில் ஒரு பகுதியை இழந்த வசிஷ்டர், மன்னனை அரக்கனாகும்படி சபித்துத் தமது தவசக்தியில் மற்றொரு பகுதியையும் இழந்தார். இப்போது நிசிப்பிரியனை அழித்தபோது அவரது தபோ மகிமை முற்றிலும் அழிந்துவிட்டது.

ஆனால் அவரது பழைய சாபத்தின் விளைவாக மித்ரஸகன் கோர ராட்சத உருவம் பெற்று விட்டான்.

வசிஷ்டரின் துயரம் எல்லை மீறிப் போயிற்று. ''மித்ரஸக! உனக்குச் சாபம் தரச் சக்தி எனக்கு இருந்தது. ஆயின் சாப விமோசனம் தரும் சக்தியை இழந்தேன். எனக்குப் பிராயச்சித்தம் ஒன்றுதான் உண்டு. உன்னை நரமாமிச பட்சிணியாக வேண்டும் என்றேன் அல்லவா? என்னையே உண்டுவிடு'' என்றார்.

அரக்க உருப்பெற்ற அரசன் வெறி கொண்டவன் போல் அங்கிருந்து ஓடலானான். தன் அரண்மனையை விட்டு, ராஜவீதியை விட்டு, தலைநகரத்தை விட்டு, கோட்டை கொத்தளங்கள் யாவற்றையும் விட்டு, முடிவாகத் தன் நாட்டையே விட்டுக் காட்டுக்கு ஓடி வந்து விட்டான். தன்னிடமிருந்தே தான் தப்பிக்கொள்ள வேண்டும் என்ற துடிப்போடு, தவிப்போடு ஓடிவந்தான். ஆம், அவனிடமிருந்தே அவன் தப்பித்துக் கொண்டாக வேண்டும்! முனிவர் சாபத்தினால் அவனுள் அசுர இயல்பு குடிபுகுந்துவிட்டது. மானுட ரத்தத்துக்காக அவன் நாவு ஊறுகிறது. அவன் நகரத்திலிருந்தால், நாட்டில் இருந்தால் யாரை பட்சித்துவிடுவானோ அவனுக்கே தெரியாது. வெறி கொண்டு ஓடி வருகையில் கூட எதிரே தென்பட்ட மானுடர்களின் குருதி மணம் அவனைக் கவர்ந்து இழுக்கத்தான் செய்தது. அந்தக் காட்சி அவனது நாவுக்கு நசை யூட்டத்தான் செய்தது. காந்த மலைக் கருகே செல்லும் தேரின் ஆணிகள் யாவும் தேரிலிருந்து பிடுங்கிக் கொண்டு காந்தத்தில் படிவது போல் அவனிடமிருந்து புலன்கள் பிடுங்கிக் கொண்டு வெளிப்பட்டு மானுட உயிர்களைக் குடிக்க யத்தனிக்கத்தான் செய்தன. ஆனால் பூர்வ சம்ஸ்கார வாசனை அவனைக் காப்பாற்றியது. கரை புரண்டுவரும் அசுர இயல்புக்கு எதிர் நீச்சுப் போட்டான். தன்னிடமிருந்து மக்களைக் காக்கக் கருதி, தன்னிடமிருந்து தன்னையே காக்கக் கருதி வனத்துக்கு ஓடி வந்து விட்டான்.

மானுட வாடையே காண முடியாத அடவியில் பல்லாண்டுகளைக் கழித்துவிட்டான் மித்ரஸகன். இன்று அவனுக்கு மித்ரனும் இல்லை, சகாவும் இல்லை. தனக்குத்

தானே புலம்பிக் கொண்டு காலத்தைத் தள்ளினான். கொலை செய்து கொண்டால் அசுர ஜன்மா போய், பேய்ப் பிறவியே உண்டாகுமாதலால் இதற்கு அது சிலாக்கியமில்லை என்று உயிரை விடாதிருந்தான். இப்போது அவனுக்குக் காயும் கனியும் கிழங்கும் ருசிப்பதில்லை. மானுட உதிரத்துக்கே அவனது உதரம் தவியாகத் தவித்தது. ஆனால் அதுவோ நிர்மாநுஷ்யமான அரண்யம். எனவே பெரும்பாலும் பட்டினியிலேயே காலம் கழித்தான். இப்படியே பன்னிரண்டாண்டுகள் கழிந்தன.

இன்று என்ன சோதனையோ, அந்த இளம் அந்தணத் தம்பதி வழி தவறி அங்கே வந்துவிட்டனர். பூமணம் வண்டை இழுப்பது போல் ரத்த மணம் மித்ரஸகனை இழுத்துவிட்டது. தனக்குத் தானே அவன் போராடிக்கொண்டான். இருப்பினும் ஒளிச் சக்தியால் வெற்றி பெற முடியவில்லை. பசித்து ஒட்டிப்போய் எரிந்து கொண்டிருந்த அசுரக் குடலே இறுதியில் வெற்றி பெற்றது. அவனது ஜாடராக்னிக்கு ஆஹுதியானான் அந்தணன் சுசர்மன்; தியாக அக்னிக்கு ஆஹுதியானாள் பதிவிரதை சுசீலை.

சிதையின் பக்கத்திலேயே பாறையாக அமர்ந்திருந்தான் மித்ரஸகன். அக்கினி தணிந்தது. மேற்கே மலைவாயிலில் அக்கினி கோளம் தணிந்தது. தன் குல முன்னோனை சூரியன் மறைவது கண்டு சிரித்தான் மித்ரஸகன். "என் செய்கைக்கு வெட்கி ஓடிப் போகிறாயா? போ, போ! உன்னை எனக்கும் பிடிக்கவில்லை. ஆதியில் ஒளியை விரும்பியதால்தான் திவோதாஸன் என்று பெயர் பெற்றேன். இப்போது எனக்கு இருள்தான் பிடிக்கிறது. நான் நிசிசரன் அல்லவா? என் கண்ணில் படாமல் நீ போ" என்றான்.

இருட்டிய பின்பும் சிதை அருகை விட்டு எழுந்திருக்கவில்லை அவன். சுழல் காற்று ஒன்று வீசியது. சிதையிலிருந்த சாம்பலெல்லாம் சுழன்று சுழன்று வந்து அவன் மீது படிந்தது.

"விபூதி அபிஷேகம்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். உடனே அவனையுமறியாமல் உள்ளத்தில் ஒரு குளிர்ச்சி பரவியது — உடல்மீது கொதிக்கும் சாம்பல் பரவியபோதிலும்.

"விபூதி அபிஷேகம் என்னிடம் என்ன அற்புதமான மாறுதலை ஏற்படுத்துகிறது?" என்று தனக்குத் தானே அவன் வியந்து கொண்டான்.

'அரண்மனைத் தோப்பில் செடிகளில் பூச்சி அரித்து விட்டால் சாம்பலைத் தெளிப்பார்கள். கிருமிகள் நசித்துச் செடிகள் செழிக்கும். உள்ளத்தை அரித்தெடுக்கும் கிருமிகளை அழிக்கத்தான் அதே சாம்பலை விபூதியாகப் பூச வைத்தார்களோ?' என்று சிந்தித்தான்.

பூர்வத்தில் அவன் செய்திருந்த சிவபூஜையின் பலன் அவ்வளவும் இந்த நிமிஷத்தில் பழுக்கத் தொடங்கி விட்டது. திடீரெனத் தன் இதயவெளியில் குளிரக் குளிர முளைத்தெழுந்த பனிமலையின் உயரத்தைக் கண்டு அவனே அதிசயித்தான். சிப்பாயு முன் அந்த அந்தண மங்கை நல்லாள் சாட்சாத் பரமேசுவரியாகித் தந்த வரம் தன் காரியத்தைத் தொடங்கிவிட்டது என்று புரிந்து கொண்டான். **அந்தப்** பரமேசுவரி பனிமலைக்குப் பெண்ணாகப் பிறந்தாள். **இந்தப்** பரமேசுவரியோ இவன் உள்ளத்தில் ஒரு பனிமலையையே பிறப்பித்து விட்டாள். கற்பு தீதான்! ஆனால் அது பிறப்பித்ததோ பனிப் பருவதம்! அப்பனிமலையில் வாழும் பரமனை நினைந்தான் மித்ரஸகன். பனி உருகினாற் போல் உணர்வில் நனைந்தான். பனியில் வாழ் பவனையே தீக்கனமாகிய சுடலையில் வைத்துப் பார்த்தது அவனது மனம். 'நான் சிதைக்குப் பக்கலில் இருப்பது போல்தானே பரமனும் இருக்கிறான்? அப்படியாயின் எனக்கு அவன் தோழன்; எனக்கு அவன் கூட்டாளி. இத்தனைக் காலம் நான் மக்களுக்கு மித்ரஸகனாக இருந்தேன். இன்றோ மகாதேவனுக்கே மித்ரஸகனாகிவிட்டேன்' — என்று எண்ணிக் கண்ணீர் மல்கினான்.

மகாதேவன் வாழும் மகா ச்மசானத்தை நினைந்து வணங்கினான். 'உலக வாழ்க்கை, அதன் அவலங்கள், அவங்கள் யாவற்றையும் எரிப்பதல்லவா சிவத்தின் சுடலை? அந்தச் சிதையில் என் கருமமும், குருவின் சாபமும் மட்டும் எரிந்து பஸ்மமாகாமற்போய்விடுமா?' என்று ஏக்கத்துடன் எண்ணினான். சிவத் தியானத்தில் ஆழ்ந்தான்.

தியானம் கலைந்தபோது இரவு நன்கு பரவிவிட்டது. திவோதாஸனுக்கு இருள் மிகவும் பிடித்தது. ஆனால் நிசிசரனுக்கு உரிய முறையில் அல்ல; பரம ஞானிக்கு உரிய முறையில். பகல் வெளிச்சத்தில் பொருள்கள் நானா உருவில் தெரிகின்றன. இரவிலோ எல்லாம் ஒன்றாகி விடுகின்றன. இரவு என்பது அத்வைத ரூபிணியான தேவியின் திருவுருவமா? இரவைத் தேவியாகத் துதிக்கும் வேத சூக்தம் அவன் மனத்தில் கம்பீரமாக ஒலித்தது. ஒரு பெரிய விருட்சம் போல் உலகைச் சூழ்ந்து நிற்கிறாள் ராத்திரி தேவி. விருட்சத்தில் பட்சிகள் அடைக்கலம் புகுந்து, அதிலிருந்து வேறாகக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுவது போல், பகலெல்லாம் உழைத்த மக்கள் ராத்திரி தேவிக்குள் அடைக்கலம் புகுந்து, உறங்கி, தாமே அறியாமல் அவளிடம் ஐக்கியமாகிவிடுகின்றனர். அந்தத் தேவியை, அவளது நாயகனை தேவதேவனை நினைந்தபடி ஆறாகக்



"மகாமகக் குளத்திலே ரொம்பச் சேறாக இருக்குமோ..."

"சேற்றை உத்தேசித்து உனக்கும் அங்கு போக எண்ணம் தோணுகிறதோ!"

கண்ணீர் வடித்தான் அரசன். பாபமும் சாபமும் கண்ணீரில் கரைந்தன.

அசுர சரீரம் மறைந்து, அரச சரீரம் மீண்டும் உண்டாகிப் பொலிந்தது. ஆனால் தீய்ந்த கால்கள் மட்டும் மாறவில்லை. குருவின் சாபத்தை விட, ஆன்ம சாபத்துக்கு அவ்வளவு சக்தி!

அயோத்திக்குப் புறப்பட்டான் மித்ரஸகன். இரவெல்லாம் நடந்தான், பகலெல்லாம் நடந்தான் — அன்ன ஆகாரம் இன்றி. ஆனால் அன்ன ஆகாரமில்லாதது அவனுக்குத் தெரியாது. ஏனெனில் மனத்திலும் நாவிலும்தான் சிவநாமோச்சாரணம் அமுதைச் சுரந்து கொண்டிருந்ததே!

மறுநாள் இரவு முதல் யாமத்தில் அயோத்தி வந்தடைந்தான் மன்னன். சற்றும் எதிர்பாராத சமயத்தில் அமாவாசையில் உதித்த பூரண சந்திரன்போல் மன்னன் வந்ததைக் கண்டு மக்கள் ஆனந்த பரவசமாயினர். ஆயினும் அவன் மனத்தில் இதெல்லாம் ஒரு பெரிய வேடிக்கை நாடகத்தின் அங்கமாகவே தெரிந்தது. சிவநாமத்தை மனனம் செய்தபடியே அரண்மனை அடைந்தான். அங்கே வசிஷ்டரும், மந்திரி பிரமுகர்களும் அவனை வரவேற்றனர். ஒரு விந்தை!' வசிஷ்டர் குல குருவாக அவனை வரவேற்கவில்லை. ஜடா மகுடம் புனைந்த தம் முடியில் ராஜ மகுடமும் தாங்கி வந்த வசிஷ்டர் அதனைத் தம் தலையிலிருந்து எடுத்து மன்னன் சிரத்தில் சூட்டினார்.

''வத்ஸ! இந்தப் பன்னிரண்டாண்டுகள் நானேதான் அரசனாக ராஜ்ய பரிபாலனம் செய்தேன்? அது எனக்கு நானே விதித்துக் கொண்ட தண்டனை. உண்மையை அறியாமல் நிரபராதியைச் சபித்துத் தவசக்தியை இழந்த நான் மீண்டும் மூச்சை அடக்குவதாலோ, ஜபமாலையை உருட்டுவதாலோ அச்சக்தியைப் பெற முடியாது என்று உணர்ந்தேன். தவமும் தாபமும் ஒன்றுதான். பச்சாதாபமே எனக்கு தவமாகும் என்று தெளிந்தேன். ராஜஸம் பொருந்திய உன்னைத் தாமஸம் பொருந்திய அரக்கனுக்கு இதயற்குக் கழுவாயாக, சத்துவம் பொருந்திய முனிவனாக இருந்த என்னை நானே ராஜஸம் பொருந்திய மன்னனாக்கிக் கொண்டேன். அகவாழ்வை விட்டுப் புறப் பொறுப்புக்களை, ராஜ்ய பாரத்தை ஏற்றேன். என் காரணமாகவே மக்கள் தமது நாயகனை இழந்தனர் என்பதால் அதற்கு ஈடு செய்ய நானே ஆட்சிப் பொறுப்பு ஏற்றேன். அதோடு உன்னைச் சபித்த கையோடு நானே சிம்மாதனம் ஏறியதால், நான் இட்டமிட்டுச் செய்த சூழ்ச்சி இது என்று மக்கள் என்னை அவதூறு செய்வார்கள் என்றும் உணர்ந்தேன். உன்னை வீண் பழிக்கு ஆளாக்கியதற்குப் பிராயச்சித்தமாக இப்படிப்பட்ட உலக அபவாதத்தை நான் ஏற்பதே முறை என்று முடிவு கட்டினேன்'' என்று குரல் கம்ம மித்ரஸகனிடம் கூறிய வசிஷ்டர், பூர்வத்தில் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்த மகிழ்ச்சியை இன்று இரண்டாம் முறையாகப் பெற்று மகிழ்ந்தார்.

'எல்லாம் சரி, மதயந்தி எங்கே? ஊரெல்லாம் திரண்டு வந்திருந்தும் மதயந்தி மட்டும் ஏன் என்னை வரவேற்கவில்லை?' என்று உள்ளம் பதைக்கப் பலப்பல எண்ணினான் மித்ரஸகன். ஆனால் தான் எண்ணுவதை யாரிடமும் கேட்டுச் சந்தேகம் தீர்த்துக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் அவன் பயந்த அமங்கலச் செய்தியையே உறுதிப்படுத்திவிடக் கூடும் அல்லவா?

பட்டமஹிஷியின் பவனத்தை அடைந்தான் மன்னன். துடிக்கும் இதயத்தோடு உள்ளே, உள்ளே சென்றான். கடைசியில், ஆகா! சிவபெருமான் அவனைக் கைவிட்டுவிடவில்லை. அதோ மதயந்தி! விருஷபாரூடனான விச்வநாதனை மனம் லயித்து வழிபட்டுக்கொண்டிருக்கிறாள்!

அது பூஜை என்பதையும், அவளது பக்தி பரவச நிலையையும் மறந்தான் மன்னன். இயற்கையின் வேகம் இதுவே! உலகம் பிறந்த நாளாக எந்த ஓர் உணர்ச்சி தலைமுறை தலைமுறையாக எல்லா மனிதர்களையும் ஆட்டி வைக்கிறதோ, அந்த உணர்ச்சி மித்ரஸகனையும் ஆட்டி வைத்து விட்டது.

''மதயந்தி'' என்று கூறியபடியே அவளை நெருங்கினான்.

அவள் கண்களைத் திறந்தாள். பரமேசுவரன் தன்மீது கண்திறந்து விட்டான் என்று புரிந்து கொண்டாள். நிலவின் நிழல் போல் கணவனின் பாதத்தில் சீதளமாக விழுந்தாள். கருகிய அந்தப்பாதங்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பரமனை நன்றியுடன் நமஸ்கரித்தாள்.

''பூஜை முடிந்து விட்டதல்லவா? போகலாம், வா தேவி'' என்று அன்பு நிறைய அழைத்தான் மன்னன். பவத்தின் வேகம் சிவத்தை அடித்துச் சென்று விட்டது.

மதயந்தி தன் பெயருக்கேற்ப மல்லிகை போலப் பேசினாள். அந்தப் பேச்சில் ஒரே வெண்மை!

''சுவாமி, இனி தாங்கள் என்னைத் தீண்டக் கூடாது. இன்றிலிருந்து நாம் இருவரும் சிவபூஜையில் மித்திரர்கள், சகாக்கள்—அவ்வளவே'' என்றாள் மதயந்தி.

''தேவி, இதென்ன பேச்சுப் பேசுகிறாய், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்? எதனால் என்னை இப்படிச் சோதித்துப் பார்க்கிறாய்? சிவ பூஜைக்கும் இதற்கும் என்ன தொடர்பு பிரியே! பெருமானே தேவியைப் பாதி உடலாகத் தாங்குபவன்தானே?'' என்று பதறினான் மித்ரஸகன்.

''ஆரிய புத்ர, தாங்கள் தத்துவம் அறியாதவரா? வேறு வேறாக இருக்கும் வரையில் தானே ஒன்றிடம் காமமும் துவேஷமும்? சிவகாமியைத் தன் உடலிலேயே வைத்துக் கொண்டு தானாக்கிக் கொண்ட பிரான் அவளிடம் எப்படிக் காமுற முடியும்? ஆனால் நான் சொன்னது அதற்காக இல்லை.....ஒரே ஒரு நாளைக்கு இல்லற இன்பம் யாசித்த பிராமணப் பெண்ணுக்கு அந்தப் பிச்சையைப் போடாத தாங்கள்...''

அதற்கு மேல் அவள் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவன் அதிர்ந்து

போனான். நேற்று கற்பின் ஓர் உருவை அவன் கண்டான். இன்று அந்தக் கற்பின் கதையைத் தொலை தூரத்திலிருந்தே கண்டுவிட்ட இன்னொரு பத்தினித் தெய்வத்தைக் கண்டு விட்டான். தெய்வத்துடன் இல்லறமா?

''சிவ சிவ சிவ'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு சிவமூர்த்தத்தின் புறம் திரும்பினான் மன்னன்.

பச்சாத்தாபம் என்கிற தவத்தால் மீளவும் ஞான திருஷ்டியும், அமானுஷ்ய சக்தியும் வாய்க்கப் பெற்றிருந்த வசிஷ்டரும் அப்போது அங்கு வந்து சேர்ந்தார்.

''மன்னா! உனக்கும் எனக்கும் இன்று போல் சுதினம் கிடையாது. எனவே இன்று இரவு வீண் போகக் கூடாது. நான்கு யாமமும் நன்றியுடன் சிவபூஜையிலேயே காலம் கழித்து எஞ்சியுள்ள சகல பாபங்களையும் கழுவிக் கொள்வோம்'' என்றார்.

அப்படியே பூஜை நடந்தது. மன்னனும், அரசியும், முனிவரும் இதயத்தையே பூவாக்கிச் செய்த பூஜையாக நடந்தது. இறைவன் நள்ளிரவில் சூரிய ஜோதி போல் தோன்றி அம்மூவரின் இதய கமலத்தையும் அலர்த்தினான். அக இருள் அனைத்தும் ஒழிந்த அமிருத இரவாகியது அது.

விடிய விடிய நான்காம் யாம பூஜை முடித்த வசிஷ்டர், ஆராதனையில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த சங்கத்தைக் கையில் எடுத்து மும்முறை பார்வதி நாயகனைச் சுற்றினார். மன்னனைத் தம் அருகே வருமாறு சைகை காட்டினார். அவனுக்கு விஷயம் புரிந்தது. அவர் சங்க தீர்த்தத்தைத் தனது கருகிய காலில் புரோட்சித்து அதை முன் போல் செழுமையாக்க விரும்புகிறார் என்று ஊகித்தான்.

''வேண்டாம் குருநாதா! சிவ பூஜாத் திரவியம் என் காலில் படுவது அபசாரம். மேலும் இந்த உடம்பு இருக்குமளவும் இக் கருகிய கால்கள் எனக்கு நினைவூட்டியாக இருந்து நன்மையில் நடத்திச் செல்லும்'' என்றான்.

காலில் இருந்த குறையை விட வேறொரு குறையை அவன் மனம் பெரிதாகக் கருதுவதை உணர்ந்தார் முனிவர். அது அவனது சுயநலமான குறையல்ல. ராஜ தருமத்தைப் பாற்பட்ட குறை அது.

சங்கத்தை அப்படியே கையில் பிடித்துக் கொண்டு சங்கரனை ஸ்மரித்து பஞ்சாட்சரம் ஜபித்தார். என்ன அற்புதம்! சங்கமே ஓர் ஆண் குழந்தையாகப் பரிணமித்தது. ''இந்தா உன் குலம் விளங்க இந்தச் சங்கணனை வாங்கிக்கொள்'' என்றார் மதயந்தியிடம்.

கங்கையை ஸாகரம் வாங்கிக் கொள்வது போல் சங்கணனை வாங்கிக் கொண்டாள் மதயந்தி.

தோஷம் என்றால் இரவு என்று ஒரு பொருள்* மித்ரஸகனின் தோஷம் தீர்ந்ததும் ஒரு தோஷத்தில் அவன் புரிந்த நான்கு யாம சிவபூஜையால்தான். பகலெல்லாம் அவன் உண்ணாமல் சிவஸ்மரணம் செய்து இரவும் வழிபாடு செய்த அந்தத் தினம்தான்—மாசு நீக்கிய அம் மாசி நன்னாள்தான் சிவராத்திரி.

பின்னுரை

வால்மீகியின் ஆதிகாவியத்தில் ராம பிரானுடைய விவாகத்தின்போது சூரிய குல வமிசாவளியைக் கூறும் வசிஷ்டர் மித்ரஸகனைப் பற்றிச் சொல்வார்:

**ரகோஸ்து புத்ரஸ்தேஜஸ்வீ ப்ரவ்ருத்த: புருஷாதக
கல்மாஷபாதோப்யபவத் தஸ்மாத் ஜாதஸ்து சங்கண:**

(ரகுவின் புத்திரன் பிரவிருத்தன் என்பவன். தேக நிரம்பியவன். நரமாமிசம் புசித்தவன். கால் கருகியதால் கல்மாஷபாதன் எனப் பட்டவன். அவனது மைந்தன் சங்கணன்.)

பிரவிருத்தன், திவோதாஸன், மித்ரஸகன், கல்மாஷபாதன் என்றெல்லாம் பெயர் பெற்ற இந்த மன்னன் சிவராத்திரி அநுஷ்டானம் செய்த வரலாற்றைப் புராணாந்தரங்களில் காண்கிறோம்.

சோழர்கள் தம்மைச் சூரிய குலத்தவராகக் கருதினர். 'கரிகாலன்' என்று ஒரு சோழனுக்குப் பெயர் சூட்டப்பட்டது சூரிய வம்ச மூதாதையான கல்மாஷபாதனை நினைத்து தானோ?

---

* இதனால்தான் இரவுக்கு முந்தையப் பொழுதைப் 'பிரதோஷம்' என்கிறோம்.



வெள்ளித்திரை வைபவம்

துயரத்துக்கு வேண்டும் தூண்!

காந்தன்



குமாரி நிருபமாதேவி 'மேக்கப்'பில் முழுகி எழுந்த புத்தம் புது மலராய், செதுக்கி யெடுத்த செப்புச் சிலையாய்க் காட்சியளித்தாள் : நவநாகரிக மான நைலான் ஸாரி அவள் தோளிலிருந்து அடிக்கடி நழுவி விழுந்து அவளது கரங்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருந்தது. மொழு மொழுவென்றிருந்த அவள் கைகளின் அழ குக்கு — கையில்லாத 'ரவிக்' அழகூட்டியது. தலைக்கொண்டையின் அழகு தனியாய் மினிர்ந் தது. ஒரு கையில் ரிஸ்ட் வாச்சும் இன்னொரு கையில் தங்க வளையல்களுமாக நிருபமா தேவி அழகுப் பதுமையாக விளங்கினாள். அவள் பக்கத்தில் ஹீரோ பிரபாகர் எடுப் பான உடையுடன் 'ஸ்டை'லாகச் சிகரெட் பிடித்துக் கொண்டு நின்றான்.

(சே ! இந்தப் பேனா கத்த மோசம்! கதா நாயகியை வர்ணிக்க அறுபது வார்த்தை களைக் கொட்டித் தீர்க்கிறது. கதாநாயகனை வர்ணிக்கும்போது பன்னிரண்டு சொற் களுக்கு மேல் எழுத மறுக்கிறது!)

டைரக்டர் பேசினார்: ''நிருபமாதேவி, இன்றைய ஷூட்டிங்குக்கான காட்சியை விளக்கிச் சொல்லுகிறேன். கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் கதா நாயகனை இரண்டிலொன்று கேட்டு விடுவது என்ற முடிவில் பரபரப்புடன் மாடிக்குப் போகிறீர்கள். 'இந்த வீட்டில் அவளும் நானும் சேர்ந்திருப்பதென்பது ஒரு நாளும் நடக்காது. நடக்கவே நடக்காது. ஒன்று, அவள் இங்கே இருக்கட்டும். அவளோடு நீங்கள் ஆனந்தமாக வாழுங்கள். இல்லை, அவளை உடனே வெளியேற்றிவிட்டு எனக்கு வாழ்வளியுங்கள்' என்று கண்ணீருக்கிடை யில் மன்றாடிக் கேட்க வேண்டும். முகத்திலே சோகமும், குரலிலே துயரம் கலந்த கண்டிப் பும் வெளிப்பட வேண்டும்!''

''எஸ் ஸார் !'' என்றாள் நிருபமாதேவி, மிகவும் ஒயிலாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு.

''மிஸ்டர் பிரபாகர் ! உங்கள் 'டயலாக்' கையும் சொல்லுகிறேன், கேளுங்கள். கதா நாயகியைக் கண்டதும் உங்கள் முகம் கொடூரமாக மாற வேண்டும். உரத்த குரலில், 'லதா, நீ இங்கே ஏன் வந்தாய் ! உன்னை மாடிக்கு வரக் கூடாதென்று சொல்லி யிருக்கிறேனல்லவா ? லதா, கவனமாய்க் கேள். நீ என்னை என்ன வேண்டுமானாலும் இழித்துப் பேசு. ஆனால் என் இதயம் கவர்ந்த இன்பவல்லியை, என்னையாளவந்த எழிலரசியை, வனப்பின் வாரிசைப் பற்றி ஒரு சொல் சொன்னாலும் நான் மிருகமாக மாறி விடுவேன். விபரீதம் நேருவதற்குமுன் போய் விடு. உம்!'' என்று கர்ஜித்து லதாவை நோக்கி அவள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள முற்படுவது போல் கரத்தை நீட்டிக் கொண்டு நெருங்க வேண்டும். அப் பொழுது உங்கள் முகத்தில் கொலை வெறி தாண்டவமாட வேண்டும்'' என்றார் டைரக்டர்.

''ஓகே ஸார் !'' என்று கூறிய ஹீரோ பிரபாகர் மேக்கப் அறையை நோக்கி வேகமாக நடந்தான்.

டைரக்டர் வெள்ளித் திரை வெங்குவைப் பார்த்து, ''என்ன வெங்கு, இந்த ஸீன் எப்படி? விறுவிறுப்பாயில்லே? சமூக சேவகி யான மனைவி கணவனை மதித்து நடக்க வில்லை. அவனைக் கவனிக்கவுமில்லை. இதனால் கணவன் ஒரு பகட்டான நடிகையை வீட் டுக்கு அழைத்துக் கொண்டு வந்து கொட்டம் அடிக்கிறான். இது ரொம்பவும் 'பவர்ஃபுல்' லாக இருக்கும். ஹீரோ, ஹீரோயின் இரு வருக்குமே நல்ல 'ஸ்கோப்' கொடுத்திருக் கிறேன்!'' என்றார்.

''பிரமாதம் டைரக்டர் ஸார் ! இந்தக் காட்சியைக் கதையிலே ரொம்ப நல்லாப் புகுத்தியிருக்கிங்க!'' என்றான் வெங்கு.

டைரக்டரின் முகத்தில் மகிழ்ச்சி பொங் கியது. ''ரொம்ப தாங்க்ஸ், வெங்கு. ஒரு முக்கியமான விஷயம். நடத்தை கெட்ட அந்த நடிகையாக வருவதற்கு ஒரு 'வில்லி' தேவை. குமாரி மோகனாவைப் போட லாமா ?''

''ஸார், ஸார் ! அது சரிப்பட்டு வராது.''

''ஏன், அவளுக்கென்ன ?''

''பேச்சில் துடுக்கும், நடையில் மிடுக்கும் கொண்ட வில்லிக்கு நீங்க ஆள் தேடறீங்க. மோகனாவைப் போடறதானால், தாய்மைப் பேற்றை விரைவில் அடையப் போகும் தருணத்தில் இருக்கும் பாத்திரமாயிருக்க ணும். அதோடு அவளுடைய 'போர்ஷனை'ச் சீக்கிரமாக முடித்து அவளை அனுப்பிடப் பார்க்கணும்.''

''ஆமாம், ஆமாம்! எனக்கு அவளுடைய நிலைமை மறந்து போய்விட்டது. சரி. 'விலைக்கு



பாட்டி: ஏண்டாப்பா சிவராமா! நீ கெட்டது போதாதா? ஏன் ஊரில் இருக்கிற வாளையெல்லாம் கெடுக்கிறே?

வாங்கிய வேதனை' என்னும் படத்தில் நடித்த குமாரி லீலாவை 'புக்' பண்ணிவிடுவோமா?''

''அவள் அந்தப் படத்துக்கு அப்புறம், வேறு எந்தப் படத்திலேயும் நடிக்கவில்லையே ! அவள் 'மார்க்கெட்' அப்பவே சரிந்து போய் விட்டதே !''

''அது எனக்குத் தெரியும், வெங்கு. அதனுலேயே பெரிய அநுகூலமும் இருக்கிறது. அவள் அதிகத் தொகை கேட்கமாட்டாளே. கொடுப்பதை வாங்கிக் கொள்வாள் அல்லவா ?''

''உண்மைதான். மறுபடியும் அவளுக்கு 'சான்ஸ்' கிடைக்கிறது என்றல் போதும். 'அட்வான்ஸ்'கூட வாங்கிக்காம நடிக்கத் தயாராயிருக்காங்க'' என்ருன் வெங்கு.

''ஓகே! நீ லீலாவை 'புக்' பண்ணிவிடு!'' என்ருர் டைரக்டர்.

அப்பொழுது 'மேக்கப்' அறையிலிருந்து ஹீரோ பிரபாகர் கலைந்த கிராப்பும், வியர்வை துளிக்கும் முகமுமாக 'ஸெட்'டுக்கு விரைந்தான்.

நிருபமாதேவி மட்டும் புத்தம் புது மலராகவே 'ஸெட்'டுக்குள் நுழைந்தாள். வழியிலே அவளைச் சந்தித்த வெள்ளித்திரை வெங்கு, ''குமாரி நிருபமாதேவி, இது சோகக் காட்சியாயிற்றே! 'மேக்கப்' கலைச்சுக்கணுமே! அப்படியே வர்றீங்களே!'' என்று வியப்புடன் கேட்டான்.

அதைக் கேட்டதும் 'ஹ ஹ ஹா !' என்று ஒரு நாகரிகச் சிரிப்புச் சிரித்துவிட்டு நிருபமாதேவி, ''நான் டைரக்டரிடம், 'பர்மிஷன்' கேட்டுக் கொண்டு விட்டேன். எங்க அம்மா இந்த டிரஸ்ஸிலே நான் நடித்துப்பார்க்க வேண்டும் என்று ரொம்ப ஆசைப்படுகிருள். அதனுலே......'' என்று அவள் மேலே கூறுவதற்குள் வெங்கு இடை மறித்து, ''ஆமாம், ஆமாம்! படத்தின் பெயரைக்கூட 'அம்மாவின் ஆசை' என்று மாற்றி வைத்து விட்டால் நல்லா இருக்கும்'' என்ருன்.

அவள் ஏதோ குத்தலாகப் பேசப்போக நிருபமாதேவியோ ஒரே சந்தோஷத்துடன் டைரக்டரை நோக்கி, ''வெங்கு ஓர் அற்புதமான 'ஐடியா' கொடுத்திருக்கிருர் சார்'' என்று கூற டைரக்டர் யோசனையுடன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். அவரை மீண்டும் சுய நினைவுக்குக் கொண்டு வந்த வெங்கு, ''டைரக்டர் சார், சோகக் காட்சின்னு சொன்னீங்களே! அதுக்கு இந்த 'டிரஸ்' ஒத்து வருமா?'' என்று கேட்டான்.

''யூ ஆர் ரைட், மிஸ்டர் வெங்கு! மாடிப் படியேறிக் கதாநாயகனேடு கடுமொழி பேசுகிற வரையில்தான் இந்த டிரஸ். அத்துடன் அந்தக் காட்சி 'கட்' ஆகிறது. மாடிப்படியிலே கதாநாயகியைக் கதாநாயகன் உருட்டித் தள்ளுகிறதை இன்னெரு 'டேக்'கிலே வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். அப்போது விரித்த கூந்தலும், வெறித்த பார்வையுமாகக் கதாநாயகியின் மேக்கப்பையே மாற்றியாக வேண்டும். ஞாபகம் வைத்துக்கொள்'' என்ருர் டைரக்டர்.

''அம்மாவின் ஆசைக்காக ஒரே காட்சியில் இரண்டு தோற்றமா? பேஷ் !'' என்ருன் வெங்கு. பிறகு, ''இந்த இடத்தில் டூயெட் உண்டல்லவா ?'' என்று கேட்டான்.

''டூயெட் பாட்டு எதற்கு? இவர்கள்தான் பிரிந்து விடுகிருர்களே? கதாநாயகி வீட்டை விட்டு வெளியேறி விடுகிருளே?''

''இருவரும் ஒரே இடத்திலிருந்து பாடணும்னு யார் சொன்னது? கதாநாயகன் தன் தவற்றுக்கு வருந்தி வீட்டிலிருந்தபடி சோக கீதம் பாடட்டும். கதாநாயகி பாட்டின் அடுத்த அடியைச் சத்திரத்தில் இருந்து கொண்டு பாடட்டும்.''

''வெங்கு! நானே அது பற்றி உன்னைக் கேட்கணும்னு இருந்தேன். கதாநாயகி வீட்டை விட்டு வெளியேறிய பிறகு, அவளை எங்கே அனுப்பலாம்? பிறந்த வீட்டுக்கா ? அல்லது ஏதாவது சத்திரம், சாவடிக்கா?''

''அவள் எங்கே வேணும்னுலும் போகட்டும் ஸார். அதைப் பற்றிக் கவலை இல்லை. போகிற இடத்தில் ஒரு தூண் இருக்கணும். அதுதான் முக்கியம்!''

''தூணு ? எதற்கு?''

''என்ன ஸார், அப்படிக் கேட்டுவிட்டீங்க? வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட லதா, ஒரு ஆளைக் கட்டிண்டுதானே அழுதாகணும்? இதோ பாருங்க, தமிழகத்தின் திரைப் படத் தொழிலுக்குத் தூணுக நிற்கிறவங்க யார் யாருன்னு கேட்டா குறிப்பிட்ட நாலைந்து பேரோட பெயர்களை வரிசைக் கிரமமா சொல்ல மாட்டீங்களா ?''

''சொல்லுவேன்.''

''அது போல் சோகப் பாடலுடன் கூடிய சினிமாக் காட்சிகளுக்கு அந்த நாள் முதல் இந்த நாள் வரை தூணுக நிற்பது தூணே தான் ! அதை மறந்துடாதீங்க!'' என்ருன் வெங்கு.

ஸிலோன் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன்

(வர்த்தகப் பிரிவு)

விற்பனையில் வெற்றியை நிச்சயமாக அளிக்கக் கூடியதும் ஆசியாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்த நம்பகமான வர்த்தக ஒலிபரப்பு நிலையம்

இந்தியாவில் ஏகபோக பிரதிநிதிகள் :

ரேடியோ அட்வர்டைஸிங் ஸர்வீஸஸ்

ஸிஸில் கோர்ட், லான்ஸ்டௌன் ரோடு, பம்பாய்-1

தங்கள் சென்னை அலுவலகத்தை மறுபடியும் திறந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள். ஸிலோன் ரேடியோ வர்த்தகப் பிரிவில் ஒலிபரப்ப இஷ்டமுள்ள விளம்பர தாரர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி — கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் —

ஸிலோன் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன் வர்த்தகப் பிரிவில் ஒலிபரப்ப தென் இந்தியா சினிமா தயாரிப்பாளர்கள் தங்களுடைய பிலிம்களின் சங்கீதம் / ஒலி டேப் டிராக்குகளை எங்கள் சென்னை அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். ஒலிபரப்பும் கட்டணம் — கிடையாது —

விவரங்களுக்கு எழுதவும் :

Mr. S. V. வெங்கடராமன்

ரேடியோ அட்வர்டைஸிங் ஸர்வீஸஸ்

30, ஐந்தாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு

மந்தவெளிப்பாக்கம் - சென்னை - 28

போன் : 73736



இப்பொழுது நடைபெறுகிறது
சாந்தி
கிரௌன் • சயானி
மற்றும் தென்னகமெங்கும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
திருவெங்கடேஸ்வரா மூவிஸ்
திருமால் பெருமை
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள் - கவிஞர் கண்ணதாசன் • இசை - K.V. மகாதேவன்
திரைக்கதை, வசனம், டைரக்க்ஷன்
A.P. நாகராஜன்
ELEGANT



அஸ்டாப் அப்பாசாமி

அந்த அறையைத் தம்பூராவின் ஒலி நிறைத்துக் கொண்டிருந்தது. அதனூடே இருவரது பேச்சுக் குரல் இழைந்து கொண்டிருந்தது.

''சார், சார் !''

சுருதியைப் பேதித்துக் கொண்டு வாசலிலிருந்து ஒரு குரல் உள்ளே பாய்ந்து வந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம், ''யார் வேண்டும் உங்களுக்கு ?'' என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்தான் சங்கரன்.

''அப்பாசாமி இருக்காரோ ?''

'' இருக்கார். ஆனால் அவரை இப்போ பார்க்க முடியாது. சிரமமான கன ராகம் ஒன்றை அகர சாதகம் பண்ணிண்டிருக்கார்!''

''இல்லை. ரொம்ப முக்கியமான காரியம்னு சொல்லுங்கோ தென்னங்குடி திகம்பரம அனுப்பியிருக்கார்னு சொல்லுங்கோ''

'' சொல்லிப் பார்க்கிறேன். கேட்க மாட்டாரோன்னு நினைக்கிறேன். கேட்டால் உங்கள் அதிர்ஷ்டம்!''

''யாரு, திகம்பரமா? பியாகடையைச் சாக்கடையாப் பாடுவானே ! என்ன விசேஷமாம்?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்த அப்பாசாமி அபிநயம் பிடித்தே வந்தவரைப் பற்றி விசாரித்தான்.

''ஏலாலூரிலே ஏழிசை அரங்கு ஒன்று தொடங்கியிருக்கோம். இன்னிக்குத்தான் தொடக்க விழா. திகம்பரமே பாடுவதா ஒப்புக்கொண்டிருக்கார். உங்களைக் கையோடு கூட்டிண்டு வரச்சொன்னார்.''

''என்னை என்ன வேலையத்தவன்னு நினைச்சானே ? இப்படிக் கொட்டு வாயிலே வந்து கூப்பிட்டா, யாருக்கு இங்கே சௌகரியப்படும்?''

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது நீங்கள். என்ன வேலையிருந்தாலும் நான் சொன்னால்தட்டமாட்டார்னுசொல்லித்தான் என்னை உங்களிடம் அனுப்பிச்சிருக்கார்.''

'' அப்படி யெல்லாம் சக்கரவட்டமாப் பேசிப்பிட்டா ஆச்சா ? இதோ வந்திருக்காரே, இவரும் உங்களைப் போலத்தான். யாருக்குன்னு நான் ஆட முடியும் ?''

''இதோ பாருங்கோ, எங்கள் சபை உங்களைப் போலொத்தவாளுடைய ஆதரவிலே தான்.....''

''ஏன் ஐயா, நீங்க முன்னுக்கு வர்றதுக்கு நாங்களா பிணை?—சரி, வந்த காரியத்தைச் சொல்லுங்கோ. திகம்பரம் பாடப்போறான், வயலினுக்கு யாரைப் போட்டிருக்கேள் ?''

''மால்குடி மனோஹரனை !''

''போச்சுடா! வில்லே வளையாதேடா அவனுக்கு ! சப்த ஸ்வரம்னு பேசும் எழுபது எலிகள் சண்டை போடறாப்போலே. உங்களுக்கு வேறு யாரும் கிடைக்கலையோ''?

''இருக்கிறதுக்குள்ளே பெரிய வயலின்.''

''பெரிய வயலின்னா அது வயோலா ஐயா ! அவன் வாசிக்கிறது வயலின்தான். வயோலா தூக்க ,அவனுக்குச் சக்தி கிடையாது. ஆனால் கரகரப்பிரியாவைக் 'கர்ண கடூரா'வாக மாற்ற சக்தி உண்டு. சரி, சரி! நீங்க யாரைப் போட்டா எனக்கு என்ன? மிருதங்கமாவது சுமாராப் போட்டிருப்பேளா ?''

''சாலைக்கோடு கப்புரத்தினத்தையே போட்டிருக்கோம்.''

'''யே' போட்டா நான் பெரிசா நினைச்சுடுவேங்கிற எண்ணமோ? அவன் மிருதங்கத்திலே 'மிச்ர சாப்'வாசிச்சான்னா மூட்டைப் பூச்சிகளா உதிருமே ஐயா !''

'' என்ன அப்படிச் சொல்லி விட்டேள்?''

''அவன் கேட்கிற பணத்துக்குச் 'சான்ஸ்' யார் ஐயா கொடுக்கிறாங்க? மூலையிலே தூங்குகிறது. மூட்டைப்பூச்சி மொய்க்கிறது!''

''நமக்கு அவர் இனமாக.......!''

''என்ன? இனமாக வரானா ?—சரி, கடத்துக்கு யாரையாவது சொல்லியிருக்கேளா ?''

''கடம் இல்லாமல் கச்சேரியா? துளசிமலை தம்பிசாமியை ஏற்பாடு பண்ணிட்டோம் !''

''அவன் இரண்டு சால்களைத் தூக்கிண்டு வருவான். ஒன்று கடம், மற்றொன்று வயிறு. மிருதங்கத்தோடு ஒத்துப்போக மாட்டான். ஒரு தனி ஆவர்த்தனமே கொடுத்துடுங்கோ?''

''பேஷாக் கொடுத்துட்டாப் போச்சு ! நீங்கள் கட்டாயம்.....''

''இதென்ன பெரிய ரோதனையாப் போச்சே ! நீங்களும் அங்கக்கு இரண்டு பழுதில்லாமல்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறேள். நான் வராமல் இருந்தாலும்நன்றாயிராது. ஆனா இவர் விடமாட்டேங்கிறாரே!''

''நல்ல காரியத்துக்கு நான் குறுக்கே நிற்கிறது தப்பு. அவா புதிசா ஆரம்பிக்கிறா. போயிட்டு வாங்கோ. நம்முடையது பழைசு. எப்போ வேணுமானாலும் வரலாம்!''

''அப்போ உமக்கு அதிர்ஷ்டம்தான் ஐயா! இவரே விட்டுக்கொடுக்கச்சம்மதிச்சுட்டார்.''

''அப்போ நான் வரட்டுமா?''

''பேஷா. நான் நேரவே வந்துடறேன். தம்புராவை நன்னாச் சுருதி கூட்டி அவரே ஜாக்கிரதையாக் கொண்டு வந்துடட்டும். நான் வந்து ஜமாய்ச்சுடறேன் தம்புராவைன்னு திகம்பரத்துக்கிட்டே சொல்லுங்கோ. டிபன், பஸ் சார்ஜுக்குப் பைசாவைக் கொடுத்துட்டுப் போங்கோ!'' என்றான் அப்பாசாமி.


— குறும்பன்

நான் அப்பொழுதான் வீட்டுக்கு வந்தேன். அமெரிக்காவிலிருந்து இரண்டு நாட்கள் விமானத்தில் பறந்து வீடு வந்து சேர்ந்தால் போதுமென்று (பிரயாண அலுப்பினுல் அல்ல) இரண்டு ஆண்டுகளாய் நம் உணவு வகைகளைச் சரியாய்ச் சுவைக்காததால் ஏற்பட்ட ஒருவித நிறைவற்ற நிலை, வீட்டுக்கு வந்ததும் குளித்து அம்மா தன் கரங்களால் சமைத்த சாம்பாரையும் பாகற்காய் வதக்கலையும் எண்ணிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

வெளிநாட்டிலிருந்து வந்த என்னைப் பார்ப்பதற்காக வீட்டில் உற்றார் உறவினர்கள் கூடியிருந்தனர். ஒருவிதமாய் ஏனையோர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அனுப்பி, குளியலறைக்குள் புகுந்தேன். குளித்து உடுத்து வெளியில் வந்த போது அம்மாள் பரபரப்போடு எங்கோ புறப்படத் தயாராய் நின்ருள். நான் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தேன்.

மிக்கோவாம். அத்துடன் வயிற்றில் நிறைமாதக் குழந்தை....'' என்னும்போதே ''நானும் வரேனம்மா!'' என்று அம்மாவுடன் புறப்பட்டேன். என் மனம் சிலாவுக்காக வேதனைப்பட்டது. என்னைவிட ஒரு வருடம் சின்னவள். மாமாவுக்குக் கொழுத்த பணம் இருந்தது. அந்தப் பணத்தை வெளியில் செலவிட விரும்பாது தங்கைக்குக் கொடுத்தாற்போலிருக்க வேண்டும் என்று அதற்குத் தம் பெண்ணைக் கருணுவமாய்ப் பேசினர். எனக்கு ஏனோ அவர் பணமும் பிடிக்கவில்லை; பெண்ணும் மனத்துக்கு ஏற்கவில்லை. வயது வித்தியாசத்தைக் காட்டி விலகினேன்.

நாங்கள் ஏறிய கார் ஆஸ்பத்திரியின் முன் நின்றது. அம்மாவும் நானும் சிலா இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தோம். எதிரில் ஒரு பேஸனில் 'ஸ்டெரிலைஸ்' செய்யப்பட்ட சஸ்திர சிகிச்சைக்கான ஆயுதங்களுடன் ஒரு நர்ஸ் வந்தாள். அவளைப் பார்த்ததும் என் வாய் ''ஹலோ!'' என்றது. அதே சமயம் அதே சொற்களுடன் அவள் குரலும் என் குரலுடன் இணைந்தது. அவள் தலையசைத்து விட்டுத் தன் கடமையை ஆற்ற விரைந்தாள். மாமா அங்கொரு பெஞ்சியின் மேல் கவலையே உருவாய் அமர்ந்திருந்தார். எங்களைக் கண்டதும் தம் வேதனை நிரம்பிய கண்களை அகலத் திறந்து.



அவன்

எம்.எஸ்.கமலா

''சுந்தர்! சிலாவுக்கு உடல்நிலை மிக மிக மோசமாக இருக்கிறதாம். இப்பத்தான் உங்க மாமா ஃபோன் செய்தான். ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டு வருகிறேன். நீ கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கொள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

''சிலாவுக்கா? என்ன உடம்பு?''

''உடம்பு... நீ அப்பவே அவள் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடாமல் போனதன் பலன் அனுபவிக்கிருள். அனிமிக்கோ இனி

''சுந்தர்! உன்னை வரவேற்க விமான நிலையத்துக்கு வர முடியவில்லையடா!'' என்ருர், எங்கம்மா பக்கம் திரும்பி, ''சிவகாமு! குழந்தைக்கு ஸிஸேரியன் ஆபரேஷன் செய்ய வேண்டுமாம். வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுக்கணும்'' என்ருர் கரகரத்த குரலில்.

நான் மெல்ல வராந்தாவின் கோடியில் சென்று. ஆஸ்பத்திரி

காம்பௌண்டில் என் பார்வையைச்செலுத்தினேன். என் பின்புறம் காலடி ஓசை. திரும்பிப் பார்த்தேன். அவள் — அந்த நர்ஸ் — போய்க்கொண்டிருந்தாள். ''நர்ஸ்'' என்று அழைத்தேன். அவள் திரும்பி வருவதாகச் சைகை செய்து சென்றாள். என் சிந்தனை வெளி திறந்து கொண்டது. மூன்றாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் நிழல் சித்திரமாக மிளிர்ந்தது.

அன்று எதிர்பாராத மழை. அது மழைக் காலமல்லவாயினும், வானம் கிழிந்து தண்ணீர் ஊற்று விண்ணிலிருந்து வடிவது போலிருந்தது. கோவை பொறியியல் கல்லூரியில் இறுதி வகுப்புப் படித்துக் கொண்டிருந்த நான் மோகனூரர் சென்றிருந்தேன். அங்கு எங்கள் மூதாதையர் ஈட்டி வைத்த நிலபுலன்கள் இருந்தன. அவைகளைப் பார்த்துவிட்டு, வல்லுனன்பட்டிக்கு வரும் வழியில் பெருமழை பெய்தது. காட்டாறு ஒன்று வேகமாய் உடைப்பெடுத்து விட்டது. நான் வல்லுனன்பட்டியில் பஸ் ஏறிச் சேலம் வந்து கோவை வரவேண்டும். ஆண்டவனை வேண்டியவாறு மரத்தின் கீழ் ஒண்டினேன். கிளைகளின் இடையே விருந்து இலைகளில் தேங்கிய நீர் முத்துக்கள் சிறு சிறு கற்களைப் போல் தலையிலும் தோள்களிலும் வீழ்ந்து உடைந்து சிதறும்போது என் மேனி சிலிர்த்துச் சுருங்கியது.

ஒரு மணி நேரத்துக்குப் பின் மழை ஓய்ந்தது. பாதை முழுதும் நீரோடையைப் போல் சலசலவென்ற ஒலியை யெழுப்பிக் கொண்டு மழை நீர் பாய்ந்தோடிக்கொண்டிருந்தது. நடக்கத் தொடங்கினேன். மழைச் சாரல், என் ட்வீட் பேண்டையும், சில்க் ஷர்ட்டையும் பாழாக்கியது. இருள் திரை மெல்ல மெல்லப் படரத் தொடங்கியது. உடைகளும் ஈரமாகி, கால்களும் ஓடும் மழை நீரில் கனத்து வேகமாய் நடக்க முடியாது தடுத்தது. உடைப்பெடுத்த காட்டாற்றின் ஒலி சலசலவென்று கேட்கிறது. இருபதாம் நூற்றாண்டு தீர வாலிபன்தான் எனினும்



இயற்கையின் அபாகவரம் என்னை அச்சத்தில் ஆழ்த்தியது. அது வரையில் நினைக்காத எங்கள் குலதெய்வத்தை நினைத்தவாறு மெல்ல நடந்தேன்.

ஒரு மரத்தடியில் ஒரு வண்டி நின்றிருந்தது. மரத்தில் சோவியைப் போன்ற குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அந்த வண்டிக்குள் வண்டிக்காரன் குப்புறப் படுத்து சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான். அவனை அணுகி, ''வண்டியைக் கட்டுவாயா?'' என்று கேட்டேன்.

''கறுக்கல் பாயுதுங்கோ. மறுபடியும் மழை வருமுங்க. அந்த ஆற்று நீர் இப்ப வடியாதுங்க. ராவு எந்நேரமாகுமோ? நீங்களும் இந்த வண்டியிலே ஒதுங்கிக் கிங்க'' என்றான்.

அங்கிருந்து அரை மைல் தூரம் சென்றால் வலேஜன்பட்டி செல்லும் பஸ் ஸ்டாண்ட் நெருங்கும். எப்படிச் செல்வது? ஏமாற்றத்துடன் மெல்லத் தைரியத்தைக் கடைப்பிடித்துக் கடைசி ஏழரை மணி பஸ்ஸைப் பிடித்துச் சேலம் சென்றுவிட வேண்டும் என்று நடக்கத் தொடங்கினேன். எதிரில் சிறிய தோட்டம். அதற்குள்ளிருந்து விளக்கொளி என் மனத்தில் மிளிரும் ஆசைக் கீற்றலைப் போலத் தென்பட்டது. எங்கும் காரிருள் கவிழ்ந்து கிடந்தது. மெல்ல அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்தேன். நான் உள்ளே வருவதைத் தடை செய்வதுபோல் நாய் குரைத்தது. அதிர்ந்து நின்றேன்.

''யாரது? வாருங்கள்'' என்ற இனிய குரல் அதிகாரமாய் அழைத்தது.

யாரோ பணிப் பெண். தன் கடமையைக் குரலில் காட்டுகிறாள் எனக் கருதி நடந்தேன். வாசலில் ராஜபாளையம் நாய் கட்டப்பட்டிருந்தது.

''யார் வந்திருப்பது? பொன்னு! அவர்களை உள்ளே அனுப்பு.'' — அதே அதிகாரக் குரல். நான் தண்ட கட்டிய நாகம் போல் நின்றேன்.

''சாமி! போங்க!'' என்று நாயருகில் அமர்ந்திருந்த கிழப் பொன்னன் வழியை விட்டான். சுற்றிலும் பற்பல செடிகள் சூழச் சிறிய வீடு. உள்ளே மின் விளக்குகள் ஒளியை உமிழ்ந்து இருளை விரட்டிக் கொண்டிருந்தன. சுவர்க் கோழிகளின் ஒலி, மழை நீர் வடியும் 'சோ'வென்ற ஓசை, தொலைவில் தவளைகளின் குரல்கள் - இந்தச் சூழ்நிலை விசித்திரமாயிருந்தது.

உள்ளே சென்றேன். அழகிய மங்கை முற்றத்தில் விழும் மழை நீரைப் பார்த்தவாறு சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்தாள். அவள் மடிமேல் ''மேக சந்தேசம்'' என்ற வடமொழி நூல் திறந்து கவிழ்ந்து கிடந்தது. அவள் அழகின் பிரதிபிம்பமென்று சொல்லாவிடினும் மனத்தைக் கவரும் அழகுடையவள்தான் என்று தோன்றியது.

மெல்லிய பட்டுச் சோளி. ஜார்ஜெட் புடவை, பின்னித் தொங்கவிடப்பட்ட நீண்ட கூந்தல். வலது கை மோதிர விரலில் ஒரு வைர மோதிரம் இருண்ட நேரத்திலும் நக்ஷத்திரம் போல் மின்னிக் கொண்டிருந்தது. கழுத்தில் ஓர் இழை தங்கச் சங்கிலி, இடது கையில் தங்கக் கடிகாரம், வலது கையில் ஒரே ஒரு வளையல். வாசல் அருகே நின்றேன்.

''வாருங்கள்!'' என்று எதிரில் இருந்த நாற்காலியில் அமரச் சொன்னாள். தயங்கியவாறே திருதிருவென்று நாற்புறமும் பார்வையைச் சுழற்றினேன். அவள், ''ஸிஸ்டர்!'' என்று உரத்துக் கூவினாள்.

உள்ளேயிருந்து முப்பதுவயது மாதொருத்தி வந்தாள். ''யாரோ பாவம்! மழையில் நனைந்து வந்திருக்கிறார். அவருக்கு உலர்ந்த நல்ல துணிகளைக் கொடு. நம் விருந்தினர்'' என்றாள். நான் வியப்பிலாழ்ந்தேன். அவள், என்னைப் பார்த்து, ''நண்பரே! இவருடன் செல்லுங்கள்'' என்றாள். என்னுள் இந்த இருண்ட நேரத்தில் தோட்டத்து நடுவில் நம்மை உபசரிப்பது மாந்தரா அல்லது யக்ஷிணி, மோஹினி என்பார்களே அவையா என்ற நடுக்கமும் தோன்றியது. பதில் பேசாது ஊமையைப் போல் அந்த மாதுடன் சென்றேன். நனைந்த எனக்கு நினையாத ஆதரவும் உபசரணையும் கனவைப் போல் தோன்றின. குளியல் அறையைக் காட்டிச் சென்றாள் அவள். ஷவர்பாத்தில் வெந்நீர் இதமாயிருந்தது. குளித்தேன். மாற்றுடைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவைகளை உடுப்பதா? வேண்டாமா என்று சிந்தித்தேன். குளித்தபின் சேறு சிதறிய ஆடைகளை உடுத்த மனம் இசையவில்லை. அவைகளை அலசி வைத்துவிட்டு வந்தேன்.

குளியலறை வாசலருகே நின்றிருந்த அந்த மாது எனக்காகக் காத்து நிற்பதுபோல் தோன்றியது. நான் வந்ததும், ''உங்களுக்கு ஸ்வப்னவைத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தெரியாது!''

''பின் எப்படி இங்கு வந்தீர்கள்?'' என்றாள்.

''எனக்கு ஒன்றும் தெரியாது. நான் மோஹனூருக்கு எங்கள் நிலங்களைப் பார்க்கும் குத்தகைக்காரனைப் பார்க்க வந்தேன். இன்றிரவு வண்டியில் கோவை செல்ல வேண்டும். மழையும் காட்டாறும் என் திட்டத்தைத் தகர்த்தன. ஒதுங்க இடம் தேடி வந்த போது இவ்வீட்டிலிருந்து வந்த ஒளியும் நாயின் குரைப்பும், 'யாரது? வாருங்கள்' என்ற அழைப்பும் என்னை இங்கே வரச் செய்தன'' என்றேன்.

அவள் எனக்கு வழிவிட்டுச் சென்றாள். என் மனத்தில் இந்த வீடும் பெண்களும் பேய்களா? தேவதைகளா என்று தோன்றியது. என்னுள் எழும்பிய சந்தேகத்துக்குத் தீர்வு காணாது சிந்தனையில் ஆழ்ந்தவாறே கூடத்தில் நுழைந்தேன்.

''என்ன யோசனை பலமாயிருக்கிறதே?'' என்றாள் அழகி. நான் துணுக்குற்றேன். என் மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டாலும் அதை வெளியில் காட்டாது, ''ஒன்றுமில்லையே!'' என்றேன்.

''உட்காருங்கள்'' என்றாள். மேஜையின் மேல் ஆவியைக் கிளப்பிக் கொண்டு இரண்டு கோப்பைகளில் காப்பியிருந்தது. நான் நன்றியுடன் அந்த மங்கையைப் பார்த்தேன். ஒரு கோப்பையை என் முன் தள்ளித் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு, ''மழைக்குச்



பனாமா பிளேடுகள்

முகக்ஷவரத்தை இன்பகரமாக்குகின்றன !

நீங்கள் உயர்வாக மதிக்கும் சேவைக்கேற்ற

பனாமா மகிழ்ச்சிமிகு நல்ல

முகக்ஷவரத்திற்கு உறுதியளிக்கின்றன !

சூடான காப்பிதான் இதமாயிருக்கும். எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி, ''உங்கள் பெயர்.....?'' என்றாள்.

''சுந்தர்.''

''இங்கே வந்தது....?'' அவள் கேட்கும் போதே கரகரத்த குரலில் என் விவரங்களை அறிவித்தேன். அவள் தன் உதட்டுக்கிடையில் சிரிப்பை நெளிய விட்டாள்.

நான் பயத்துடன் அவளைப் பார்த்தேன். ''அவர் எழுந்துவிட்டாற்போல் தோன்றுகிறது'' என்றாள். அவள் கண்களில் பெருமை ஒளி வீசியது. என்னுள் என்னையறியாத அச்சம் ஏற்பட்டது. ''காப்பி ஆறிப் போகிறது. குடியுங்கள்'' என்றாள். உள்ளே ஏதோ பாத்திரங்களின் ஒலி கேட்டது.

''ஸிஸ்டர் !'' என்று உரத்துக் கூவினாள். அந்தப் பணிப் பெண் ஓடி வந்தாள். ''உள்ளே என்ன செய்யறே ?'' என்று கேட்டாள்.

''வேலை செய்து கொண்டிருக்கிறேன்.''

''உள்ளே அவர் எழுந்துவிட்டாற்போல் இருக்கிறது. அவரைக் கவனிக்க வேண்டாம் ?''

''இன்னும் எழுந்திருக்கவில்லை.''

''இன்னுமா உறக்கம் தெளியவில்லை. இப்படிப் பொழுதுக்கும் தூங்குகிறவருக்குப் பெண்டாட்டி எதற்கு? சீச்சீ!'' என்றாள். அப்பொழுது அவள் முகம் சிவந்து வாடியது.

''உதயகுமார்......!'' என்று உரத்துக் கூவினாள். பதில் வராது போகவே, ''நீ அவரை எழுப்பி அழைத்து வா !'' என்றாள். அம்மாது அவ்விடமிருந்து அசையாதிருக்கவே, ''வேண்டாம். நீ போய் உன் வேலையைப் பார். இன்று இரவு இவருக்கு இங்குதான் சாப்பாடு. தெரியுமா ? சீக்கிரம் தயார் செய்'' என்றாள்.


என்னுள் தோன்றியது. அவள் கணவர் தூக்கப் பிரியரோ என்று. அவள் மெல்ல அன்புடன், ''நீங்கள் குடிப்பதுண்டா ?'' என்றாள். நான் திடுக்கிட்டுப் பார்த்தேன்.

''சிகரெட் குடிப்பதுண்டா? அவருக்குப் பழக்கமில்லை. அவர் நண்பர்களுக்காக வரவழைத்து வைத்திருக்கிறேன். வெட்கப்படாமல் கேளுங்கள்'' என்றாள். அவள் சகஜத் தன்மைக்கு வியந்தேன்.

''அதோ, அந்த அறையில் புத்தகங்கள் இருக்கின்றன. உங்களுக்கு விருப்பமான புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம். இன்று முகில் கூட்டங்கள் வானத்தில் ஓடத் தொடங்கியதுமே எனக்கு யக்ஷனின்மேல் நினைவு போயிற்று. அவன் தன் மனைவிக்கு முகில்கள் மூலமாய் விடும் தூதைப் படிக்கத்தான் காளிதாசனின் மேக சந்தேசத்தை எடுத்துக் கொண்டேன்'' என்று தன் மடியின் மேலிருந்த புத்தகத்தில் படித்து நிறுத்திய பக்கத்திலிருந்து வடமொழி செய்யுளைத் தன் இனிய குரலில் பாடியவாறு படிக்கத் தொடங்கினாள். நான் அவள் காட்டிய அறைக்குள் சென்று பார்த்தேன்.

அது ஒரு சிறிய நூலகம்.

நான் நூல்களின் வரிசையைப் பார்த்துக் கொண்டு வந்தபோது ஒரு நூல் பெயர் தெரியாமல் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்க்க விரும்பினேன். அது நூல் அல்ல. புகைப்பட ஆல்பம். அதைத் திறந்து



'' மகாமகத்துக்குப் போகல்லையா பாட்டி ?''

''நன்னால்லேம்மா! பொழைக்கக் கெடந்தா அடுத்த மகாமகத்துக்குப் பாத்துக்கலாம்னு இருக்கேன்!''

பார்த்தேன். யார் யாரோ எத்தனையோவித அலங்காரங்களுடன் இருந்த குடும்பத் தலைவர்களின் புகைப்படங்கள். படங்களின் கீழ் அவர்களின் பெயர்கள். பக்கங்களைப் புரட்டிக் கொண்டே போனேன். உதயகுமார். அழகான வாலிபன். அவன் முகம் உதய காலத்தைப் போலக் குளிர்ந்து அற்புத அழகா யிருந்தது. மற்றொரு பக்கத்தில்,— 'ஸ்வப்னா உதயகுமார்' இருவரும் ஒன்றி நிற்கும் படம். வேறொரு பக்கத்தில் உதயகுமார் எதையோ எழுதிக் கொண்டிருக்கப் புத்தகங்களும் கையுமாய் ஸ்வப்னா நின்று கொண்டிருக்கிறாள்.

கடைசிப் பக்கத்தில் எட்டாத மலர்க் கிளைகளை உதயகுமார் வளைத்துப் பிடிக்க அதில் மலர்ந்திருக்கும் மலர்களை ஸ்வப்னா பெருமையுடன் பறிக்கிறாள். அழகனுக்கேற்ற அழகி என்று நினைத்து ஆல்பத்தை மூடப் போனேன். பின்னிருந்து, ''பார்த்தீர்களா, உதயகுமாரை ?'' என்ற குரல் கர்வத்துடன் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ''அந்தப் பீரோவிலிருக்கும் அந்தச் சிவப்பு வெல்வெட் ஜாக்கெட் போட்ட புத்தகத்தை எடுங்கள்'' என்றாள் அந்த அழகி. இயந்திரம் போல் அவள் குறிப்பிட்ட புத்தகத்தை எடுத்து நீட்டினேன்.

''வாருங்கள். மேஜையின் முன் அமர்ந்து பேசுவோம்'' என்று அந்தப் புத்தகத்தை மார்பில் அழுத்தி வருடியவாறு சென்றாள். நானும் தொடர்ந்தேன்.

அவள் புத்தகத்தைத் திறந்து சில படங்களை வெளியில் எடுத்தாள். அவைகளெல்லாம் உதயகுமார் கல்லூரியில் பங்கு கொண்ட பொது நிகழ்ச்சிகள். அவைகளைக் காட்டிக் கொண்டிருந்தபோது ஒரு படத்தில் அவன் தலையில் கைக்குட்டையைக் கட்டிக் கொண்டு விளையாட்டு வீரனைப் போல் நின்றிருந்ததைக் காட்டினாள். அதை நான் பார்த்துக் கொண்டிருந்த போதே, ''ஸிஸ்டர் !'' என்று கூவினாள். அவள் வந்தாள்.

''அவர் என்ன செய்கிறார் ?''

''இன்னும் எழுந்திருக்கவில்லை அம்மா.''

''நேரமாகிவிட்டதே! எழுப்பி மருந்து கொடுக்கக் கூடாதா?''

''கொடுக்கிறேன்.''

''போய் முன்பு கொடு'' என்று கட்டளையிட்டு விட்டுப் பின், ''இரு நானே வந்து கொடுக்கிறேன். அப்பொழுது தான்.......!'' என்று இழுத்தாள்.

''வேண்டாம். நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள்'' என்று சென்றான். என் கையிலிருந்த படத்தை மேஜையின் மேல் வைத்தேன். அவன் அப்படங்களை அப்புத்தகத்தில் வைத்துக் கொண்டே, ''அன்றும் இது போலவேதான் உறுமலும் குமுறலுமாய் மழை. உதயகுமார் வந்தார். உங்களைப் போல் அசட்டாட்டமா சேற்றைப் பூசிக் கொண்டு நனைந்து வரவில்லை. நன்றாய் டிப்டாப்பாய் வந்தார். நான் அப்பொழுது மண்ணுக்கும் விண்ணுக்கும் மழையால் ஏற்பட்ட பிணைப்பில் தோன்றிய இடியையும், குமுறலையும், மின்னலையும், ஜில்லென்று வீசும் காற்றையும், இத்தனைக்கும் மேல் அசையாது ஆணவம் பிடித்துக் கிடக்கும் வானத்தையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''ஸ்வப்னா, என்ன தியான நிலையில் இருக்கிறாய்?'' என்று கேட்டவாறு என்னருகே வந்து நின்றார். அவரின் மூச்சு என் பின்புறத்துக் கழுத்தில் குறுகுறுத்தது. அவருக்கு இருக்கையைக் காட்டி நானும் எதிரில் அமர்ந்தேன். இதே போல் அத்தை காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். இருவரும் அர்த்தமில்லாது பேசிக் கொண்டே குடித்தோம். மழையும் நின்றது. எங்கள் பேச்சு நிற்கவில்லை. அத்தை என்னை அழைத்தாள்.

''ஊம், புறப்படுங்கள். மழை விட்டு விட்டது'' என்றேன்.

''ஊஹூம்'' என்றார்.

''ஏன்?'' என்றேன்.

''உன்னைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருப்பேன்'' என்றார்.

''எத்தனை நேரம்?''

''விடிய விடிய'' என்றார். இப்படிக் கூறும்போது அவள் முகம் மலர்ந்து நிறம் மாறியது. ''உதயகுமார்...... குமார்'' என்று கூவினாள் அந்த அழகி. ஸிஸ்டர் வந்தாள்.

''ஸிஸ்டர்! அவர் என்ன செய்கிறார்?''

''மருந்து குடித்தார்.''

''குடித்தாரா? அப்பா!'' என்று நெட்டுயிர்த்தாள்.

''சாப்பிட எழுந்திருங்கள்'' என்றாள். ஸ்வப்னா எழுந்து கைகால் கழுவிக் கொண்டு மேஜையின் முன் வந்து அமர்ந்தாள். ஸிஸ்டர் பரிமாறினாள்.

''இன்று முகமறியாதவர்கள் வீட்டில் விருந்தினராய் இருக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் அதிர்ஷ்டக்காரன். ஆனால் உங்கள் உதயகுமார் நம்முடன் சேர்ந்து உணவருந்த முடியாமைக்கு வருந்துகிறேன்'' என்றேன்.

ஸிஸ்டர் என்னைச் சிற்றத்துடன் நோக்கி விட்டுச் சென்றாள்.

''அவரைக் காட்டுகிறேன். வாருங்கள்'' என்றாள்.

''சாப்பிட்டபின் பார்க்கலாம்'' என்றேன். அவள் சாப்பிட்டுக் கொண்டே தன் குடும்பத்தை உதயகுமாருடன் எப்படியெல்லாம் நடத்தத் திட்டம் வகுத்திருக்கிறாள் என்பதைப் பெருமிதத்துடன் கூறினாள். அவள் அழகி மாத்திரமல்ல. ஆதரிச மனைவி. புதுமைப் பெண். பாரதி கண்ட பத்தினிப் பெண். உதயகுமார் பாக்கியசாலி என்று மனம் களித்தேன்.

இருவரும் உண்டு எழுந்தோம். ''ஸிஸ்டர்! அவர் விழித்துக் கொண்டாரா? இவரை அழைத்து வந்து அறிமுகப்படுத்துகிறேன்'' என்றாள்.

''மருந்து குடித்து இப்பொழுதுதான் கண் அயர்ந்தார். நீங்கள் போனால் எழுந்துவிடுவார். பிறகு இரவு முழுவதும் தூக்கம் வராமல் அவதிப்படுவார். அதன் பன் காலையில் இரண்டு இஞ்செக்ஷன் அவருக்குப் போடவேண்டி வரும்'' என்றாள்.

''வேண்டாம். சிரமப்படுத்தாதீர்கள்'' என்றேன் நான். விருந்தினர்களுக்காக இருக்கும் அறையைப் பொன்னன் காட்ட அதில் போய்ப் படுத்தேன்.

அதிகாலையில் அவள் பொன்னனை அழைப்பதைக் கேட்டு விழித்தேன்.

''காட்டாறு வடிந்துவிட்டதாம். மறுபடியும் மழை வரும்போல் தோன்றுகிறது. நீங்கள் முதல் பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமென்றால் இப்பொழுதே புறப்படுங்கள்'' என்றாள். ''பொன்னா! இவரைப் பத்திரமாய் அழைத்துச் சென்று ஆற்றுப் பாலத்தைக் கடந்துவிட்டு வா'' என்றாள். அவளுக்கு என் நன்றியைத் தெரிவித்து அவள் விலாசத்தைப் பெற்றுச் சென்றேன். தெருவில் இறங்கியபின் அவ்வீட்டைத் திரும்பிப் பார்த்தேன். அவள் வாசலில் நின்று விண்ணைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் வான சாஸ்திரியோ? எனக்கு அந்த வீட்டையும் அவளையும் விட்டுச் செல்ல மனம் வரவில்லை. ஆனால் நான் யார்? அவள் யார்? காட்டாற்று வெள்ளம், ஓர் இரவைக் கழிக்க அன்பும் பண்பும் நிறைந்த பாரதப் பெண்ணைக் காட்டியது.

காட்டாறு வடிந்து விட்டதால் இரவு தங்கியிருந்த பார வண்டிகள் ஒவ்வொன்றாய்ப் போய்க் கொண்டிருந்தன. ''சாமி, புறப்படுங்க. சீக்கிரம் தாண்டுங்க. கிழக்கே கூப்பிடும் தூரம் சென்றால் பஸ் வருமுங்க'' என்றான் பொன்னன். ஆற்றைக் கடந்து மைல் கல்மேல் அமர்ந்தேன். அதிகாலை நாலு மணி பஸ் வந்தது. ஆறு ஏழு மணிக்குச் சேலம் வந்து கஸ்தூரி வேலைக்குக் கோவை வந்து சேர்ந்துவிட்டேன்.

இரண்டு நாட்களுக்குப்பின் எதிர்பாரா விருந்தினனாய் ஸ்வப்னா வீட்டில் ஓர் இரவைக் கடத்திய அதிர்ஷ்டத்தைப் பாராட்டித் திருமதி ஸ்வப்னா உதயகுமாருக்குக் கடிதம் எழுதினேன்.

ஸ்வப்னா தன் கணவரின் உடல்நிலையைப் பற்றி ஒரு சகோதரனுக்கு எழுதியது போல் தன் அன்பையெல்லாம் கடிதத்தில் கொட்டி எழுதியிருந்தாள்.

என் படிப்பு முடிந்தது. எனக்கு மேல்நாட்டு உபகாரச் சம்பளம் கிடைக்கவே பொறி இயலில் உயர்தரப் பயிற்சி பெற அமெரிக்காவுக்குச் சென்று இரண்டாண்டுகளிலிருந்து விட்டு வந்தேன். சிந்தனைவெளி மூடப்பட்டது. சிலையைப் போல் நின்றிருந்தேன்.

“சார்!” என்ற குரல் விழிப்புறச் செய்தது. திரும்பிப் பார்த்தேன். அந்த நர்ஸ்.

“என்னைத் தெரிகிறதா?” என்று வணக்கம் செலுத்தினேன். அம்மாது புன்னகையுடன் என்னை விசாரித்தாள். என்னைப் பற்றிக் கூறி, “ஸ்வப்னா, கணவர் எப்படி இருக்கிறார்? ஸ்வப்னாவுக்குக் குழந்தைகள் உண்டா?” என்று கேட்டேன். நர்ஸின் கண்கள் நீரை நிரப்பிக் கொண்டன. நான் பதைபதைத்து, “ஏன் கலங்குகிறீர்கள்?” என்றேன்.

“நீங்கள் எந்த நாட்டில் இருக்கிறீர்கள்?” என்று கேட்டாள் தழுதழுத்த குரலில்.

ஸ்தம்பித்து உயிர்ச்சிலையாய் நின்றேன்.

“நான் ட்யூட்டி முடிந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். என்னுடன் வந்தால் ஸ்வப்னா விஷயம் முழுவதும் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றாள். அவளுடன் சென்றேன்.

“ஸ்வப்னா இறைவனடி சேர்ந்து இரண்டாண்டுகளாயின” என்றாள், நர்ஸ் தன் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டே.

“ஏன்? அவள் கணவருக்கு நோய் குணமாகவில்லையா? மனமுடைந்து மாண்டாளா?”

அவள் தலையைக் குறுக்காய் அசைத்து உள்ளே சென்று சில கடிதங்களைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னாள்.

எல்லாக் கடிதங்களும் உதயகுமார் ஸ்வப்னாவுக்கு எழுதியது. ஒரே கடிதத்தைப் படித்தேன்.

“நீ பாரதி காட்டிய புதுமைப் பெண்ணின் உருவமாயிருந்தால் நான் ‘ஒளி படைத்த கண்ணினன்’ ஆக இருப்பேன். நம் சேர்க்கையில் தோன்றும் நறுமலர், “கட்டும் கடரொளி” யாக இருக்கும். அதிசயமில்லை. நீதான் உன் காப்பாளன். ஊரறிய ஒரு நூல் கயிற்றைக் கட்டும் வரை அவன் கைக்குள்..... தவறு அவன் நிழல்கூட நின் மேல் படக்கூடாது என்கிறாய். இரு..... இரு...... நம் வீடு, ‘வாச மலர்’. நம் குழந்தை கண்ணம்மா. நாம் ஏறப் போவது ஞானரதம். நன்றாயிருக்கிறதா?”

மற்றக் கடிதங்களைத் திருப்பிக் கொடுத்து, “இத்தனை கடிதங்களும்.....” என்றேன்.

“ஸ்வப்னாவுக்கு உதயகுமார் எழுதியவை.”

“இறப்பதற்கு... தவறு... நோய்வாய்ப்படுவதற்கு முன்பா?”

“உதயகுமார் வேறொருத்தியை மணப்பதற்குமுன்.......”

“என்ன உதயகுமார், ஸ்வப்னாவை மணக்கவில்லையா?”

“ஆம். உதயகுமாரை ஸ்வப்னா நேசித்தாள். உதயகுமார் ஸ்வப்னாவை நம்பவைத்து மோசம் செய்து வேறொருத்தியை மணந்து கொண்டார். அதனால் ஸ்வப்னாவின் மனம் பேதலித்தது. நான் அவளின் தூர உறவினள்.



“மகாமகத்துக்குப் போகலையா?”

“அடுத்த வாரம் அதைச் சினிமாவில் காட்டுவாளே, அப்போ பார்த்துட்டாப் போச்சு!”

“ஒரு சொம்பு தண்ணியும் கொண்டு போங்கோ- எல்லாரும் ஸ்நானம் பண்ணும் காட்சியின்போது தலையிலே கொட்டிக்கலாம்!”

தாயற்ற அவளை அவள் தந்தை ஆதர்ச மங்கையாய் வளர்த்துப் பன்மொழி பயில்வித்துக் கலைச் செல்வியாக்கினார். நல்ல வேளை! அவள் புத்தி பேதலிப்பதற்குமுன் இறைவனடி சேர்ந்தார்.

“நான் நர்ஸாகப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பணி புரிந்து கொண்டிருந்த போது இவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தார்கள். நான் ஸர்ஜனின் அனுமதி பெற்று அவளுக்கு இயற்கையாகவே சிகிச்சை செய்ய வைத்துப் பராமரித்தேன். எத்தனை நாள்தான் ஏமாற்றத்தை அந்த மனம் ஏற்கும்? ஒரு நாள் பலூனைப் போல் வெடித்து விட்டது.”

“ஆனால் உதயகுமாருக்கு நோய்நொடி ஒன்றுமில்லையே?”

“உதயகுமாரைக் கண்டவர் யார்?”

“அன்று அப்படி.....!”

“அதுவா? ஸ்வப்னாவின் மனச் சாந்திக்காக அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தேன்” என்றாள்.

நான் அவளிடம் விடைபெற்று வைத்தியசாலைக்கு விரைந்தேன். என் மனம் ஸ்வப்னாவுக்காக ஊமை அழுகை அழுதது. என் தாயும், மாமனும் அந்த வராந்தா பெஞ்சியிலேயே கவலையே உருவாய் அமர்ந்திருந்தனர்.

அச்சமயம் ஓர் அழகன் அங்கு பறக்கப் பறக்க வந்து, “சீலா, எப்படி இருக்கிறாள்?” என்று மாமாவைக் கேட்டான்.

அவனை நிமிர்ந்து பார்த்தேன். அதே சமயம் ஆப்பரேஷன் தியேட்டரின் கதவு திறந்து கொண்டது. வெளியில் வந்த டாக்டர், “எங்கள் சக்திக்கும் மீறிவிட்டது. சிறிய ஜீவன் பிழைத்தது” என்றார்.

“சீலா.....” வீறிட்டவாறு உதயகுமார் உள்ளே ஓடினான். அவனுக்குப்பின் எல்லோரும் விரைந்தோம்.

என் வாய், “பாதகா!” என்று முணுமுணுத்தது. நான் சீலாவின் முகத்தைப் பார்த்தேன். அதில் அமைதி குடிகொண்டிருந்தது. அந்த அமைதிக்குள், “அவள்” (ஸ்வப்னா) என்னைப் பார்த்தாள்!

(பேராசிரியர் நீலகண்டன் வீட்டு ஹால். நீலகண்டன் பையன் வேணு ரேடியோவைத் திருகிக்கொண்டு நிற்கிறான்.)

வானொலியில்: இன்று உலகத்தில் சிறந்த காவியங்களாக விளங்கும் பல நூல்கள் அவற்றின் சோகச் சுவையாலேயே பிரசித்தமாக ஆகியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்தச் சோகம் காதல் தோல்வியினால் படரும்போது காவியத்தின் சிறப்பு...

வேணு (வானொலி சத்தத்தைச் சட்டென்று குறைத்து): நான்சென்ஸ்! எவனோ அழுமூஞ்சி இலக்கிய விமரிசனம் பண்ணுகிறான்! தோல்வியாம்! சோகமாம்!

(வேறு நிலையத்துக்கு விசையைத் திருப்புகிறான்.)

வானொலிக் குரல்:

காதல், காதல், காதல்,
காதல்போயிற் காதல்போயிற்
சாதல், சாதல், சாதல்!

என்றுதான் மகாகவி பாரதி தன் குயில் பாட்டில் முழக்குகிறான். இரண்டு தடவைகள் ஒருவன் காதலில் தோற்றுப் போனால் அவன் மூன்று தடவைகள் ஏன் பிராணனை விடவேண்டும்? கவிஞனுக்குக் கணக்கு வராதா? முதல் வரியின் ஒலி ஒற்றுமைக்காக மூன்று தடவைகள் சாதலை நுழைக்கிறானா? அங்கேதான் கவிஞனின் கற்பனா சக்தி பொங்கி வழிகிறது...

வேணு (வானொலிச் சத்தத்தைச் சட்டென்று குறைத்து) ...அண்டாவை எடுத்துக் கொண்டு போய் ஏந்துகிறதுதானே!... ஏன் இங்கே கொட்டறே! சுத்த அபசகுனம்!

(வேறு நிலையத்துக்குக் கைத் திருகைத் திருப்புகிறான்.)

வானொலிக் குரல்: அட பாவி! உன்னை வளர்த்து ஆளாக்கி மனிதனாய் நடமாட விட்டதற்கு நீ செய்யும் கைமாறுடா இது? காலிப் பயலே! உன் முகரைக் கட்டைக்குக் காதல் வேறு கேடா!... உன்னைப் பிள்ளையாகப் பெற்றெடுத்ததற்கு ஒரு எருமை மாட்டைப் பெற்றிருக்கலாமடா!... என் முகத்தில் விழிக்காதே...

(நிமிரென்று நீலகண்டன் வெளியிலிருந்து வானொலி நாடக சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு உள்ளே வருகிறார்.)

வேணு (நீலகண்டன் வருவதைக் கவனிக்காமல் சட்டென்று ரேடியோவை நிறுத்தி விட்டு): அட இராமைகளா! சொல்லி வைத்தாற் போல மூன்று வெவ்வேறு நிலையங்களிலுமல்லவா இப்படிக் காதல் விரோதப் பிரசாரம் பண்ணுகிறார்கள்!

நீலகண்டன் (இரண்டு எட்டு முன்னால் வந்து): என்னடா வேணு ரேடியோவை 'ஆப்' பண்ணிட்டியே! கடைசியாகக் கேட்ட டயலாக்....

வேணு (திடுக்கிட்டுத் திரும்பி அசட்டுச் சிரிப்புடன்): ஒண்ணுமில்லேப்பா! என்னவோ பேத்தல் நாடகம்...


நீலகண்டன்: பேத்தல் நாடகமா? எனக்கு அப்படித் தோணலியேடா! அழகாக மணி மணியாகப் பேசினானே யாரோ? அந்த டயலாக்கை மறுபடியும்கேட்கணும்போல இருக்குடா!... ஹும்! டேப்ரிக்கார்டரா, இராம போனை இருப்பிக்கேட்க! ஏண்டா நீ நினைவுபடுத்திக் கொண்டுசொல்லுடா கேட்போம்.

வேணு (திடுக்கிட்டு): இல்லேப்பா! நான் சரியாகக் கவனிக்கலே...

நீலகண்டன்: ஓஹோ! அப்படியா? நான் கவனித்தேண்டா! சொல்றேன் கேள்! (குரலைக் கடுமையாக்கிக் கொண்டு) அட பாவி! உன்னை வளர்த்து ஆளாக்கி மனிதனாய் நடமாட விட்டதற்கு நீ செய்யும் கைம்மாறுடா இது! காலிப் பயலே! உன் முகரைக் கட்டைக்குக் காதல் வேறு கேடா! உன்னைப் பிள்ளையாகப் பெற்றதற்கு ஒரு எருமை மாட்டைப் பெற்றிருக்கலாமடா!...என் முகத்தில் விழிக்காதே...

வேணு: வொண்டர்புல்!... அப்படியே கப்னு அத்தனை வார்த்தைகளையும் பிடிச்சுட்டீங்களே! எக்ஸ்பிரஷன் பிரமாதம்! அப்பா! நீங்ககூட இனிமேல் ரேடியோ நாடகங்களிலே நடிக்கலாம்.

(உள்ளே திரும்புகிறான்.)



நீலகண்டன்: டேய்! நில்லுடா!... நான் இப்போ நடிக்கலே! உன் புத்தியைப் பிடிக்கிறேன்! நான் பேசினது ரேடியோ நாடக டயலாக் இல்லே! வாழ்க்கை நாடக டய லாக்டா!... ஏண்டா இடியட்! உனக்குக் காதல் பைத்தியம் பிடித்திருக்காமேடா! உண்மையா?

வேணு: உங்களுக்கு யாரப்பா சொன்னார்கள்?

நீலகண்டன்: உன்னுடைய பதில் கேள்வியே பளிச்சுன்னு சொல்றதேடா! டேய் வேணு!... என்னையும் ஒரு நாளாவது-ரேடியோ ஸ்டேஷன்னு வாயை மூட முடியாது. நான் எச்சரிக்கட்டேன்! ஜாக்ரதை! இந்த நீலகண்டன் பரம்பரையில் இந்த மாதிரிப் பேத்தல்களுக்கெல்லாம் இடம் கிடையாது! மரியாதையாக நான் தேர்ந்தெடுக்கிற பெண்ணுக்குத் தாலி கட்டினால் போதும்!... பத்துமாவாம் பத்துமா!... பத்துமா, பதினொரு தோசை, பன்னிரண்டு இட்டிலி! இனிமேல் அந்தப் பேர் என் காதில் விழுந்ததோ....

வேணு: உங்களுக்கு அந்தப் பேர் பிடிக்கவில்லையென்றால் பெயரை மாற்றி வைத்துக்கொள்ளச் சொல்கிறேன்! உங்களுக்குப் பிடித்தமான பெயரைச் சொல்லுங்கள்....

நீலகண்டன் (ஆத்திரத்துடன் கையை ஓங்கி): டேய்! நான் உன் அப்பன்! காலேஜ் ஃப்ரெண்டு இல்லே! என்கிட்ட உன் இண்டலே எல்லாம் வைத்துக் கொள்ளாதே!...ஆமாம் சொல்லிட்டேன்!

(நீலா உள்ளிருந்து வருகிறாள்.)

நீலா: என்ன அப்பா! ஒரே ஹிரண்யன் 'மூடி'லே இருக்கிறீர்கள்? (வேணுவைப் பார்த்து) பிரதர் பிரஹலாதன்! என்ன விஷயம்?

நீலகண்டன்: ஹிரண்யன் 'மூட்' என்ன 'மூட்'! நான் இப்போ பத்து ஹிரண்யன்களாகவே இருக்கிறேன்.! இந்தப் பயல் என்னவெல்லாமோ பேத்துகிறான்.

நீலா: ஹரி, ஓம் நமோ...

நீலகண்டன்: ...காதலாய நமாங்களுன்.

வேணு: ஹரி ஓம் அப்பா ஆர்டருக்கு நம: என்று நான் சொல்லிண்டே கிழவனுகப் போகணும்கறார்! நான் ஒரு மேஜர்ங்கறதை அவர்...

நீலகண்டன்: மேஜர் என்னடா மேஜர்! பிரிகேடியர் ஜெனரலாகவே இரேன்! ஆனால் இந்த வீட்டுக் கௌரவத்தைப் பொறுத்த வரை நான் ஒரு டிபென்ஸ் மினிஸ்டர்! உன்னே 'டிஸ்மிஸ்' பண்ணிடுவேன்!

(பலதேவ் சிங் எட்டிப் பார்க்கிறார்.)



பலதேவ் சிங்: டிபென்ஸ் மினிஸ்டர் இந்த ஊருக்கு வரப் போகிறாரா புரொபஸர் சார்!

நீலா: வாங்கோ மிஸ்டர் சிங்!... அப்பா! மிஸ்டர் சிங் வந்திருக்கிறார்.

நீலகண்டன் மறு பக்கம் (திரும்பி): கமான் மிஸ்டர் பலதேவ் சிங்!... எந்த மினிஸ்டரும் வரவில்லே. நான்தான் தேவாலய மினிஸ்டர் மாதிரி இந்தத் தடிப் பயலுக்கு ஒரு 'சர்மன்'... உபதேசம் நடத்திக் கொண்

இருக்கிறேன்! இந்தக் காலத்திலே அறிவு வளர்ச்சியோடு போட்டி போட்டுக் கொண்டு இந்த அபத்தக் காதல் உணர்ச்சியும் ஓடி வருகிறது. முந்தினது பாதி வழியிலேயே நொண்டியாகி நின்று விடுகிறது. பிந்தியது அசுர வேகத்திலே ஓடுகிறது! என் பையன் இந்த இரண்டாவது குதிரை அபிமானி.

பலதேவ் சிங் (நெற்றியைத் தடவிக் கொண்டு): ஓஹோ! அப்படியானால் நான் கேட்க வந்த விஷயத்தைப் பற்றி இப்போது உங்களோடு பேச முடியாது....

நீலா: உங்களுக்கு ஆணி வேணுமா, ஸ்டூல் வேணுமா, சுத்தியல் வேணுமா?

பலதேவ் சிங்: இதுவும் ஒரு காதல் பிரச்னைன்னு வச்சுக்கோங்களேன்!... நீங்க இப்போது...

நீலகண்டன்: வாட்! வாட்!... என்ன ஆச்சரியம்! நம் பிராப்ளம்ஸ் எல்லாம் எப்படி 'காமனாக' அமைகிறது!... உங்களுக்கும் இந்தத் தடிப் பயல் மாதிரி ஊரிலே பிள்ளை இருக்கிறானா?...

பலதேவ் சிங்: நோ நோ! பையன் விவகாரமில்லே!... என் மைத்துனன்! பிஸினெஸ் விவகாரமாக சண்டிகாரிலிருந்து இங்கே அடிக்கடி வருவான்!... அவன் நேற்று என்னிடம் திடீரென்று வந்து கல்யாணம் பண்ணிக்கணும் என்றான்.

நீலகண்டன்: அடி சக்கை! காப்பி சாப்பிடணும்னு சொல்ற ஜோரிலே கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்றாங்க இந்தக் காலத்துப் பசங்க.

பலதேவ் சிங்: அந்தப் பயலுக்கு உறவிலே ஒரு பெண் காத்துக்கிட்டு இருக்கு. ஆனால் இவன் வேறு இடத்திலே...

நீலகண்டன்: உலகம் ஒரு பக்கத்திலே சுருங்கறது! ஒரு பக்கம் விரிகிறது!...இந்த உறவு, சொந்தம் அப்படி இப்படிங்கற சின்ன வட்டத்துக்குள்ளே இனிமே எப்படி இருக்க முடியும்?... உங்க மனசுக்குப் பிடித்திருக்கிறதா அந்த இடம்?

பலதேவ் சிங்: எனக்குப் பிடித்திருக்கிறது!

நீலகண்டன்: அதற்கு அப்புறம் என்ன அப்பீல் இருக்கிறது? சும்மா முடிச்சுப் போடுங்கோ!... [கன்யாலால் வருகிறார்]

கன்யாலால்: முடிச்சுப் போட்டுட்டுத் தான் அவிழ்க்க முடியாமே தவிக்கிறேன். இப்போ ஓர் அச்சாபீஸ் தேடிப் போகணும்! நீலகண்டன்ஜீ! உங்களுக்குத் தெரிந்த பிரஸ் ஏதாவது....?

நீலகண்டன்: முடிச்சை அவிழ்க்க அச்சாபீஸ் எதற்கு? அரை பிளேடு போதாது?

கன்யாலால்: இனிமே அவிழ்க்கிறது எப்படி? படுமுடிச்சாக் கிடக்க வேண்டியது தான்! கல்யாணப் பத்திரிகையை அடிச்சட வேண்டியதுதான்!

நீலா: கன்யாலால்ஜீ! கல்யாணம் யாருக்கு?

கன்யாலால்: என் தம்பிக்கு! எங்க ஊரிலே!... நாளைக்கே கல்யாண இன்விடேஷன் போஸ்ட் ஆகணும்!...

நீலகண்டன்: ஏன் அவ்வளவு அவசரம்?... ஹனிமூனுக்கு உங்க தம்பி காஷ்மீர் ஹோட்டலிலே இடம் ரிஜிஸ்டர் பண்ணிட்டானா?

கன்யாலால்ஜீ: படா அவசரம் நீலகண்டன்ஜீ! இல்லாதபோனா பையன் கல்யாண ரிஜிஸ்டிரார் ஆபீஸிலேயே இடம் ரிஜிஸ்டர் பண்ணிடுவான் போலிருக்கு! (குரலைத் தணித்து) நீலகண்டன்ஜீ!...லவ் மாரியேஜ்! வயிற்றெரிச்சல்! அதை மறைக்க இப்போ நான் ஒப்பனா கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்!...

நீலகண்டன்: அட்ராஷியஸ்! உமக்குத் தைரியமில்லே!...பயந்தாங்கொள்ளி!

கன்யாலால்: எப்படி எனக்குத் தைரியம் வரும்! அந்தக் காலத்திலே என் மாரியேஜே அப்படித்தானே!... ஒரு அர்ஜண்ட் பிரஸ் இருந்தாச் சொல்லுங்க! நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன். (போகிறார்)

பலதேவ் சிங்: அந்த அச்சாபீஸை எனக்கும் அறிமுகப்படுத்தி வையுங்க. (போகிறார்)

நீலா: எங்கேயாவது அணுகுண்டுகள் பரிசோதனையில் கோளாறு நடந்து கல்யாண ரேடியேஷன் — காதல் கல்யாணக் கதிரியக்கம் பரவிவிட்டதோ?

நீலகண்டன்: மண்ணாங்கட்டி!... எல்லாம் உங்க அண்ணன் ரேடியேஷன்!

நீலா: ஏனப்பா! ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ணறீங்க! ஆனால்...

வேணு: கேளு அப்படி நீலா!

நீலா: நான் அந்தப் பத்மாவைப் பார்த்திருக்கிறேன். அப்பா! ரொம்ப நல்ல பெண்! அவள் அப்பாகூட ஏஷியன் பிளாஸ்டிக்ஸ் மானேஜிங் டைரக்டர்!...மகாதேவன்னு..

நீலகண்டன்: நான்சென்ஸ்! எனக்கு ஒரு ரெக்கமென்டேஷனும் அவசியமில்லே!.... இடியட்! மடையன்... (பார்வதி வருகிறாள்)

பார்வதி: உள்ளே சமையலுக்குத் தாளித்துக் கொட்டியாயிற்று! இங்கே எதற்கு மறுபடியும்...

நீலகண்டன்: புத்தியில்லாத பயல்! மூளை வேண்டாம்!...ஏண்டா வேணு!...பிளாஸ்டிக்ஸ் மகாதேவன் பெண் என்று ஒரு வார்த்தை சொல்லிட்டுன்னா நீ உன் பேத்தலை ஆரம்பிச்சிருக்கணும்!...

நீலா: ஏனப்பா! அவருக்கும் உங்களுக்கும் ஆகாதா?

நீலகண்டன்: நான்சென்ஸ்! அவன் என் சம்பந்தியா வரக் கொடுத்து வைக்கணுமே! டேய்! அடுத்த வாரம் முறைப்படி பெண் பார்க்கப் போகிறோம்!... இதை ஒரு காதல் கல்யாணமா 'ரெகுலரைஸ்' பண்ணிடறேன்.

பார்வதி: மாப்பிள்ளைக்கு பிளாஸ்டிக்கிலேயே சூட் தைத்துக் கொடுக்கச் சொல்லுங்கள்! (நீலகண்டன் முறைக்கிறார்)

நீலா: இப்போ அச்சாபீஸிலே மூணு கல்யாணக் கடுதாசு அச்சாகப் போறதுன்னு சொல்லுங்கோ! (நீலகண்டன் போகிறார்)

பார்வதி: என்னடி ரகளை!... உங்க அப்பா நரசிம்மாவதாரம் எடுத்தாரா?

நீலா: ஆமா! காதலாகரனுக்குச் சாப விமோசனம் கொடுத்துக் கல்யாண மோட்சத்துக்கு அனுப்பப் போகிறார்!

[வேணு ரேடியோவைத் திருப்புகிறான்]

வானொலிக் குரல்: காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாருமில்லை!...

வேணு (ரேடியோவை நிறுத்தி): ஆமா, ஆமா! எப்போ கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டாயிற்றோ அப்புறம் காதலுக்கு ஏது நேரம்?

[காட்சி முடிவு]

எத்தனை அன்பு என் மீது?

கூத்தன்



அது என்னமோ தெரியவில்லை, நாளாக, ஆக, என் உறவினர்கள் என் மீது காட்டும் அன்பு அதிகரித்துக்கொண்டே போகிறதெனக் காண்கிறேன். நான் அவர்களோடு தங்க வேண்டும் என்பது விஷயமாக, அவர்கள் விடுக்கும் அழைப்புக்களைப் பார்க்கும்போது, அவர்கள் அன்பைச் சம்பாதிக்கும் நான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்பதை எண்ணி மகிழ்கிறேன். அவர்கள் கேட்டுக் கொள்வது போல், நான் ஒவ்வொருவரிடமும் ஒரு வாரம் தங்க வேண்டுமானுல் வருடம் முழுதும் மாறி, மாறி, உறவினர்கள் வீட்டிலேயே தங்கிவிட முடியும். இந்த உறவினர்கள், என் மீது கொண்டுள்ள அன்பைப் பார்க்கும்போது என் வேலைக்கு முழுக்குப்போட்டு விட்டு, உறவினர்களோடு தங்குவதையே என் ஒரு வேலையாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று தோன்றுகிறது.

...... ஏன் முகத்தைச் சுளுக்குகிறீர்கள்? நான் சொல்லுவது உங்களுக்கு உண்மையாகப் படவில்லையா! உறவினர்களாவது, அழைப்பதாவது என்று சந்தேகப்படுகிறீர்களா!

ஏன் உங்களுக்கு இத்தனை சந்தேகம்? இன்று நான்கு உறவினர்களிடமிருந்து வந்த கடிதங்களைக் கீழே கொடுத்திருக்கிறேன். நீங்களே படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்களேன்!



* * *

டில்லியில் உள்ள என் பெண் அனு எழுதியது:

அப்பா,

போன வாரம் நானும் உங்கள் மாப்பிள்ளையும் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தபோது அங்கு உங்கள் சித்தப்பா வீட்டில் தங்கியிருந்தோம். தங்களைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டன என்று சித்தப்பா சொன்னுர். ஏன், நீங்கள் ஒரு நடை கல்கத்தாவுக்குப் போய்ச் சித்தப்பாவைப் பார்த்து விட்டு வரக் கூடாது! உங்களைப் பார்த்தால் அவர் மிகவும் சந்தோஷப்படுவார் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகவே, நீங்கள் உடனே கட்டாயம் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் பிரிய
முள்ள, அனு

கல்கத்தாவில் உள்ள என் சித்தப்பா எழுதியது:

அம்பிக்கு,

அநேக ஆசிர்வாதம். போன வாரம் இல்லியிலிருந்து உன் பெண்ணும் மாப்பிள்ளையும் கல்கத்தா வந்திருந்தார்கள். கலியாணத்துக்குப் பிறகு நீ ஒரு நடைகூடத் தில்லியில் போய் அவர்களைப் பார்க்கவில்லை என்று அனு என்னிடம் குறைப்பட்டாள். அவர்கள் எப்படி இருக்கிருர்கள், எப்படிக் குடித்தனம் பண்ணுகிருர்கள் என்று ஒரு நடையாவது நீ தில்லிக்குப் போய்ப் பார்க்க வேண்டாமா! நீ செய்கிற காரியம் சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, நீ உடனே தில்லிக்குப் புறப்பட்டுச் சென்று அங்கு ஒரு வாரமாவது இருந்துவிட்டு வருவாய் என்று நம்புகிறேன். பேசாமல் இருக்காதே. உடனே தில்லி புறப்படு.


உன் பிரியமுள்ள,
சித்தப்பா



பம்பாயிலிருந்து என் டாக்டர் மணி எழுதியது:

என்ன டாக்டர் ஸார்!

போன வாரம் நான் ஹைதராபாத்துக்கு என் ஆபீஸ் காரியமாகப் போயிருந்த விஷயம் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். நம் டாக்டர் மூர்த்தியின் வீட்டில்தான் நான் தங்கியிருந்தேன். மூர்த்தி தங்களைப் பற்றி மிகவும் விசாரித்தார். தாங்கள் ஹைதராபாத் பக்கமே வருவதில்லை என்று மிகவும் குறைப்பட்டுக் கொண்டார். என்னைக் கேட்டால்,



நீங்கள் உடனே ஹைதராபாத்துக்குப் புறப்பட்டுச் சென்று ஒரு வாரம் மூர்த்தியோடு இருந்துவிட்டு வருவது நல்லது என்று கூறுவேன்.

தங்கள், மணி

ஹைதராபாத்திலிருந்து என் ஷட்டகர் மூர்த்தி எழுதியது :

என்ன ஸார் ! பம்பாயிலிருந்து இங்கு வந்த ஷட்டகர் மணி உங்கள் மீது ஒரே புகார் கூறுகிறாரே! நீங்கள் பம்பாய்க்குப் போவதே இல்லையாமே! ஏன் இப்படி இருக்கிறீர்கள்? நீங்களே சொல்லுங்கள், ஷட்டகரை மறப்பது நியாயமாகுமா! ஒரே குடும்பத்தில் பெண் எடுத்த நாம் ஒருவரையொருவர் மறக்கலாமா! ஆகவே, உடனேயே பம்பாய்க்குச் சென்று ஷட்டகர் மணியுடன் இரண்டு வாரங்களாவது தங்கி, அவர் குறையைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள், மூர்த்தி

நீங்களே சொல்லுங்கள், தினம் இம்மாதிரி எனக்கு உறவினர்களிடமிருந்து கடிதங்கள் வந்தால், நான் அவர்கள் அன்பை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்!

ஆனால் 'பம்பாய்க்குப் போ' என்று கடிதம் வரும், அதே சமயம் 'கல்கத்தாவுக்குப் போ, என்று இன்னொரு கடிதம் வருகிறது. 'டில்லிக்குப் போ' என்று கடிதம் வரும்; அதே சமயம் 'ஹைதராபாத்துக்குப் போ' என்று இன்னொரு கடிதம் வருகிறது. இதனால் ஒருவர் சொன்னபடி கேட்டு, இன்னொருவர் சொற்படி கேட்காமல் இருந்தால் அவர்கள் மனம் புண்ணாகும் என்றுதான் நான் எந்த இடத்துக்கும் போவதில்லை.

சொந்தப் பெண்ணைத்தான் இருக்கட்டுமே. அவள் திரும்பத் திரும்ப எழுதுகிறாள் என்பதற்காக ஓர் இடத்துக்கு ஓட முடியுமா, என்ன? ''கல்கத்தாவுக்குப் போங்கள்'' என்று எழுதியிருந்த அதே அனுபோன வாரம், 'பூனாவுக்குப் போங்கள்' என்று எழுதியிருந்தாள். அதற்கும் முந்தைய வாரம் ''நாகப்பூருக்குப் போங்கள்'' என்று எழுதியிருந்தாள். பெண் வருந்தி, வருந்தி எழுதுகிறாள் என்பதற்காக நான் ஓடிப் போய்விட முடியுமா !

அதனால்தான் நான் எங்கும் போகாமல் சென்னையிலேயே இருக்கிறேன். ஆனால் என் உறவினர்கள் என் மீது இத்தனை அன்பாக இருக்கையில், நான் அவர்கள் சொன்னபடி கேட்காமல் இருக்கிறேனே என்றுதான் வருத்தமாக இருக்கிறது !

பெர்க்லி - கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்

அமரர் கல்கி அவர்கள் சரித்திரக் கதைகள், சமூகக் கதைகள், நகைச்சுவைக் கதைகள் ஆகியவற்றை எழுதுவதற்கு இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியவர். அன்னாரது நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அமெரிக்காவில் இயங்கும் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தச் சிறுகதைப் போட்டியினை நடத்துகிறது கல்கி ஸ்தாபனம்.

சமூகச் சிறுகதைகள், சரித்திரச் சிறுகதைகள், ஹாஸ்யச் சிறுகதைகள் என மூன்று வகையான கதைகளை எழுத்தாள அன்பர்களிடமிருந்து வரவேற்கிறோம்.

சமூகச் சிறுகதைகளில் முதல் பரிசு ரூ. 1000; இரண்டாவது பரிசு ரூ. 500; மூன்றாவது பரிசு ரூ. 250.

இதேபோல் சரித்திரச் சிறுகதைகளுக்கும் ஹாஸ்யச் சிறுகதைகளுக்கும் முதல் இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் தனித் தனியே உண்டு. ஆக மொத்தம் ரூ. 5250 பரிசுத் தொகையாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கல்கியில் ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்குள் அடங்குகிற மாதிரி சிறுகதைகள் அமைந்திருப்பது நலம்.

பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவனவற்றுக்கு வழக்கமான சன்மானம் உண்டு.

சிறுகதைகளின் உரிமைகள் அனைத்தும் சிறுகதைகளின் ஆசிரியர்களுக்கே உரியன. முதன் முதலாகக் கல்கியில் வெளியிடும் உரிமை ஒன்று மட்டுமே கல்கி ஸ்தாபனத்துக்கு உரியது.

இலக்கியத் துறையில் பிரபலமானவர்கள் பஞ்சாயத்தார்களாக இருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தப் போட்டி சம்பந்தமான எவ்விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதுமான தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும்.

போட்டி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

மொழிபெயர்ப்போ தழுவலோ அல்ல என்பதைக் குறிப்பிட்டு ஆசிரியர், கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்குக் கதைகளை அனுப்ப வேண்டும்.

உறையின் மீது 'பெர்க்லி—கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்' என்றும், ஹாஸ்யச் சிறுகதை, சமூகச் சிறுகதை, அல்லது சரித்திரச் சிறுகதை என்றும் குறிப்பிடுதல் அவசியம். **முடிவு தேதி ஜூலை 15, 1968.**

எழுத்தாள அன்பர்களின் முழு ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.




Castorol

வட்டமேஜை

- பூஜைக்குரிய படம்
- ரயில்வே போர்டின் திடீர் முடிவு
- உணவு உற்பத்திக்குக் கதிரியக்கம்
- அவர் அல்ல, இவர்!

நமஸ்காரம். ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர பூஜை உருவப்படம் பெற்றோம். மட்டற்ற மகிழ்ச்சி. தற்போது அது எங்களது பூஜை அறையை அலங்கரிக்கிறது. திரு வினு அவர்களுக்கு எங்களது உளம் கனிந்த பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும்.

மண. சுப. கைலாசம்
மண. சுப. இல. நாராயணன்

ஏற்கனவே ஒரு முறை வெளியிடப்பெற்ற துணுக்கையோ, கவிதை — கதை — கட்டுரையையோ எக்காரணம் கொண்டாலும் மறுபடியும் வெளியிடுவதை நான் விரும்பியதில்லை. அந்நிலையில் ஏற்கனவே பல மாதங்கள் தொடர்ந்து கல்கியில் வெளி வந்ததும், தமிழ், ஆங்கிலம் மற்றும் வேறு சில மொழிகளிலும் புத்தக உருவில் கிடைக்கக் கூடியதுமான 'வியாசர் விருந்'தை மறுபடியும் கல்கியில் தொடராக வெளியிடப் போவதாகத் தாங்கள் அறிவித்ததும் நான் சிறிது அதிருப்தியடைந்தேன்.

ஆனால், மகாபாரதத்தைப் படிக்கப் படிக்க விரைவிலேயே என் எண்ணம் எவ்வளவு தவறானது எனப் புரிந்து கொண்டேன்.

நமது முன்னோர்கள் கூறிச் சென்ற ஆழ்ந்த அறிவுரைகளை எந்த வகையிலாவது தமிழ் மக்கள் படித்துப் பயனடைய வேண்டும் என்ற கருத்தோடு 'வியாசர் விருந்'தை மறுபடியும் வெளியிடுமாறு அறிவுரை வழங்கிய தனிப்பெரும் தமிழ்த்தலைவரின் நல்லெண்ணத்தை நன்றியோடு வரவேற்கிறேன்.

திருவனந்தபுரம் ஹேமா ஆனந்ததீர்த்தன்

இதுவரை கலைக் குழுக்களுக்கு ரயில்வே போர்டு வழங்கியிருந்த பாதிக் கட்டணச் சலுகையை எதிர்பாராதவிதமாக, கடந்த 1—2—68 முதல் ரத்து செய்திருக்கும் உத்தரவு மிகவும் வருந்தத்தக்கது!

ஐந்து கலைஞர்களும் அதற்கு அதிகமாகவும் கொண்டுள்ள தொழிற் கலைக் குழுக்கள் தங்கள் கலை நிகழ்ச்சிகளுக்காகப் பயணம் செய்யும் தூரம், இருநூறு மைல்களும் அதற்கு அதிகமாகவும் இருந்தால், அவர்களுக்குப் பாதி ரயில்வே கட்டணச் சலுகையைத் தரலாம் என்றதோர் உத்தரவை அன்றைய ரயில்வே துணை அமைச்சராக இருந்த திரு எஸ். வி. ராமசாமி அவர்களின் உதவியால் ரயில்வே போர்டார் கலைஞர்களுக்கு வழங்கினார்கள்.

கலைக் குழுக்கள் ஆற்றிய கலைப் பணியால் இந்த நாடு பெற்ற பண்பாட்டின் பலன் எத்துணை பெரிது என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு ஒப்பிட்டால், கடந்த நான்கு ஆண்டு காலமாக இந்த ரயில்வேச் சலுகையால் கலைக் குழுக்கள் பெற்ற பலன் சொற்பமானதுதான்.

ரயில்வே போர்டு திடீர் என்று போட்டிருக்கும் இந்த உத்தரவு ஏழைக் கலைஞர்களின் மேல், உண்மையான கலைக் குழுக்களின் தலை மேல் போடப்பட்ட பலமான இடியாக முடிந்துவிடும்.

கலைக் குழுக்களுக்கு, இந்தப் பாதி ரயில் கட்டணச் சலுகை உத்தரவை, உடனே மீண்டும் வழங்க வேண்டும் என்று ஏழைக் கலைஞர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை—14 எஸ். டி. சுந்தரம்,
எம். எல். ஸி.

திரு குஞ்சிபாதம், கல்கி 28 — 1 — 68 இதழில் வட்டமேஜைப் பகுதியில் கதிரியக்கச் சடுதி மாற்றத்தினால் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது பற்றிய ஆராய்ச்சிகள் மென்மேலும் வெற்றிபெற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழகத்தில் கிச்சடி சம்பா என அழைக்கப்படும் GEB 24 இன விதைகளை கதிரியக்கச் சடுதி மாற்றத்துக்குப் பின் (TR - I Mutant) என்னும் இன விதைகளாக டிராம்பேயில் உற்பத்தி செய்யப்பட்டன. சென்ற ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல இடங்களில் இவ்விதைகள் பரீட்சார்த்தமாகத் தனி நபர்களால் பயிர் செய்யப்பட்டது. அதிகக் கதிர்களுடன் விளைச்சல் தருவதுடன் இவற்றின் பயிர் விளையும் காலமும், வழக்கமான 150 நாட்களுக்குப் பதிலாக 133 நாட்களே ஆகின்றன.

இவ்விதைகளை (TR - I Mutant) தங்கள் நிலங்களில் பயிரிட விரும்பும் நேயர்கள், சென்னை அணு மின் திட்டக் காரியாலயம், சாஸ்திரி பவன், 35 ஹாடோஸ் சாலை, சென்னை—6 என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இவ்விதைகள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதால் தற்சமயம் இதைப் பயிர் செய்யத் தீவிரமாக ஊக்கம் கொண்டுள்ள விவசாயிகளுக்கு மட்டும் அளிப்பது சாத்தியமாகும்.

சென்னை - 6 கோ. இராமமூர்த்தி
விஞ்ஞான அதிகாரி, சென்னை
அணுமின் திட்டக் காரியாலயம்

''பூமாலை பொட்டும்'' விமரிசனத்தில், ''விஜய நிர்மலாவை இவ்வளவு ஆபாசமாக நடனமாடச் செய்திருக்க வேண்டாம்'' என்று எழுதியுள்ளீர்கள். இதில் நடனமாடுவது விஜய நிர்மலா அல்ல. ''விஜய லலிதா''.

சென்னை — 18
10—2—68 என். ஆல்பிரட் மநுவேல்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

தலைவலியா?



அவேதன்




சாப்பிட்டு உடனடியாக நிவாரணம் பெறுங்கள்

SQUIBB

SARABHAI CHEMICALS

® இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பொரேடட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.



அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர சாதாரண வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது.

Shilpi SC 51A/67 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி